கொண்டிருந்தபோது, திருவள்ளுவர் அவரை அழைத்தார். கயிற்றை அப்படியே விட்டுவிட்டு அம்மையார் ஓடிவந்தார். கயிறும் வாளியும் கிணற்றுக்குள் விழாமல் அப்படியே தொங்கிக் கொண்டிருந்தன.'

'திருவள்ளுவர் உணவருந்த அமர்ந்தார். அது ஆறிப்போன பழையசோறு; 'சோறு சுடுகிறது' என்றார் வள்ளுவர். 'பழையசோறு சுடுமா?' என்று கேட்காமல் அம்மையார் உடனே விசிறி எடுத்து வந்து வீசிப் பழைய சோற்றின் சூட்டைத் தணித்தார்.'

'நண்பகல் நேரத்தில் கீழே விழுந்த ஒரு பொருளை எடுப்பதற்கு 'விளக்கை எடுத்துவா' என்றார் வள்ளுவர் 'பகல் நேரத்தில் விளக்கெதற்கு?' என்று கேட்காமல் அவர் மனைவி விளக்கைக் கொண்டுவந்து கொடுத்தார்.

இவ்வளவு செய்திகளும் இருண்ட கண்டம் என்று அழைக்கப்பட்ட ஆப்பிரிக்க கண்டத்தின் காடுகளில் தொழுநோயாளிகளுக்கு மருத்துவம் பார்த்துவிட்டு ஓய்வு நேரத்தில் பரண்மேல் அமர்ந்து படித்துக்கொண்டிருந்த ஆல்பர்ட் சுவைட்சருக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றன. ஆனால், சுவைட்சர் இக்கதைகளைக் கட்டுக் கதைகள்[6] (புனைக் கதைகள்) என்று கூறிவிட்டு மேலே செல்கிறார்.

**தந்தை பெரியார் பார்வை:**

திருவள்ளுவரின் பெற்றோர் ஆதி – பகவன் என்று கட்டிவிடப்பட்ட கதையைப் பற்றித் தந்தை பெரியார் கூறுவது வருமாறு:

"அந்தக் கதை அறிவுக்கும் நடப்புக்கும் பொருந்தாததான – ஆபாசமான ஒரு கதையாகும். அதாவது வள்ளுவரை மட்டப்படுத்த வேண்டும் என்பதற்காகவே புகுத்தப்பட்ட ஒரு கதையாகும். வள்ளுவரைப் பறைச்சியின் வயிற்றில் பார்ப்பானுக்குப் பிறந்தார் என்று புகுத்துவதற்காகவே எழுதப்பட்டதாகும். அந்தக் கதை இயற்கைக்கு மாறுபட்டது. வள்ளுவர் உடன்பிறப்பினரின் மற்ற கதைகள் புராணங்களைப் பார்த்தால், எல்லாமே சுத்தப்புளுகு என்று அறிய முடியும். தமிழர் எதிரிகளும் அவர்களது அடிமைகளும் காட்டுமிராண்டித்தனமாகக் கற்பனை செய்துவிட்டார்கள்."[7]

"குறள் பாடிய வள்ளுவரையும் எங்கோ ஒரு சத்திரத்தில் நள்ளிரவில் ஒரு புலைச்சிக்கும் ஒரு பார்ப்பானுக்கும் நேரிட்ட கள்ளப் புணர்ச்சியில் தோன்றிய பிள்ளையாக்கி அதன்மூலம் அவரை ஒரு சண்டாளராக்கி அவருடைய வாக்குக்கு மதிப்பில்லாமல் போகும்படி செய்து விட்டார்கள். ஆரியத்தைக் கண்டித்தார் என்பதற்காகவே அவரைச் சண்டாளராக்கி விட்டார்கள், இச்சதிகார ஆரியர்கள்.[8]

"இவற்றுள் மற்றொரு விசேடமென்ன என்றால் மேல்கண்ட ஆதிக்கும் பகவனுக்கும் புணர்ச்சி முடிந்ததும் பிள்ளையைப் பெற்றுப் போட்டு விட்டுப் போய்விட்டதாகவும் கதை கூறப்பட்டிருக்கிறது.[9]

'வள்ளுவரைச் சண்டாளராக்கி விட்டார்கள் – இச்சதிகார ஆரியர்கள்' என்னும் தொடர் பெரியாரின் கடுஞ்சினத்தை வெளிப்படுத்துகிறது. இதற்குக் காரணம் என்ன? சண்டாளர் என்போர் யார்? 'உயர்குலத்தில் (பார்ப்பனர்) பிறந்த ஒருவனுக்கும் தாழ்குலத்தில் (சூத்திரர் – புலையர்) பிறந்த ஒருத்திக்கும் அல்லது தாழ்குலத்தில் பிறந்த ஒருவனுக்கும் உயர்குலப் பெண்ணுக்கும் பிறக்கும் ஒருவர் 'மனிதருள் தாழ்ந்த சண்டாளர்' என்று மனுதருமம் கூறுகிறது.[10] இதன்மூலம் திருவள்ளுவரை எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவு இழிவுபடுத்தியிருக்கிறார்கள் என்று பெரியார் கருதுகிறார்.

'மூன்றாவது சங்கத்தைப் பற்றி கால்டுவெல் பாதிரியார் எழுதுகிறபோது, மூன்றாம் சங்கத்தில் வள்ளுவர் குறள் அரங்கேற்றப்பட்டதால், அவர் புலையர், கீழ்ஜாதி என்ற காரணத்திற்காக அந்தச் சங்கத்தையே பார்ப்பனர்கள் அழித்துவிட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்'[11] என்று கால்டுவெல் கருத்தை எடுத்துக்காட்டுகிறார் பெரியார்.

வாசுகி அம்மையாரைத் திருவள்ளுவர் தம் மனைவியாக ஏற்றுக் கொள்ளுமுன் ஆற்றுமணலைக் கொடுத்துச் சாதம் சமைக்கச் சொன்னாராம். அதாவது வாசுகி கற்புள்ளவரா அல்லவா என்று பரீட்சிக்க, அவ்வம்மையார் அந்தப்படியே மணலைச் சமைத்துக் கொடுத்துத் திருவள்ளுவருக்குக் கற்பின் திறத்தைக் காட்டினாராம்,[12] பகல் நேரத்தில் விளக்கு எதற்கு என்று கேட்டால் பதிவிரதாதன்மைக்கும் கற்புக்கும் பங்கம் வந்துவிடும் என்று உடனே விளக்கைப் பற்ற வைத்துக்கொண்டு வந்து கொடுத்தாராம்.

கணவன் என்ன சொல்கிறானோ அதைக் கேள்வி கேட்காமல் அப்படியே நிறைவேற்ற வேண்டும்; அவள்தான் சிறந்த கற்பரசி என்ற பெண்ணடிமைக் கோட்பாட்டின் மீது கட்டப்பட்ட கதைகள் இவை என்பதை தந்தை பெரியார் 90 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எடுத்துரைக்கிறார் என்பதை நோக்குங்கால் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் வியப்பளிப்பதாக இருக்கின்றது.

**திருவள்ளுவ மாலை:**

திருக்குறள் என்பது திருவள்ளுவரின் சொந்தப் படைப்பல்ல, வடமொழி வேதங்களின் கருத்துகளையே திருவள்ளுவர் திருக்குறளாகச் செய்தார் என்ற கருத்தைத் திருவள்ளுவ மாலையில் உள்ள பல பாடல்கள் வலியுறுத்துகின்றன.

**‘நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா**
**தான் மறைந்து வள்ளுவனாய்த்தானுரை (நான்முகத்தோன்)த்த நூன்முறை.....’**
என்றும் (4)
**வள்ளுவர் வாய்மொழி — வேதப்பொருளாய் மிக விளங்கி** என்றும் (24)

**‘வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார் ஓத’** என்றும், (37)
**‘வேதப்பொருளை விரகால் விரித்துலகோர் ஓதத் தமிழால் உரை செய்தார்’** (42)

என்றும் வருகின்ற திருவள்ளுவமாலைப் பாடல்கள் திருவள்ளுவர் வேதங்களைப் பார்த்தே திருக்குறளை இயற்றினார் என்ற கருத்தை எடுத்து மொழிகின்றன. திருவள்ளுவமாலைப் பாடல்களில் பல வள்ளுவரின் கருத்தை எதிரொலிப்பனவாக இல்லை. “பரிமேலழகரின் உரை திருக்குறளின் பெருமையை எங்ஙனம் சிறுமைப்படுத்துகிறதோ அங்ஙனமே திருவள்ளுவமாலையும்சிறுமைப்படுத்துகிறது என்னும் புலவர் குழந்தையின் கருத்து நோக்கத்தக்கதாகும்.[13]

திருக்குறள் வடமொழியிலுள்ள ‘சாஸ்திரங்களின் சாரம்’[14] என்று இரா. நாகசாமி என்பவர் ஆங்கிலத்தில் ஒரு புத்தகமே எழுதி அண்மையில் வெளியிட்டுள்ளார். இவர் ஒரு பார்ப்பனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொல்லியல்துறை இயக்குநராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர்; இவருடைய தொல்லியல் ஆய்வுகள் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருக்கும்!

திருக்குறள் அரங்கேற்ற நிகழ்விற்குத் தலைமை தாங்கும் தகுதியுடையவர்யா யார் என்னும் அய்யப்பாடு எழுந்தபோது வானொலி (அசரீரி) வழியாக, ‘மதுரையில் உள்ள உருத்திரசன்மர் எனும் பெயருடைய ஓர் ஊமைப் பிள்ளையே தலைமை தாங்கத் தகுதியுடையவர்’ என்னும் செய்திவந்தது என்னும் கருத்துடையது திருவள்ளுவர் மாலையின் முதற்பாடல்.

தமிழரின் நாகரிகச் சிறப்பைப் புலப்படுத்தும் திருக்குறளைச் சீர்தூக்கிப் பார்க்கும் அரங்கேற்றத்திற்குவாய் பேசத் தெரியாத ஓர் ஊமைப் பிள்ளையா தலைமை தாங்க வேண்டும்? ஒரு நூல் அரங்கேற்றத்திற்குத் தலைமை தாங்கும் தகுதியுடைய ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அறிவுகூட இல்லாதவர்களா சங்கமிருந்து தமிழாய்ந்தனர்?15 என்னும் புலவர் குழந்தையின் கேள்விபொருண்மை நிறைந்ததாகும்.

‘தீக்குறளை சென்றோதோம்’ என்னும் பாவைத் தொடருக்குத் ‘தீயதிருக்குறளை ஓதமாட்டோம்’ என்று காஞ்சி சங்கராச்சாரி

பொருள் சொன்னதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அண்மைக்காலம் வரையில் வள்ளுவருக்குப் பூணூல் அணிவித்துப் பட்டை போட்டிருந்தார்கள். அறிஞர் அண்ணா முதல் அமைச்சரான பிறகுதான் அவருடைய நண்பரான ஓவியர் வேணுகோபால் அவர்கள் வரைந்து கொடுத்த, பூணூல் இல்லாத இப்போதுள்ள வள்ளுவர் படம் தமிழ்நாடு அரசின் படமாக ஏற்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. இன்றும் வள்ளுவருக்குப் பல வண்ணங்களைப் பூசி அவரை இழிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**மக்கள் கைகளில் திருக்குறள்:**

ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளாக மக்களின் பார்வையிலிருந்து திருக்குறள் மறைக்கப்பட்டுக் கிடந்தது. மண்ணுக்குள் கிடந்த மாமணியாக விளங்கிய திருக்குறளை தந்தை பெரியார் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார்.

‘சித்திரபுத்திரன்’ என்னும் புனைப்பெயரில் ‘குடிஅரசு’ இதழ்களில் ‘குறளும் கற்பும்’ (08.01.1928) என்ற தலைப்பிலும் ‘வள்ளுவரும் கற்பும்’ (12.02.1928) என்ற தலைப்பிலும் பெரியார் ‘கற்பு’ என்பது பற்றியும் ‘தற்கொண்டான்’ என்பதைப் பற்றியும் ‘கணவனைத் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை’ என்பதைப் பற்றியும் வள்ளுவர் கருத்துகளோடு தமது கருத்து மாறுபட்டிருப்பதைப் பற்றி ஆராய்கின்றார். இந்த இடத்தில் நமது திருவள்ளுவரின் நிலைமை எனக்குச் சற்று மயக்கத்தைத் தருகின்றது என்று குறிப்பிடுகிறார் பெரியார். ‘நமது திருவள்ளுவர்’ என்னும் சொல்லாட்சியைப் பெரியார் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

‘ஆரியப் பண்பாடுகளுக்குத் திராவிட நாடு ஆட்பட்டிருந்த சமயத்தில் திராவிடர்களை அதனின்று விடுவிக்க, திராவிடப் பெரியார் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட நூல்தான் திருக்குறள் ஆகும்’[16] என்னும் பெரியார் திருவள்ளுவரை இழிவுபடுத்த நினைத்த பார்ப்பனரின் ஒழுக்கம் எத்தகையது என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

“வள்ளுவரின் தாயை ஒரு விபசாரியாகக் கற்பனை செய்துவிட்டார்கள். வள்ளுவர் பிறப்பைப் பற்றி எழுதும்போது பறைச்சிக்கும் பார்ப்பனனுக்கும் வள்ளுவர் பிறந்தார் என்று எழுதுகிறான். இதில் புத்திசாலித்தனம் என்னவென்றால், குறளைப் போன்ற நீதிநெறிகளை, மக்களின் உயர்ஒழுக்கத்திற்கு வேண்டிய பண்புகளைப் போதிக்கத்தக்க தகுதியும் அறிவும் வள்ளுவருக்கு வந்ததற்குக் காரணமே அவர் பார்ப்பனர்க்குப் பிறந்ததால்தான் ஆகும் என்ற கருத்தில் இந்தக் கதையை எழுதியிருக்கிறார்கள். இதன்படி பறைச்சியுடன் பார்ப்பான் கூடினான் என்பது பார்ப்பனர்களுக்குத் தர்மப்படி எவ்வளவு ………….. அக்காலத்தில் அறிவாளிப் பார்ப்பான் எவ்வளவு அயோக்கியத்தனமாக நடந்திருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இந்தப்படியாக முதலிலெடுத்தவுடனேயே குறளையும் அதன் ஆசிரியரையும் இழிவு படுத்திவிட்டார்கள்”[17]

‘திருவள்ளுவரின் கொள்கைகளையும் அவருடைய பாட்டின் அருஞ்சுவையையும் அவற்றால் திராவிடர் பெற்றிருக்க வேண்டியவைகளையும் கம்பனது இராமாயணம் அடியோடு கெடுத்துவிட்டது; பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியான கம்பனால் இந்நாட்டில் நிலவியிருந்த திராவிடக் கலாச்சாரமே பாழாக்கப்பட்டுப் போய்விட்டது’[18] என்றும் பெரியார் கருதுகிறார். திருக்குறளை மறைப்பதற்குக் கம்பனும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

20.01.1928 “குடிஅரசு” இதழில் ‘வள்ளுவரைப் பற்றியும் வாசுகியைப் பற்றியும் கூறப்படுகின்ற கதைகளை எடுத்துக்காட்டி, இவை பெண்ணடிமையை வலியுறுத்தும் கதைகள் என்றும், திருவள்ளுவரை இழிவுபடுத்தும் கதைகள் என்றும் பெரியார் தெளிவுபடுத்துகிறார். 1935 செப்டம்பர் திங்கள் ‘பகுத்தறிவு’ இதழில் ‘இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்….’ என்னும் குறளை எடுத்துக்காட்டித் திருவள்ளுவர் நாஸ்திகர்’

என்கிறார். 'பிச்சையெடுத்து வாழும்படியாக மக்களைக் கடவுள் படைத்திருந்தால் கடவுள் ஒழிய வேண்டும்' என்று வள்ளுவர் சொல்கிறார். தரித்திரத்தையும் ஏழ்மையையும் பிச்சை எடுக்கும் தன்மையையும் ஒழிக்க வேண்டுமானால் கண்டிப்பாகக் கடவுள் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று சமதர்மவாதிகளும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதால் திருவள்ளுவர் நாஸ்திகராகும்போது சமதர்மவாதிகள் நாஸ்திகராவதில் எந்த உலகமும் முழுகிப் போய்விடாது', என்று வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளராகக் காட்டுகிறார்.

**திருவள்ளுவர் யார்?**

திருவள்ளுவரைப் பற்றிய ஓர் உயர்ந்த மதிப்பீட்டைத் தருகிறார் பெரியார். 'அவர் ஒரு பொய்யாமொழிப் புலவர், நம் பண்டைத் திராவிட மக்களிடையே இரண்டு பெரியார்களைக் குறிப்பிட வேண்டுமானால் ஆண்களில் திருவள்ளுவரையும் பெண்களில் அவ்வையாரையும் நாம் சிறந்த அறிவாளிகளாகக் குறிப்பிட முடியும். அவர்கள் இரண்டு பேரையுமே பார்ப்பனர்கள் அசல் திராவிடர்கள் என்று ஒப்புக்கொள்வதில்லை. திருவள்ளுவர் நூல் ஒன்றே போதும் இந்நாட்டு மக்களுக்கெல்லாம் அறிவை உண்டாக்க'[19] என்கிறார் பெரியார். மேலும் 'ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவர்க்கும் சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர்கள் அனைவர்க்கும் வள்ளுவர் அருளிய திருக்குறள் ஒரு பெரிய செல்வமேயாகும்'[20] என்று குறளை மக்கட் செல்வமாக்குகிறார் பெரியார்.

'திருக்குறள் ஆரிய தர்மத்தை - மனுதருமத்தை அடியோடு கண்டிப்பதற்காகவே எழுதப்பட்ட நூல்; அது மனுதரும மறுப்பு நூல்; ஆரியக் கொள்கைகளை மறுக்க அவைகளை மடியச் செய்ய அக்கொள்கைகளிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க எழுதப்பட்ட நூல் திருக்குறள்'[21] என்பதைப் பெரியார் தெளிவாக எடுத்துரைத்தார். அதே நேரத்தில் தமிழ் மக்களுக்குரிய வாழ்வியல் நூலாகக் குறள் விளங்குகிறது என்பதையும் பெரியார் எடுத்துக்காட்டினார்.

பிறப்பினால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வட நூலாரின் வருணக் கோட்பாடு தமிழ்நாட்டில் காலூன்றத் தொடங்கிய காலத்தில் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று மக்கட் சமத்துவ நிலையை வள்ளுவர் வற்புறுத்தினார். மேலும் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று ஒருவன் நினைத்தால் அதற்குக் காலமோ நேரமோ பார்ப்பது தவறு; மானம் மரியாதை இவற்றைப் பற்றிப் பார்ப்பது கூடத் தவறு; அவற்றைப் பற்றிச் சிந்தித்தால் அந்தக் காரியமே கெட்டுப் போய்விடும்.

**'குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்'** *(குறள் – 1028)*

என்கிறார் வள்ளுவர். ஒரு பொதுநலத் தொண்டனுக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை. அவன் தன்னைத் தான் மறக்க வேண்டும். தன்னைத் தான் மறந்தவனுக்கு மானமேது? அவமானமேது?' என்கிறார் பெரியார்.[22] ஆகவே தமிழர்கள் குறளைப் படிக்க வேண்டும் என்று பெரியார் வற்புறுத்துகிறார்.

**குறள் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கும்:**

உலகில் உள்ள மற்ற சமுதாய மக்களெல்லாம் சுயமரியாதை உணர்ச்சி பெற்று மானமும் அறிவும் உடைய மக்களாக முன்னேறுவதைக் கண்ட பெரியார், தன் சொந்த நாட்டு மக்களும் சுயமரியாதை உணர்ச்சிபெற வேண்டும் என்பதற்காகச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

"திருக்குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூகஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியிருக்கிறது" என்பதனால் திருக்குறளைப் படிக்குமாறு பெரியார் வற்புறுத்துகிறார்.

"என்ன மதத்தினர் என்று கேட்டால் 'வள்ளுவர் மதம்' என்று சொல்லுங்கள்; உங்கள்நெறி என்னவென்றால் 'குறள்நெறி' என்று சொல்லுங்கள்; 'குறள்நெறி' என்று

சொல்வீர்களாயின் உங்கள்முன் எந்தப் பிறப்போக்குவாதியும் எப்படிப்பட்ட சூழ்ச்சிக்காரனும் உங்கள் முன்நிற்கக் கூசி ஓடிவிடுவான். குறளை எவனாலும் மறுத்துக் கூற முடியாது. அவ்வளவு இயற்கைக்கும் அறிவுக்கும் இயைந்ததாக இருக்கிறது அது. எனவே குறளைப் படியுங்கள்; அதன்வழிப்படி நடவுங்கள்; உங்களுக்கு மனத்தூய்மை ஏற்படும். முன்னேற்ற அறிவில் ஆசையும் நம்பிக்கையும் ஏற்படும்'' என்றும், ''ஆரியப் பித்தலாட்டத்திற்குச் சரியான மருந்து சரியான மறுப்பு திருக்குறள்தான்'' என்றும்

26.12.1948 அன்று சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில் பெரியார் முழக்கமிடுகிறார்.[24] அதனால் ஆரியப் பண்பாட்டுப் படை எடுப்பைத் தடுக்கும் அரணாகக்குறள் விளங்குகிறது என்பது அவர் கருத்தாகும்.

**பரிமேலழகர் உரை:**

பரிமேலழகர் காஞ்சிபுரத்தில் பிறந்த பார்ப்பனர். கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். பரிமேலழகர், குறளுக்கு உரை எழுதும்போது ஆரியக் கொள்கைகளைப் புகுத்தித் தமிழ் மரபைக் கெடுத்துவிட்டார். தனித் தமிழ் நூலாகிய திருக்குறளை வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு என்று எண்ணுமாறு செய்துவிட்டார் என்பதைத் தந்தைபெரியார் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

''பரிமேலழகர் உரை குறளாசிரியரின் கருத்துக்கு ஒவ்வாத உரையாயிருந்தது. அவ்வுரை மனுநீதியின் மறுபதிப்பாகவே காட்சியளித்தது. 'அறம்' என்று வள்ளுவர் சொல்லியிருந்தால் மனு முதலிய பெரியோர்களால் தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள 32 தர்மங்கள் என்று அதற்குப் பரிமேலழகர் உரை இருக்கும். எனவே, குறளைப் புகுத்துமுன் அந்த உரையின் செல்வாக்கையும் ஒழிக்க வேண்டியிருந்தது.''[25]

''ஆதலால் குறளுக்குப் பரிமேலழகர் உரை தவிர்த்து குறளுக்கு மனுதர்மத்தை, ஆரிய தர்மத்தைப் புகுத்தி உரை கூறுவதைக் கண்டிப்பாக மிகக்கவனமாக நீக்கி வள்ளுவர் கருத்துகளுக்கு இணங்க உரை கூறும்படி செய்ய வேண்டியதுடன் திருவள்ளுவர் சரித்திரத்தை மாணவர்கள் பார்ப்பனக் கற்பனை என்று அறியும்படியும் செய்யவேண்டியது கல்வி மந்திரியார் கடமையாகும்.''26

திருக்குறளின் மீதும் திருவள்ளுவர் மீது ஆரியம் பூசிய அழுக்கை அகற்றுமாறு கல்வி அமைச்சர்களுக்குப் பெரியார் வேண்டுகோள் விடுக்கிறார்.

**திருக்குறள் மாநாடு:**

1949ஆம் ஆண்டு ஜனவரி 15, 16ஆகிய நாள்களில் சென்னையில் திருக்குறள் மாநாட்டைப் பெரியார் நடத்தினார். 'திருவள்ளுவர் மாநாடு சென்னையில் பிரபலமாய் பல அறிஞர்கள் தலைமையையும் சொற்பொழிவையும் கொண்டு 1949 ஜனவரி 15, 16 சனி, ஞாயிறுகளில் நடக்கிறது.... குறள் மாநாட்டைத் தமிழர்கள் திராவிடர் கழகத்தார் நல்வாய்ப்பாகக் கொண்டு கலந்துகொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்'' என்று 10.01.1949ஆம் நாளிட்ட 'விடுதலை'யில் பெரியார் வேண்டுகோள் விடுக்கிறார்.

இந்த மாநாட்டின் பெயர் ''வள்ளுவர் குறள் (தமிழர் நெறிவிளக்க) மாநாடு'' என்பதாகும். இந்த மாநாட்டில் திரு.வி.க, பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை, தெ.பொ.மீ, நாவலர் ச. சோமசுந்தரபாரதியார், சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் முனுசாமி, பேரா. இலக்குவனார், புலவர்குழந்தை, எஸ். முத்தையா முதலியார், கலைவாணர் என். எஸ்.கே, அறிஞர் அண்ணா, அவ்வை டி.கே. சண்முகம் முதலான அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு வரலாற்றில் தனி ஒரு நூலுக்காக மாநாடுகள் நடத்திப் பெருமைப்படுத்தப்பட்ட நூல் திருக்குறள் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அந்தப் பெருமை தந்தை பெரியாருக்கு உரியதாகும்.

16.01.1949அன்று இரவு அறிஞர் அண்ணா அவர்களின் குழுவினரால்

'சந்திரமோகன்' என்னும் நாடகம் வள்ளுவர் மாநாட்டுப் பந்தலில் நடிக்கப்பெற்றது. முடிவில் நாடகத்தில் தம்முடன் சேர்ந்து நடித்த தோழர்களுக்கும் நாடகத்திற்கு வந்து பெருமைப்படுத்திய பொதுமக்களுக்கும் அண்ணா நன்றி கூறினார். இதன் பின்னர் நடிகர்களைப் பாராட்டிய அவ்வை டி.கே.சண்முகம், தோழர் சம்பத் அவர்களின் நடிப்பைச் சிறப்பாகப் பாராட்டினார். மேலும்,

"அறிஞர் அண்ணாதுரை அவர்கள் பேச்சில் வல்லவர்; எழுத்தில் வல்லவர் என்று மட்டுமே இதுகாறும் அறிந்திருந்தேன். இன்று அவர்தம் நடிப்பின் மூலம் நடிப்பிலும் தனக்கு ஒப்பானவர் இத்தமிழ்நாட்டின்கண் இல்லை என்பதை நிரூபித்துவிட்டார்." இதுவரை எந்த நாடக அரங்கிலும் இவ்வளவு திரளான மக்களைத் தாம்கண்டதில்லை என்றும் கலைஞர்களையும் பொதுமக்களையும் பாராட்டிப் பேசிவிட்டுத் தமக்கு இந்த வாய்ப்பை நல்கிய பெரியாருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் டி.கே.சண்முகம்.

16.01.1949 அன்று காலை 9:30 மணிக்குத் தொடங்கிய குறள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இரவு 2:30 மணிக்கு நிறைவடைந்தன.[27]

இதனையடுத்து 03.04.1949 அன்று விருதுநகரில் குறள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் 'திருவள்ளுவர் விழாவுக்கென ஒரு நாளைக் குறிப்பிட்டு அரசு விடுமுறை நாளாக்கி, அந் நாளை நாடெங்கும் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது. 'ஏப்ரல் 12ஆம் தேதியைக் குறள் நாள்' எனக் கொண்டாடுங்கள்' என்று பெரியார் அறிக்கை விடுத்தார். ('விடுதலை' 05.04.1949)

**திருக்குறள் மக்கள் கைகளில் மலிவுப் பதிப்பாக:**

ஊரெல்லாம் குறளைப் பரப்பிவந்த பெரியார், திருக்குறள் புத்தகத்தை மிகக்குறைந்த விலைக்கு அச்சுப் போட்டுத் தமிழ் மக்களுக்கு வழங்கிவந்தார். 1953 ஜனவரியில் திருக்குறள் மலிவுப் பதிப்புக் கிடைக்கும் என்று 'விடுதலை'யில் விளம்பரம் செய்தார். 170 பக்கமுள்ள பாக்கெட் சைஸ் திருக்குறள் புத்தகத்தை நான்கணா விலைக்கு மக்களுக்கு வழங்கினார் பெரியார். 1929 டிசம்பரில் எட்டணா விலைக்குத் திருக்குறள் அச்சிடப்பட்டு, பெரியாரால் வெளியிடப்பட்டதாகவும் 'திராவிடன்' இதழ் (28.12.1929) தெரிவிக்கிறது.

பெங்களூர் திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில் பேசும் போது இரண்டணாவுக்குக் குறள் கிடைப்பதற்கான ஓர் ஏற்பாடு நடந்து வருவதாகக் குறிப்பிடுகிறார்.

"குறள் மக்களிடத்தில் பரவுவதற்கான முறையில் நாம் பணிபுரிய வேண்டும். சென்னையில் ஒரு புத்தகம் 2 அணா வீதம் எல்லாக் குறள்களையும் கொண்ட புத்தகம் பத்து லட்சம் போட்டு மக்களிடத்தில் விநியோகிப்பதற்குத் தோழர் கடலூர் நாராயணசாமி அவர்கள் மூலம் ஏற்பாடு நடந்து வருகிறது. அந்தப்படி வந்தால் திருமணங்களில் தேங்காய்பழம் கொடுப்பதற்குப் பதிலாகக் குறள் புத்தகத்தைத் தட்டில் வைத்துக் கொடுத்து மக்களுக்கு அறிவைப் பரப்பலாம். வையமெல்லாம் குறள்புகழ், குறள் பண்பு ஓங்குக.[28]

எப்படியெல்லாம் குறளைப் பரப்ப வேண்டும் என்று பெரியார் விரும்புகிறார்.

**ஆசிரியர் கி.வீரமணியின் அரும்பணி:**

இவ்வாறு திருக்குறள் ஆரிய மயமாக்கப்பட்ட நேரத்தில், பண்டிதர்கள் பாராமுகத்தோடு பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது குறளின் மீது போர்த்தப்பட்ட ஆரியப் போர்வையை தந்தை பெரியார் அகற்றிவிட்டு, 'அது தமிழர்களின் அறநூல்; தமிழர்க்கான வாழ்வியல் நூல்' என்பதை எடுத்துரைத்து மக்களுக்குக் குறள்மீது ஈடுபாடு ஏற்படுமாறு செய்தார். பல்வேறு குறட்பாக்களுக்குப் பெரியார் எழுதியுள்ள விளக்கவுரை அருமைப் பாடுடையதாகும். அறிவியல் வழிப்பட்ட பெரியாரின் ஆராய்ச்சி

அணுகுமுறை ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்தருவதாகும்.

வள்ளுவரைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் பெரியார் பேசிய, எழுதிய அனைத்தையும் காலவரிசைப் படியாகத் தொகுத்து ஓர்அறிவுக்களஞ்சியமாகஆசிரியர்கி. வீரமணி அவர்கள் 'பெரியார் களஞ்சியம் – திருக்குறள் – வள்ளுவர்' என்னும் தலைப்பில் 2015ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். திருவள்ளுவரைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பும் அன்பர்களின் கைகளில் இருக்கவேண்டிய நூல் இது. மேலும் தமிழ் இனஉணர்வுடையோர், தம்மை வலிமைப்படுத்திக்கொள்வதற்குப் பெரியார் களஞ்சியம் பெரிதும் பயன்படும்.

**நன்றிக்குரியவர்:**

இந்த நேரத்தில் தமிழர்கள் நன்றியோடு, நினைத்துப் பார்க்க வேண்டிய பெருந்தகை பா.வே.மாணிக்கநாயக்கர் அவர்கள்தான். அவர்தாம் பெரியாருக்குத் திருக்குறள் மீது தீராக்காதலை உண்டாக்கிவிட்டவர்.

"எனக்குக் குறளில் ருசியை உண்டாக்கியவர் நண்பர் காலஞ்சென்ற பா.வே.மாணிக்கநாயக்கர் அவர்கள்தான். அவர் என்னிடம் நகைச்சுவையாகப் பேசுவதற்கும் கூட குறளையே கையாளுவார். பார்ப்பனர்களை – ஆரியத்தைக் கிண்டல் செய்வதற்கும் அச்சமயங்களில், நானும் குறளைச் சிறிது உணர ஆரம்பித்தேன். அது மட்டுமல்ல; அந்த நாளிலிருந்தே, நான் மற்ற ஆரிய புராண இதிகாசங்களில் சைவ – வைணவங்களில் உள்ள குற்றங்குறைகளை எடுத்துக் கூறி வருவது போல் குறளிலும் பல குற்றங்களைக் கூறிவந்துள்ளேன். நண்பர் மாணிக்கநாயக்கர் அவர்களிடமும் அடிக்கடி குறைகூறி தர்க்கிப்பதுண்டு. காரணம், அப்போது நான் குறளுக்கு ஆரியரும் ஆரிய உணர்ச்சியுள்ள மதவாதிகளும் செய்த உரைகளைமெய்யென்று எண்ணியதேயாகும்." ('குடிஅரசு' 07.05.1949)

"திருக்குறளின் பெருமையைச் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு எடுத்துக் காட்டியவர் காலஞ்சென்ற தோழர் என்ஜினியர் பா.வே.மாணிக்க நாயக்கர் ஆவார். அவரும் நானும் அடிக்கடி வேடிக்கையாகவும் விதண்டாவாதமாகவும் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். அந்தச் சமயங்களிலெல்லாம் அவர் திருக்குறள் கருத்துகளைத்தான் மேற்கோளாக எடுத்துக்கூறி என்னை மடக்குவார். அவருடைய விளக்க உரைகளால் திருக்குறளில் அடங்கியிருக்கும் பல அற்புத அதிசயக் கருத்துகளை என்னால் அன்று அறியமுடிந்தது. ('விடுதலை' 25.03.1948)

இவ்வாறு திரும்பத் திரும்பப் பெரியார் பா.வே.மாணிக்க நாயக்கரைப் பற்றிக் குறிப்பிடுவதனால் பா.வே.மா. அவர்களின் அருமைப்பாட்டை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. குறள் இன்று உலகம் முழுக்கப்பரவியிருக்கிறது என்றால் அதற்குப் பா.வே.மா. அவர்கள் பெரியாருக்குத் திருக்குறள் மீது உண்டாக்கிவிட்ட ருசிதான் காரணமாகும்.

சென்னை – மயிலாப்பூரில் திருவள்ளுவர் கழகச் சார்பில் சோ.லட்சுமிரதன் பாரதி தலைமையில் 14.03.1948இல் நடைபெற்ற மூன்றாவது திருக்குறள் மாநாட்டில் பெரியார் பேசியதாவது.

"ஆரிய தர்மத்தை எதிர்த்து அழித்து ஒழிப்பதற்காகத் தான் திருக்குறள் பாடப்பட்டது என்பது அதை ஆராய்ச்சி செய்வோர் எவருக்கும் விளங்காமற் போகாது. நமது தலைவரின் (லட்சுமிரதன் பாரதி) தந்தையாரான தோழர் எஸ்.சோமசுந்தர பாரதியார் அவர்களைப் போன்ற பெரும் புலவர்கள் திருக்குறளை ஆதாரமாகக் கொண்டு ஆரியர் – தமிழர் வேறுபாடுகளை விளக்கமாக எடுத்துக் கூறுவார்களானால் பல அறிவுக்கியைந்த அற்புதங்கள் வெளிப்படும். அவரைப் போன்ற அறிஞர்கள் பேசக்கேட்டுத் தான் எனக்கும் திருக்குறளின் பெருமை தெரியவந்தது." ('விடுதலை' 25.03.1948)

இவ்வாறு பெரியார் வேண்டுகோள் விடுத்த பின்புதான் புரட்சிக்கவிஞர், புலவர் குழந்தை, நாவலர் சோமசுந்தர

பாரதியார், பேராசிரியர் இலக்குவனார் முதலான தமிழறிஞர்கள் திருவள்ளுவரைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் ஆராயத் தொடங்கினார்கள். இதன் விளைவாகப் புதிய புதிய கருத்துரைகள் தமிழுக்குக் கிடைத்தன.

**புரட்சிக் கவிஞர்:**

'வள்ளுவர் என்பவர் அமைச்சர்களுக்கு எல்லாம் அறிவுரை பகன்று அவர்களை நெறிப்படுத்தும் அரசரின் செயல் அலுவலர்' என்கிறார் புரட்சிக்கவிஞர். (வள்ளுவர் உள்ளம்; முன்முகம்) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வள்ளுவர் குறளுக்கு 1300 ஆண்டுகளுக்குப் பின் வந்த பரிமேலழகர் உரை எழுதினார்.

> **"பரிமேலழகர் உரையோ வள்ளுவர்**
> **திருவுள்ளத்தின் திரையே ஆனது!**
> **நிற வேறுபாட்டை அறவே ஒதுக்கிய**
> **தமிழ்த் திருவள்ளுவர் அமிழ்தக் கொள்கையை**
> **நஞ்சென்று நாட்டினார் பரிமேலழகர்.....**
> **பரிமேலழகர் செய்த உரையில்**
> **தமிழரைக் காணுமாறில்லை; தமிழரின்**
> **எதிர்ப் புறத்துள்ள இனத்தார் மேன்மையின்**
> **செருகலேகண்டோம்.... ...."**

என்று பரிமேலழகர் உரையைக் கவிதையில் திறனாயும் புரட்சிக்கவிஞர், வட நூல் கொண்டே வள்ளுவர் குறளை இயற்றினார் என்ற எண்ணம் ஏற்படும்படி பரிமேலழகர் உரைசெய்துள்ளார் என்று தெளிவுபடுத்துகிறார். அதற்கு எடுத்துக்காட்டாக "ஒழுக்கமுடைமை குடிமை.... என்னும் குறளுக்குப் பரிமேலழகர் 'தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கந்தன்னை உடையராதல்' என்று எழுதியிருப்பதை எடுத்துக்காட்டி "உரைதானா இது?"[29] என்று வினவுகிறார் புரட்சிக்கவிஞர். இதைப்போன்ற வேறு பல இடங்களையும் எடுத்துக்காட்டிப் பரிமேலகழரின் ஆரியச் சார்பை அம்பலப்படுத்துகிறார் புரட்சிக் கவிஞர்.

**புலவர் குழந்தை:**

தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க, புலவர் குழந்தை திருக்குறளுக்குப் புத்துரை எழுதினார். பரிமேலழகரின் ஆரியக் கருத்துகளை மறுத்து வள்ளுவரின் உள்ளத்தைப் புலவர் குழந்தை தமிழர்களுக்கு எடுத்துக்காட்டினார்.

"பரிமேலழகர் ஒரு பார்ப்பனராகையால், தமிழ் நூல் உரை எழுதுவதன் மூலம், தமிழில் ஆரியக் கொள்கைகளைப் புகுத்தித் தனித்தமிழ் மரபைக் கெடுப்பதையே தங்கள் வாழ்க்கைப் பயனாக – கடமையாகக் கொண்ட பார்ப்பன அறிஞர்களைப் போலவே இவரும் தமது உரையால், தனித் தமிழ் நூலாகிய திருக்குறளை ஆரிய மொழி பெயர்ப்பு நூலெனத் தமிழர் எண்ணும்படி செய்துவிட்டார். தமிழர் நாகரிகம் என்னும் இன்சுவை மிக்க திருக்குறளாகிய நல்லாவின் பாலில் ஆரிய நாகரிகம் என்னும் கொடுங் குணமிக்க தம் உரையாகிய நஞ்சைக் கலந்து பாழ்படுத்திவிட்டார். பரிமேலழகர் உரை என்னும் கொடிய நஞ்சை அகற்றினாலன்றி முப்பால் நற்பாலாகாது."[30]

என்றும், பரிமேலழகர் புகுத்திய ஆரிய நச்சுக்கருத்துகளை அகற்ற வேண்டும் என்றும் கூறுகிறார் புலவர் குழந்தை.

திருக்குறள் உரைப் பாயிரத்தில் 'அறம்' என்பதற்குப் பரிமேலழகர் "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்துளசெய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கம், தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்" என்று கூறுகிறார்.

பரிமேலழகரின் இக்கருத்தை, "அறமாவது தமிழ் அறவோர்களால் அல்லது அறநூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம்" என்று கூறியிருக்க வேண்டும். தமிழ் மக்கட்கு ஆரிய அறநூல்கள் எப்படி அறநூல்களாகும்?" என்று புலவர் குழந்தை தெளிவாக மறுத்துரைப்பதைக் காண்கிறோம்.

மேலும் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று குறள் கூறுவதை எடுத்துக்காட்டி, மனுதர்மத்தின் நால் வருணக் கோட்பாட்டை இதனோடு ஒப்பிட முடியுமா? என்று வினவுகிறார் புலவர். இவ்வாறு பரிமேலழகரின் ஆரியக் கருத்துகளை எடுத்துக் காட்டி அவற்றைப் புலவர் குழந்தை மறுத்துரைப்பதைத் 'திருக்குறளும் பரிமேலழகரும்' என்னும் அவருடைய நூலில் விரிவாகக் காணலாம்.

மனுவுக்கும் திருவள்ளுவருக்கும் இடையே உள்ள மாபெரும் வேறுபாடுகளைப் படித்து விட்டு ஆல்பர்ட் சுவைட்சர் *"What a difference between the Kural and the Laws of manu!"31* என்று வியப்படைகிறார்.

**முடிப்புரை:**

வடமொழிச் சார்பு உடையோர் அனைவரும் தமிழ் நுல்கள், வடமொழி நூல்களைப் பார்த்து எழுதப்பட்டவை அல்லது வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை என்றே கருதுகிறார்கள். வடமொழியில் வாத்சாயனர் எழுதிய 'காம சூத்திரத்தைப் பார்த்தே வள்ளுவர் காமத்துப் பாலை எழுதினார் என்ற கருத்தும் அப்படிப்பட்டதே.

காட்சி, அய்யம், தெளிவு, களவு, கற்பு எனும் பழந்தமிழரின் அகத் திணை மரபுகளின் அடிப்படையில் குறள் சிறந்த கட்டமைப்போடு அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஆரியர் நூல்களில், கண்டதும் காதல், உடனே உறவுகொள்வது, குடும்பம் நடத்துவது, குழந்தை பெற்றுக் கொள்வது, பின்பு அப்பெண்ணைவிட்டுப் பிரிந்துபோய்விடுவது, (எ-டு: சகுந்தலை) என்பது வடநூற்கொள்கை. அடுத்தவர் மனைவி மீது ஆசைப்படுவது, மனைவியைச் சூதாட்டப் பொருளாக்குவது, விற்பனை செய்வது, அய்வருக்கு ஒருத்தியை மனைவியாக்குவது, அவள் ஆறாவது ஒருவனை விரும்புவது (எ-டு: வில்லி பாரதம் – பழம்பொருது சருக்கம்) இவையெல்லாம் ஆரியர் நூல்களில் அளவிறந்து காணப்படுகின்றன.

வடமொழியில் வாத்சாயனர் எழுதிய 'காமசூத்திரம்' சிற்றின்ப உணர்வுகளைத் தூண்டி அருவருக்கத்தக்க காட்சிகளைக் காட்டுகிறது. அடுத்தவர் மனைவியைக் கவர்ந்திழுப்பதைப் பற்றிய 'தொழில் நுணுக்கங்களைப் பற்றிக் கூறும்போது வாத்சாயனர் 'ஆபாசத்தின் அடி ஆழத்திற்கே' சென்று விடுகிறார். இதைப் பற்றிஅறிஞர் கோதண்டபாணி கூறுவதாவது:

*"Valluvar and vatsyayana are poles apart vatsyayana dealt with erotology but valluvar dealt with love proper, human love in its ethical and spiritualaspects. Kamasutra was meant to induce incite and prolong the sex passion. It deals with Physical acts, manipulations and attitudes in sex unions and abounds in revolting descriptions and obscene situations vatsyayana reaches the depth of his degradation when he formulates the technique of seducing the wife of another. We have none of these follies in Thiruvalluvar.....So there can be no comparison between them both... There can therefore be no question of one borrowing anything from the other."[32]*

இவ்வாறு எதிரெதிர் நிலைகளில் நிற்கும், இருவேறு பண்பாடுகளைக் கொண்ட ஆசிரியர்களை ஒப்பிடுவது கூடத் தவறு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டின் அறிவுத் தளத்தில் அருமைப்பாடு மிக்க ஆளுமையாக விளங்கியவர். அவரை ஆரியச் சார்புடையவர் என்றும், பார்ப்பனர்க்கும் புலைப் பெண்ணுக்கும் பிறந்தவர் என்றும் பல்வேறு வகையில் தமிழ் இன எதிரிகள் இழிவுபடுத்தி வைத்துள்ளனர். வள்ளுவரைப் பற்றிப் பல புனைக்கதைகளைப் பரப்பிவிட்டனர்.

திருக்குறளையே வடமொழி நூல்களின் சாரம் என்றும் அண்மைக் காலம் வரையில் ஒரு கருத்தியலைக் கட்டமைத்தனர். ஆனால், தந்தை பெரியாரும் திராவிடர் இயக்கமும் திருக்குறள் தமிழர்களின் வாழ்வியல் அறநூல் என்பதை எடுத்துக்காட்டி ஊர்தோறும் முழங்கி வந்தனர்.

*1920களின் பிற்பகுதியில் தந்தை பெரியார் திருக்குறளைப் பற்றிப் பேசத் தொடங்கிய பிறகு தான் தமிழறிஞர்கள் துயிலெழத் தொடங்கினார்கள். திருக்குறளை ஆராயும் பணியில் பலரும் முனைந்து நின்றனர். குறளுக்குப் புத்துரைகள் கிடைத்தன. பரிமேலழகர் உரை திறனாய்விற்கு உட்படுத்தப்பட்டது. பார்ப்பனர் பரப்பிய புனைக்கதைகள் புறந்தள்ளப்பட்டன.*

*திருக்குறளுக்கென்று தனிமாநாடுகளைப் பெரியார் நடத்தினார். திருக்குறளைக் குறைந்த விலைக்கு அச்சிட்டு மக்களுக்கு வழங்கினார். திருக்குறள் 'மனுதர்ம மறுப்பு நூல்' என்பதைச் சான்றுகளுடன் பெரியார் நிறுவினார். அதனால் தமிழர்கள் இழந்துவிட இருந்த தமிழ்ச் சமுதாய இலக்கிய மரபுகளை மீட்டுத் தந்தவர் திருவள்ளுவர் எனும் மெய்ம்மையைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர். தமிழின் முதல் தற்காப்பு இயக்கம் தொல்காப்பியத்தில் தொடங்குகிறது. திருவள்ளுவர் அந்தத் தற்காப்பு இயக்கத்தை வலிமைப்படுத்தி அயற்புலப் பண்பாட்டுப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திய பேராசான் என்ற பெருமைக்குரியவர் ஆகிறார்.*

*ஈராயிரம் ஆண்டுகளாக இனப் பகைவர்களால் மறைக்கப்பட்டுக் கிடந்த திருக்குறளை எடுத்து அதன் பெருமைகளை விளக்கி மக்கள் கைகளில் கொண்டுபோய்க் கொடுத்துப் 'படி' என்று சொன்னவர் தந்தை பெரியார்! பெரியார் திருக்குறளைக் கையில் எடுக்காமல் போயிருந்தால் கீதையும் மனுநீதியும் வேதங்களும் தமிழர்களின் அறநூல்களாக அரங்கேறியிருக்கும்!*

**அடிக்குறிப்புகள்:**


1. நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் (எழுத்து, பாயிர உரை (1972)
2. வி. சுந்தரமுதலியார் (ப.ஆ) கபிலரகவல் (2017)
3. அஷ்டாவதானம்வீராசாமி விநோதரசமஞ்சரி (1952) பக். 372, 377
4. B. இரத்தினநாயகர்அண்டுசன்ஸ் மேலது; முகவுரை
5. தந்தைபெரியார் …………. 'குடிஅரசு' 10.10.1926
6. Albert Schwetzer …………. 'Indian Thought and its Development. PP. 200-201 (1960)
7. கி. வீரமணி (தொ.ஆ)…….. பெரியார்களஞ்சியம்; தொகுதி-37 திருக்குறள் – வள்ளுவர்; ப.283 (2015)
8. மேலது ……….. மேலது; ப.180
9. மேலது ………... மேலது; ப.8
10. கி.வீரமணி(ப.ஆ).....அசல்மனுதருமம் (1919 பதிப்பில்உள்ளபடி); பக். 283-301 (2005)
11. கி.வீரமணி (தொ.ஆ) ………. பெரியார்களஞ்சியம்; தொகுதி-37; பக். 281 (2015)
12. மேலது …………. மேலது; பக். 17
13. புலவர்குழந்தை ………. திருக்குறளும்பரிமேலழகரும்; பக். 22, (2017)
14. R. Nagasamy ……… Thirukkural an Abridgement of sastras. (9 Jan, 2018)
15. புலவர்குழந்தை ……… மு . நூ ; பக். 22-23
16. கி.வீரமணி (ப.ஆ) …… திருக்குறளும்பெரியாரும்; பக்.79 (2001)
17. மேலது ……… மேலது; பக். 74
18. மேலது …………… மேலது; பக். 79
19. மேலது …………. பெரியார்களஞ்சியம்; தொகுதி-37, பக். 40
20. மேலது …………. மேலது; பக். 21
21. கி.வீரமணி ……….. பெரியார்களஞ்சியம்; தொகுதி-37, பக். 153
22. மேலது ………. பக். 28, 36, 37
23. தந்தைபெரியார் ………………

*'விடுதலை' 05.11.1948*

24. *மேலது ……… 'விடுதலை' 31.12.1948*
25. *மேலது ………. 'விடுதலை' 08.11.1949 – 11.11.1949*
26. *மேலது ……….. 'விடுதலை' 27.11.1948*
27. *கி.வீரமணி (தொ.ஆ) பெரியார்களஞ்சியம்; தொகுதி-37; பக். 327, 348*
28. *மேலது ………. மேலது; பக். 198*
29. *பாரதிதாசன் ………………. பாரதிதாசன்கவிதைகள்; தொகுதி-2; பாரிநிலையம்-1977) பக். 157-158*
30. *புலவர்குழந்தை ……………. மு . நூ . பக். 22-44*
31. *Albert Schwetzer ………….. மு . நூ . பக். 201 (1960)*
32. *K. Kothandapani Pillai Thirukkural Kamathuppal; PP. 47-48, (1962) (University of Madras)*

**ஆசிரியர் குறிப்பு:**

*பேராசிரியர் காளிமுத்து பழனிக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மொழிப்போர் வீரர். தமிழும் ஆங்கிலமும் துறை போகியவர். சங்கத்தமிழின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். பல ஆய்வுக் கட்டுரைகளின் ஆசிரியராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் விளங்குகிறார்.*

*நெருக்கடி நிலைக் காலத்தில் தம் பேராசிரியர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டவர்.*

*அய்யா காளிமுத்து, திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் செயற்குழு உறுப்பினர். 1970-இல் பகுத்தறிவாளர் கழகம் தொடங்கப்பட்ட போது அதன் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். 'குறிப்புப் பொருள் கோட்பாடுகள்' என்பது இவரது முதல் நூலாகும்.*

*மனு ஸ்மிருதி சாத்திரத்தை ஆய்வு செய்து 'மனுநீதி -ஒரு மறுபார்வை' என்ற நூலை எழுதியவர். '3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியா', 'உலகத் தத்துவச் சிந்தனையாளர்களும் தந்தை பெரியாரும் - ஓர் ஒப்பியல் ஆய்வு', 'சிவாஜி முடிசூட்டலும் பார்ப்பனீயமும்' போன்ற நூல்களையும், 'மாட்டுக்கறியும் மதவெறியும்', 'காந்தியார் படுகொலை: அதிர்ச்சியூட்டும் தகவல்' போன்ற நூல்களின் முக்கியப் பகுதிகளையும் தமிழில் மொழி பெயர்த்தவர்.*

●

- ***The status of Tamil as one of the great classical languages of the world*** *is something that is patently obvious to anyone who knows the subject.*

- ***To deny that Tamil is a classical language is to deny a vital and central part of the greatness and richness of Indian culture.***

- *The quality of classical Tamil literature is such that it is fit to stand beside the great literatures of Sanskrit, Greek, Latin, Chinese, Persian and Arabic. The subtlety and profundity of its works, their varied scope (Tamil is the only premodern Indian literature to treat the subaltern extensively), and their universality qualify Tamil to stand as one of the great classical traditions and literatures of the world.*

---

(Statement on the Status of Tamil as a Classical Language, Apr 11, 2000)

Prof. Dr. **GEORGE L. HART**

**Professor Emeritus, Department of South and Southeast Asian Studies,**

**UC Berkeley, United States**

# தொல்காப்பியப் பூங்கா வழிப் புலனாகும் கலைஞரின் இலக்கணப் புலமை



**முனைவர் ஸ்ரீதேவி**
*தமிழ்த்துறை தலைவர்,*
*ஸ்ரீ எஸ்.இராமசாமி (நாயுடு) ஞாபகார்த்த கல்லூரி, சாத்தூர்.*

**கட்டுரைச் சுருக்கம்:**

மொழி மற்றும் வாழ்க்கைக்கான விதிகளை ஈர்க்கும் உலகின் பழமையான நூல்களில் 'தொல்காப்பியம்' ஒன்றாகும். தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுக்கு இஃது ஓர் உரைகல்லாக உள்ளது. பல நூற்றாண்டுகளாக இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர் போன்ற அறிஞர்கள், தொல்காப்பியத்திற்கு உரைகள் எழுதியுள்ளனர். தமிழ் இனத் தலைவரும், ஆழ்ந்த தமிழ்ப் புலமை மிக்க எழுத்தாளருமான கலைஞர் மு. கருணாநிதி, இலக்கண விதிகளை விளக்குவதற்கு இலக்கியக் குறிப்புகளைப் பயன்படுத்தித் தொல்காப்பியப் பூங்காவிற்கு தனது உரையைத் தனித்துவமான முறையில் எழுதியுள்ளார்.

மொழியியல் மீதான அவரது தேர்ச்சிக்கும், பண்டைய தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் மீதான அவரது அன்பிற்கும் இந்த உரை ஒரு சான்றாக நிற்கிறது. தொல்காப்பியத்தின் உலகளாவிய தன்மைக்காக அவர் பாராட்டுகிறார். அதே நேரத்தில், அவர் தனது முன்னோடிகளின் உரைகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்து, உரைக்கும், வர்ணனைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறார். மூலம், உரை குறித்த பகுத்தறிவு, மற்றும் அதன் உலகளாவிய தன்மை, முந்தைய நூற்றாண்டுகளின் மற்ற அறிஞர்கள் போலல்லாமல், தீவிரத் திராவிட சிந்தனை, கலைஞரின் இலட்சியங்கள் இவை யாவும் அவரது உரையில் பொருந்தி நிற்கின்றன.

எனவே கலைநயம், பாணி, அறிவு மற்றும் சொல்லாட்சி இலக்கியம் போன்ற தேன்சுவையுடன் கூடிய இலக்கணம் ஆகியவற்றுடன் கலைஞரின் உரை சிறந்து விளங்குகிறது. கலைஞரின் இலக்கியத் திறமையின் வாயிலாகப் பெறப்பட்ட, மொழியியல் திறன் குறித்து இந்த ஆய்வு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இது மூல உரையின் உயிரோட்டத்துடன் நன்கு பொருந்துகிறது.

**தொல்காப்பியம்:**

"தமிழரின் மொழியாற்றலை, பண்பாட்டு வாழ்வியல் கூறுகளை வெளிக்காட்டுவதோடு வருங்காலப் புத்துலகுக்கு வழிகாட்டியாகத் திகழ்வது ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியமாகும். சுமார் மூவாயிரம்

ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப் பட்டாலும் தமிழ்மொழியின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இதுவே" முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்த் திகழும் இதன் மொழியாற்றலைப் பலரும் போற்றிப் புகழ்வர்"1 என்று அறிஞர் சு.அழகேசன் குறிப்பிடுகிறார்.

### தொல்காப்பிய உரை:

தொல்காப்பியத்தின் கருத்தை உணரவும் உணர்த்தவும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் முயன்று வந்தனர். அம்முயற்சியின் விளைவாய் உரைகள் பல பெருகின. உரைவளம் கொண்ட பெருநூலாய்த் தொல்காப்பியம் திகழ்கின்றது.

### தொல்காப்பிய உரையாசிரியர்கள்:

தொல்காப்பியத்திற்குப் பழைய உரைகளாகநீண்டஉரைகள்காணப்படுகின்றன.

1. இளம்பூரணர் – முழுமைக்கும் (எழுத்து, சொல், பொருள்)

2. சேனாவரையர் – சொல்லதிகாரத்திற்கு மட்டும்

3. பேராசிரியர் - பொருளதிகாரம் சில இயல்கள்

4. நச்சினார்க்கினியர் - எழுத்து, சொல், பொருளில் சில இடங்கள்

5. தெய்வச்சிலையார் - சொல்லதி காரத்திற்கு மட்டும்

6. கல்லாடர் - சொல்லதிகாரத்திற்கு மட்டும்.

சொல்லதிகாரத்திற்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது.

### பழைய உரையின் இயல்புகள்:

பழைய உரை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இயல்பு உள்ளது.

1. இளம்பூரணர் உரை : தமிழ் மரபை உணர்த்தும் உரை காணலாம்

2. சேனாவரையர் உரை : வடமொழி இலக்கணக் கொள்கையைத் தழுவிஒப்பிட்டுஎழுதப்பட்ட உரை எனலாம்.

3. பேராசிரியர் உரை : இலக்கண இலக்கிய ஆராய்ச்சி நிரம்பிய உரையாக அமைகிறது

4. நச்சினார்க்கினியர் உரை : இலக்கியச்சு சுவை நுகர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது.

5. தெய்வச்சிலையார் : இவரது உரையில் சிலஇடங்களில்பு துமை ஒளி காணப்படுகிறது.

6. கல்லாடர்உரை: முன்னைய உரைகளைத் தழுவி எழுதப்பட்ட சார்பு உரையாக உள்ளது.

### பதினேழாம் நூற்றாண்டில் தொல்காப்பிய உரைகள்:

பதினேழாம் நூற்றாண்டில் மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி தொடங்கியது.

1. சிவஞான (முதலியார்): தொல்காப் பியப்பாயிரம், முதற்சூத்திரம் ஆகிய இரண்டிற்கும் விருத்தியுரை எழுதினார். இவ்விருத்தியுரை இலக்கண ஆராய்ச்சிக் கருவூலமாகத் திகழ்கின்றது.
2. சோழவந்தான் அரசன் சண்முகனார்: தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரை எழுதினார்.
3. டாக்டர் ச.சோமசுந்தர பாரதியார் :தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றிற்கும் ஆராய்ச்சி உரை இயற்றியுள்ளார்.
4. பின்னங்குடி ச.சுப்பிரமணிய (சாஸ்திரியார்): தொல்காப்பிய

சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றி யுள்ளார்.

5. இளவழகனார் : தொல்காப்பியம் முழுமைக்கும்
6. சி.கணேசை(யர்): குறிப்புரை எழுதி யுள்ளார்.
7. ஞா.தேவநேயப் பாவாணர் :தொல்காப்பியம் எழுத்து அதிகாரத் திற்குக் குறிப்புரை எழுதியுள்ளார்.
8. ஆ.பூவராகம் பிள்ளை :தொல் காப்பியம் சொல்லதிகாரத்திற்குக் குறிப்புரை விளக்கம் அளித்துள்ளனர்.
9. கு.சுந்தரமூர்த்தி : தொல்காப்பியம் முழுமைக்கும்
10. ச.பாலச்சந்திரன்: உரை எழுதியுள்ளார்.

**இக்காலத் தொல்காப்பிய ஆராய்ச்சி:**

இக்காலத் தொல்காப்பிய ஆராய்ச்சி நூல்களிலும் பல உரைவிளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

1. மு.இராகவ (அய்யங்கார்) பொருளதிகார ஆராய்ச்சி
2. கா.சுப்பிரமணிய (பிள்ளை பழந் தமிழர் நாகரிகம் (பொருளதிகார ஆராய்ச்சி)
3. கி.வா.ஜகந்நாதன் பயப்படாதீர்கள் (எழுத்ததிகார விளக்கம்)
4. வாழும் தமிழ் (சொல்லதிகார ஆராய்ச்சி)
5. வெங்கடராஜூலு (ரெட்டியார்) எழுத்ததிகார ஆராய்ச்சி
6. க.வெள்ளைவாரணனார் தொல்காப்பியம்
7. லெ.ப.கரு.இராமநாதன்(செட்டியார்): தொல்காப்பியச்செல்வம்
8. சி.இலக்குவனார்: தொல்காப்பிய ஆராய்ச்சி
9. தமிழறிஞர் சுப்பு (ரெட்டியார்)
10. புலவர் குழந்தை பொருளதி காரத்திற்குச் சிறந்த முறையில் ஆய்வுரை எழுதியுள்ளனர்

தொல்காப்பியத்திற்குக் காலந் தோறும் எழுந்துள்ள உரையினையே, 1. பழைய உரை, 2. பிற்கால உரை, 3. எளிய உரை, 4. ஆய்வுரை, 5. தொகுப்புரை, 6. புதுமை உரை எனப் பிரித்துக் காணலாம்.

**உரை:**

'உரை' என்னும்சொல் தமிழில் நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. உரை என்பது எழுத்துகள் வரிவடிவாய் அமைந்து ஒலிவடிவாய் அவற்றின் தன்மையை விளக்கவருவது என்றுதான் பலரும் பொருள் கொள்கின்றனர். உரைக்கப்படுவதால்உரையா யிற்றுஎன்பர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் உரை நடையினைப் பற்றி அறிஞர் பலர் தம் கருத்தை வெளியிட்டுள்ளனர். 'Encyclopaedia Britannica' என்ற சிறந்த ஆங்கிலப் பெரும் அகராதி இவ்வுரை நடைபற்றி நல்ல விளக்கம் தந்துள்ளது. உரைநடை என்பது கட்டுக்கடங்காது பேசும் அல்லது எழுதும் சாதாரண எல்லா வசனங்களை யும் கொள்வதாகாது. உரைநடை வாக்கியங்கள் இழுமென்மொழியால் நல்ல ஒழுகிசை நடையால், தொடர் நலமுடன் ஓசை உணர்த்தும் நெறியான் நன்கு வளர்ச்சியுற்ற தெள்ளிய நடையில் தெளிந்து செல்லுவனவாக அமைய வேண்டும். மொழிக்கு இன்றியமையாத பெயர் வினைகளுடன் சேரும் உரிச்சொற்களின் தகுதி அளவறிந்து அவற்றைச் சேர்த்து வழங்கும் முறையும் உரைநடையில் வரையறை செய்யப்பெறல் வேண்டும். தேவையற்ற சிலவற்றை விட்டொழிதலும் உரைநடைக்கு இன்றியமையாதது. எனவே, உரைநடை என்பது செய்யுள் விதிகளுக்கு விலக்காய் நின்று, இலக்கிய நலம் கெடாவகையில் மக்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உலகுக்கு எடுத்துக்காட்டப் பயன்படுவது

என்று கொள்ளல் பொருந்தும்.''2 மேலும் காலந்தோறும் உரைகள் தோன்றுவதையும் காணலாம்.

''உரைநடை எழுதுவோரும் பிற இலக்கியங்கள் எழுதுவோரும் அவரவர் தம்கால நிலைக்கு ஏற்பவே ஏற்றமும் சிறப்பும் பெறுகின்றனர். சிலப்பதிகார உரைநடைக்கும், ஈட்டின் உரைநடைக்கும், இன்றைய உரைநடைக்கும் எத்தனையோ மாறுபாடுகளைக் காண்கின்றோம். அவரவர் அவ்வக்காலநிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப எழுதிச் சென்றிருக்கின்றனர்''.3 எனவேதான் உரைநடை காலந்தோறும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

**எளிய உரைகள்:**

பழைய உரைகாரராகிய இளம்பூரணர் வழி, எளிமையான முறையில், மாணவர்கள் படித்துப் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிய உரைகளைப் பலர் இயற்றியுள்ளனர். புலியூர்க்கேசிகன் (1961), வெள்ளைவாரணனார் (1983), ச.வே.சுப்பிரமணியன் (1993), தமிழண்ணல் (2003) ஆகியோர் இவ்வகையினர்.

**ஆய்வுரைகள்:**

ஆராய்ச்சி நோக்கில் தொல்காப்பியத்திற்குப் பலர் உரையெழுதியுள்ளனர். இவ்வுரைகாரர்கள் பழைய உரையாசிரியர்களின் உரையினையே மூலங்களாகக் கொண்டு உரையியற்றினமையால் 'ஆய்வுரை' எனப்பட்டது. ச.சோமசுந்தர பாரதியார், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத் திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றிற்கும் ஆராய்ச்சி உரை இயற்றியுள்ளனர். மேலும், சுப்பு (ரெட்டியார்), புலவர் குழந்தை ச.பாலசுந்தரனார் முதலியோரும் ஆய்வுகள் செய்துள்ளனர்.

**தொகுப்புரைகள்:**

காலந்தோறும் தொல்காப்பியத்திற்குத் தோன்றியுள்ள உரைகளை எல்லாம் தொகுத்து நோக்கி, அவற்றின் தொகுப்பாய் அல்லாமல், அவற்றிலிருந்து தோன்றிய கருத்துகளைத் தொகுப்பாய்க்கொண்டு உரைகள் அமைத்தனர். இவ்வகையில் அருணாசலம் பிள்ளை, ஆ.சிவலிங்கனார், வெள்ளைவாரணனார் ஆகியோர் உரைகள் தொகுத்துள்ளனர். மேலும் 1963இல் வ.அய்.சுப்பிரமணியம், ஆபிரகாம் அருளப்பன் ஆகிய இருவரும் சேர்ந்து சொல்லதிகாரத்தின் நான்கு இயல்களுக்கு மட்டும் உரைக்கோவை இயற்றியுள்ளனர். அண்மையில் ச.வெ.சு. ஒவ்வோர் இயலுக்கும் தனித்தனியே விரிவாக உரை எழுதியுள்ளமை கவனிக்கத் தக்கது.

**புதுமை உரை:**

கலைஞர் மு.கருணாநிதியின் 'தொல்காப்பியப் பூங்கா' தொல்காப்பியத்தின் இலக்கண, இலக்கியச்சுவை தோன்ற, புதுமையான உரையாக அமைந்துள்ளது. அவர், பிற உரையாசிரியரினின்றும் வேறுபட்டு 142 தொல்காப்பிய நூற்பாக்களை மட்டும் எடுத்துக்கொண்டு 100 தலைப்புகளில் 100 மலர்களாக உரையைச் சித்திரித்துள்ளார். காலத்தால் மூத்த இலக்கண நூலான 'தொல்காப்பியம்', தொடங்குவது கடவுள் வாழ்த்துடன் அல்ல''4 என்று அவர் வியப்புடன் தொடங்கி நம்மையும் வியப்புடன் நூலினுள் அழைத்துச் செல்கிறார்.

இதற்கு இவருக்கே உரிய எளிய வருணனை, உணர்ச்சிமிகு உரையாடல் கலந்த கவிதை நடை கைக்கொடுத்துச் சிறக்க வைக்கிறது.

**தொல்காப்பியப்பூங்கா:**

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய அனைவரும் அதிகாரம், இயல்கள், நூற்பாக்கள், நூற்பாக்களில்நுவலப்பட்ட பொருள்கள்ஆகிய இவற்றின் முறை வைப்பில் கவனம் செலுத்தி, அவற்றிற்கான காரணங்களை ஆங்காங்கு கூறித் தொல்காப்பியத்தின் கட்டமைப்பை விளக்கியுள்ளனர். இத்தன்மையில் உரை எழுதுதல் உரையாசிரியர்களின் பொது இயல்பாக அமைந்துள்ளது. சில

உரையாசிரியர்கள் அதிகாரம், இயல் ஆகியவற்றிற்குப் பெயர்க்காரணமும் கூறியுள்ளனர்.

கலைஞர் பிற உரையாசிரியரின்றும் வேறுபட்டு அவற்றிற்குப் புதுவிளக்கம் அளிக்கிறார். தொல்காப்பியக் கருத்துப் புதையல்களை உலகறியச் செய்த உரையாசிரியர்களில் கலைஞரும் ஒருவர்.

பேராசிரியர் க.அன்பழகனார், "கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தொல்காப்பியத்தினை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்னும் வேணவாவுடன், மக்கள் படிக்க விரும்பும் எளிய நடையில், படிப்பவர் ஆர்வத்தை வளர்க்கும் சுவையான கதைக் குறிப்புகளுடனும், நினைவில் நிறுத்தத் துணையாகும் வரலாற்று விளக்கச் செய்திகளுடனும் இந்தப் பூங்காவை இயற்றியுள்ளார்"5 எனக் குறிப்பிடுவார். எனவே, கலைஞரின் உரை நடையானது, மேல்தட்டு மக்களிடம் மட்டுமல்லாமல் பாமரனுக்கும் எளிதில் புரியும் வண்ணம், இலக்கணத்தைத் தான் தெளிவுறக்கற்று, அதன் கடினத் தன்மையினை இயன்ற அளவு எளிமைப்படுத்தி அனைவரும் எளிமையில் அதன் சுவையினை உணரும்படி அமைத்துள்ளமையை அறியமுடிகிறது.

**நூலின் அமைப்பு:**

தொல்காப்பியம் முழுமையையும் அலசி ஆராய்ந்து, குறிப்பிட்ட நூற்பாக்களை மட்டும் தொகுத்து, அவை ஒவ்வொன்றிற்கும் 'மலர்' என எண் தந்து, "தொல்காப்பியப்பூங்கா" வாய் வடிவமைத்துள்ளார். அந்நூற்பாக்களை 142 மலர்களுக்குள் வருமாறு, ஒவ்வொரு மலருக்கும் ஒரு பெயரிட்டும் அழைத்துள்ளார். இவற்றுள்

- எழுத்ததிகாரத்திலிருந்து 17 நூற்பாக்களுக்கும்,
- சொல்லதிகாரத்திலிருந்து 8 நூற்பாக்களுக்கும்,
- பொருளதிகாரத்தில் அகத்திணையிலிருந்து 26 நூற்பாக்களுக்கும்,
- புறத்திணையியலில் 12 நூற்பாக்களுக்கும்,
- களவியலில் 13 நூற்பாக்களுக்கும்
- கற்பியலில் 15 நூற்பாக்களுக்கும்,
- பொருளியலில் 15 நூற்பாக்களுக்கும்.
- மெய்ப்பாட்டியலில் 16 நூற்பாக்களுக்கும்,
- உவமையியலில் 6 நூற்பாக்களுக்கும்,
- மரபியலில் 17 நூற்பாக்களுக்கும், என உரை அமைத்துள்ளார்.

ஒவ்வொரு தலைப்பின் கீழும் குறைந்தது ஒரு நூற்பாவிலிருந்து அய்ந்து நூற்பாக்கள் வரை எடுத்தாண்டு அவற்றுக்குப் பொருத்தமான கதைகளையும், நிகழ்ச்சிகளையும் கொண்டு சித்திரித்துள்ளார்.

'தொல்காப்பியப் பூங்கா' எழுதப் பட்டதன் நோக்கம்:

தொல்காப்பியப்பூங்கா எழுதப்பட்ட நோக்கத்தினைக் கலைஞர் கூறுகையில்,

"தொல்காப்பியப் பூங்கா 'கோவா'வில் ஒரு மாத காலம் ஓய்வெடுத்துக் கொண்டு படைக்கப்பட்ட ஓர் இலக்கியம்; தொல்காப்பியத்தின் பக்கம் போவதற்கே அஞ்சுகிறார்கள் என்கின்ற ஓர் அவச்சொல்லை, எப்படியாவது அகற்றிட வேண்டுமென்பதற்காக நுழைந்து தான் பார்ப்போமே என்று நுழைந்து பார்த்து, வெளியே வந்து ஒரு மாத காலத்திற்குப் பிறகு உலகத்திற்கு, தமிழகத்திற்கு, எழுத்தாளர்களுக்கு, இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு என்று அனைவருக்கும் நான் உரக்கச் சொன்னசெய்தி தான், அது ஒன்றும் ஆரண்யம் அல்ல, வனம் அல்ல, காடு அல்ல, நுழையமுடியாத இடம் அல்ல, நுழைந்து இன்பம் அனுபவிக்கக்கூடிய பூங்கா என்பதை அறிவுறுத்துகின்ற வகையிலே தான்

'தொல்காப்பியப்பூங்கா' என்று அந்த நூலுக்குப் பெயரிட்டுத் தமிழகத்திலும், தமிழகம் சார்ந்துள்ள பல்வேறு மாநிலங்களிலும் அதனைப் பரப்புகின்ற பணியிலே நான் ஈடுபட்டேன்"6எனக் குறிப்பிடுகின்றார்.

**கலைஞரின் இலக்கணப் புலமை:**

கலைஞர் இலக்கியப் புலமை வாய்ந்தவர் என்பதோடு, தொல்காப்பியப் பூங்காவிற்கு உரை எழுதிய பின் அவரது இலக்கணப் புலமையும் தெரிய வருகிறது. இலக்கணக் கொள்கைகளை உள்வாங்கி, அதனை இலக்கிய நிகழ்வுகளாகப் பதித்து உரை கண்டுள்ளார். எனவேதான், பேராசிரியர் டாக்டர் வ.அய்.சுப்ரமணியம். "கலைஞர் மு.கருணாநிதியின் தொல்காப்பியப் பூங்கா சுவையாக எழுதப்பட்டதால் முழுவதையும் (ஏறத்தாழ அய்ந்நூறு பக்கம்) படித்தேன். தொல்காப்பியச் சூத்திரங்கள் நூறுக்குத்தம் அனுபவத்துடன் உரை வகுத்துள்ளார். சில இடங்களில் அகம் செய்யுள் அமைப்பில் தமது உரையை வரைந்துள்ளார்.

சொற்பிழையோ எழுத்துப்பிழையோ இல்லை. கலந்தபோக்கும் இல்லை. ஒரு மாதத்தில் எழுதி முடித்ததாகக் குறித்துள்ளார். பல அலுவல்களுக்கு இடையில் இத்தகைய நீண்ட நூல் செய்தமைக்குப் பாராட்ட வேண்டும். அவர் விளக்கிய சூத்திரங்களில் பெரும்பகுதியும் பொருளியல் சூத்திரங்கள்தாம், அதனால் அவர் உரை சுவைபட அமைந்துள்ளது" (சுப்ரமணியம், வ.அய்., கலைஞர் படைப்புலகம், ப.1) என வியந்து பாராட்டுவது பெரிதும் சுட்டத்தக்கது.

**உரைப் பண்புகள்:**

இலக்கணத்தைப் பலாச்சுளையென இனிமையாக்கிப் படைத்துக் கொடுப்பதில் கலைஞர் எடுத்துக்கொண்ட பணி சிறப்பானது எனலாம். "மூலநூல்கள்தங்கச்சுரங்கம்என்றால், அவற்றின் உரைகள் தங்கச் சுரங்கத்திற்குள் அமைந்துள்ள மற்றொரு வைரச்சுரங்கமாகும். உரைகள் யாவும் அள்ளக் குறையாத அமுதசுரபிகள்," எப்போதும் வற்றாத ஆறுகள், காலமாற்றத்தால் நிலைகுலையாத இமயச் சிகரங்கள். சமயம், அரசியல் முதலியவற்றின் தாக்கத்தால் கலங்காத கடல்கள்" (அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், ப.56) என்பார் , உரைகள் குறித்து மு.வை.அரவிந்தன் அவர்கள்.

**தொல்காப்பியத்தின் தனிச் சிறப்பு பற்றிக் கூறுதல்:**

தொல்காப்பியத்தையே பல இடங்களில் புகழ்ந்தும், அதனுடைய இன்றியமையாமை பற்றியும் கூறியுள்ளார். அதன் சிறப்புகளையும், அதனைச் சிறப்பித்தும் பல இடங்களில் கூறியுள்ளார். காலத்தால் மூத்தகாப்பியம் தொல்காப்பியம் (ப.32), 'எல்லையில்லாப் பெருமை கொண்ட தமிழ் மொழிக்கு இலக்கணத் தோரணம் கட்டும் இந்தக் காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்தாலே நாம் நம்மையும் அறியாமல் செம்மாந்து நிற்போம் (ப.32) என்று கூறுகையில் தொல்காப்பியத்தின் மீது அவர் வைத்திருக்கும் உயர்ந்தமதிப்பு வெளிப்படுகிறது. தொல்காப்பியத் தோட்டம் (ப.36), தொல்காப்பியப் பலாக்கனியில் அந்தக் கரடுமுரடுதான் எழுத்ததிகாரம் (ப.36) என்றும், பலாப்பழத்தின் சுளையே பொருளதிகாரம் (ப.37) என்றும், அப்பலாச்சுளையைப் பாதுகாக்கும் பணியில் சொல்லதிகாரம் (ப.37) இடம் பெற்றுள்ளது என்றும் சுவைபடக் கூறியுள்ளார்.

*"இது இலக்கண நூல்தான் என்றாலும் ஏனைய மொழிகளில் உள்ள இலக்கணநூல் போன்றதன்று! அண்மைநூற்றாண்டில்தோன்றி வளர்ந்து வரும் மொழி ஆராய்ச்சியும், மேலை நாட்டவரால் விரும்பிப் போற்றப்பட்டு வரும் இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக் கலைகளாம் உயிரியல், உளவியல், வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே கொண்டு இயங்குகிறது" (கருணாநிதி, மு., கலைஞர், தொல்காப்பியப்பூங்கா, ப.202.) என்கிறார் கலைஞர். "காலத்தால் மூத்ததும் கடித்துத் தின்றால் மட்டுமே சுவை வழங்கும் கரும்பனையதும் எளிதாகவும் இனிப்புத் தரக்கூடிய கனிக்குவியல் கொண்டதும் தொல்காப்பியம் எனலாம்" (தொ.கா.பூ.ப.39.) என்றும் கூறுகிறார். தொல்காப்பியம்

தொடங்குவது கடவுள் வாழ்த்துடன் அன்று என்பதும் *(ப.32),* தொல்காப்பியமே தமிழர் வாழ்வின் பல்துறை பற்றி அறிதற்குத் துணை புரிவதாகும் *(ப.38)* என்றும் தொல்காப்பியம் பற்றிக்கூறுகிறார்.

"எல்லா மொழிகளுக்கும் ஒலிதான் மூலம் என்பதாலும் இஃது எழுத்ததிகாரம் என்பதாலும் முதல் நூற்பா எழுத்து எனத் தொடங்குகிறது. தொல்காப்பியரைப் பின்பற்றித் தான் போலும் அய்யன் வள்ளுவரும் "அகர முதல எழுத்தெல்லாம்" என்று திருக்குறளை எழுத்திலேயே தொடங்கியிருக்கிறார்"(தொ.கா.பூ...ப.40) என்று தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் ஒப்பிட்டு நோக்கியுள்ளார். தொல்காப்பியன் எனத் தம் பெயரை அமைத்துக் கொண்டுபழம் பெருமைக்கும் பண்பாட்டுக்கும் காப்பாக நூல் இயற்றிய தொல்காப்பியர் *(ப.67)* என்றும், 'தொல்காப்பியத்தின் வழிகாட்டுதலின் வழிவணிகர்கள் பின்பற்ற வேண்டும்' *(ப.108)* என்றும் குறிப்பிடுகிறார். தொல்காப்பிய நூற்பா, மற்றும் உரை, அதற்கான விளக்கம் இவற்றைப் படியுங்கள் *(ப.127)* என்றும் கூறுகிறார்.

"உலகில் பல பகுதிகளில் உருவான இனங்கள். மொழிச் சாதனத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கின எனினும், அவற்றில், மொழியில் இலக்கியம் கண்டு, அதற்கு இலக்கணமும் கண்டு, அய்யாயிரம் ஆண்டுக்கு முன்பே ஆரம்பமான வளர்ச்சிக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரே மெருகேற்றிக் கொண்ட பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் தமிழ் இனத்துக்கே உண்டு. அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதே தொல்காப்பியத்தின் பொருளதிகாரமாகும்" (தொ.கா.பூ.ப.42.) என்கிறார் கலைஞர்.

'தொல்காப்பியம் போன்ற நூல் இல்லையேல் நாம் காலக் கண்ணாடிகளை இழந்தவராயிருப்போம்' *(ப.135),* தொன்மைக்காலச் செய்திகளைத் தொகுத்து வழங்கும் தொல்காப்பியம் *(ப.210),* சிலம்புக்கு மிக முற்பட்ட காலத்திலேயே சிறந்த இலக்கண இலக்கியப் பூங்காவாகவும், தமிழர்க்குக் கிடைத்த கருவூலமே தன்னேரில்லாத் தொல்காப்பியம் *(ப.292),* இலக்கணக் கருவூலமாம் தொல்காப்பியம் *(ப.353),* காலத்தால் பாணினிக்கும், கவுடில்யருக்கும் முற்பட்டது தொல்காப்பியம் *(ப.527)* என்பன அவரது தொல்காப்பியம் குறித்த கணிப்புகளாகும்.

**தொல்காப்பியரைச் சிறப்பித்தல்:**

தொல்காப்பியரைப் பல இடங்களில் பல பெயர்கள் கொண்டு அமைத்துள்ளார் கலைஞர். அவையாவும் சிறப்புப் பெயர்களாகவே அமைந்துள்ளன. எம்மான் தொல்காப்பியர் *(ப.41),* ஐந்திரம் உணர்ந்த தொல்காப்பியர் *(ப.34),* காப்பியமேலோன் *(ப.257),* காப்பியர் *(ப.259),* தொல்காப்பியனார் *(பக்.261, 307),* அய்யன் தொல்காப்பியர் *(ப.292),* ஆசிரியர் தொல்காப்பியனார் *(ப.300),* மூத்த தமிழ் ஆசான் முதுபெரும் புலவர் தொல்காப்பியர் *(ப.314),* இலக்கணக்கிழவர் *(ப.400)* என்று பல இடங்களில்தொல்காப்பியரைச் சிறப்பித்து எழுதியுள்ளார்.

**உரையாசிரியர்களின் உரைத் தன்மைகள்:**

உரையாசிரியர்கள் பலரின் உரைத் தன்மைகள் குறித்தும், அதன் நிறை, குறைகள் பற்றியும் குறிப்பிடுகிறார். பொருளதிகாரப் பழந்தமிழ்ச் சொற்கள் அல்லது சொற்றொடர்களுக்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் பலரும், அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான உரைகளையோ, விளக்கங்களையோ வழங்கவில்லை என்றும், கற்பாறைப் பாதைகளிலேயே இலக்கியப் பயணத்தை நடத்தியுள்ளனர்" (தொ.கா.பூ.பக்.134,135) என்று பிற உரையாசிரியர்களின் தன்மை யினைச் சுட்டியுள்ளார். அவர்களின் நடை, கடினமானது என்று கூறினாலும், சில இடங்களில் அவர்களின் கருத்துடனேயே கலைஞரும் கருத்தொருமித்துள்ளார்*(ப.244).* வெள்ளை வாரணனாரைப் பற்றிக் குறிப்பிடுகையில், நடுவுநிலை நோக்குடைய நல்ல தமிழறிஞர், எச்சார்பும் இல்லாதவர்.

தமிழ்ச் சார்பு மட்டுமே உரியவர் (ப.485) என்றே புகழ்கிறார். முனைவர். தமிழண்ணல், முனைவர். ச.வே. சுப்பிரமணியன், முனைவர். வ.அய்.சுப்பிரமணியனார் ஆகியோரின் உரை மொழியியல் நோக்கில் அமைந்துள்ளது எனப் பாராட்டுவார் (ப.485)

**உரை முரண்பாடுகள் சுட்டல்:**

பல உரைகளைக் கற்றும், உரை முரண்பாடுகளுக்குள் நுழைந்து தனது உரை முடிபைத் தெரிவித்திருக்கும் இடங்களும் காணப்படுகின்றன. 'ஏனோர் மரபு' (மலர் 21), 'இன்பம்' (மலர் 64), 'வழக்கு' (ப.366), போன்றவற்றிற்கு அவர் தரும் உரை முடிபுகள் சிந்திக்கத்தக்கன. மீள்ஆய்வுக்கும்உரியன.

'மரபுநிலைதிரிதல் செய்யுட்கில்லை ' (மரபியல்.நூ.92) என்ற நூற்பாவிற்கு (மலர்97) அவர்தமது பல கவிதைகளை எடுத்தாண்டு உரை வகுத்திருப்பது குறிக்கத் தகுந்தது. ஹைக்கூ கவிதை வரை அவர் சிந்தித்திருப்பதும் (ப.506) போற்றுதற்குரியது. சங்கம் முதல் இன்றைய கவிதைகள் வரை அவர் சுட்டியிருப்பது அவரது இலக்கியப் பரப்பினை, நவீனஆற்றலைவெளிப்படுத்துவ தாய்அமைகின்றது.

**உவமைகள் எடுத்தாளுதல்:**

இலக்கியத்தை அழகுபடுத்தும் முதலணி அல்லது தாயணி உவமையேயாகும். அது காலத்தால் மிகவும் முற்பட்டதுமாகும். தொல்காப்பியர் 'உவமவியல்' என ஓரியலே வகுத்திருப்பது போலச் சங்கப்பாடல்களிலும் ஏறத்தாழ தொண்ணூறு விழுக்காடு உவமையே இடம் பெறுகிறது என்னும் ''தமிழண்ணல்'' (தமிழண்ணல்., இலக்கிய வரலாறு, ப.160.) கருத்துப்படி, இலக்கியத்தை அழகுபடுத்தும் முதல் அணி உவமையேயாகும். எல்லா அணிகளுக்கும் 'வேராய்' விளங்குவதும், மிகத் தொன்மையானதும், இவ்வுவமையணியே ஆகும். கவிதைகளைத் தகுதியாக்குவதும், அழகுபடுத்துவதும் உவமைகளேயாகும். இத்தகைய சிறப்புடைய 'உவமை'யினைக் கலைஞர் தமது உரையில் பல இடங்களில் கையாண்டுள்ளார். ஏறத்தாழ 150க்கும் மேற்பட்ட உவமைகள் நூலினுள் எடுத்தாளப் பட்டுள்ளன. கீழ்க்கண்டவாறு உவமைகள் எடுத்தாளப்படுகின்றன.

***1. அஃறிணையை உயர்திணையுடன் ஒப்பிடுதல்***

"நெல்லுக்குள்ளிருந்து அரிசி
தலை காட்டுவது போல
வெள்ளை விழிகள்
இமைகளின் இடுக்குகளில்
ஒளிகாட்டிய வண்ணமிருந்தன''
(தொ.கா.பூ.ப.41)

இங்கே நெல்லுக்குள் இருக்கும் அரிசியானது, இமைகளின் இடுக்குகளில் ஒளிவிடம் கண்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது.

''....... வற்றாத
நதி போலக் கருத்துகளை
வாரி வழங்கும்
ஆற்றல் மிகு அறிஞன்''
(தொ.கா.பூ.ப.62)

இங்கே அறிவியலின் செயலானது, கலைஞரின் உரைத்திறத்திற்கு ஒப்பிடப் படுகிறது.

''அவர்கள் தம்மை அறியாமல்
தலை கவிழ்ந்து கொண்ட காட்சி,
காம்புகனம் தாங்காத
காரணத்தால் குனிந்து கொண்ட
கமல மலர்க் கூட்டம் போல் இருந்தது
"(தொ.கா.பூ.ப.63)

அறியாமை கொண்ட மக்கள் தலைகவிழ்ந்த காட்சியானது, தாமரை காம்பு கனம்தாங்காது தலை குனிந்ததுடன் ஒப்பிடப்படுகிறது.

''தாயின்கை அவள்மீது
மெல்லப்படர்ந்த கொடி
போலவும்'' (தொ.கா.பூ.ப.167)

இங்கே தாயின் கையானது படர்ந்த கொடிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

"தனிமைத் தணலில்
பசலைக் கொடிவதங்கிடவோ நான்! "
(தொ.கா.பூ,ப.188)

தலைவி வாடுவது பசலைக் கொடி வாடுவதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

"போர் நடந்த இடத்தில், புலியொன்று
யானைகள் நடுவே சிக்கியது போல்
சிக்கி உறுதிப்பாட்டின்
வலிமையால் வெளிவருகிறாள்"
(தொ.கா.பூ,ப.196)

புலியொன்று யானை நடுவே சிக்கிய தன்மையானது, போரில் வீரன் வெளிப்பட்ட தன்மைக்கு உவமையாகக் கூறப்படுகிறது.

'வேட்டைக்கு வந்த வேந்தர் தாங்கள்
ஏதோ, ஒரு மானைப் போல் என்னை
வேட்டையாடிவிட்டு" (தொ.கா.பூ,ப.202)

இங்கே மான், ஒரு பெண்ணுக்கு ஒப்பாக்கப்படுகிறது.

***2. உணர்வுக்கு உவமை சுட்டல்***

மனித உணர்வுகளையே உயிர்களுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.

"துள்ளிக் குதிக்கிற முரட்டுக்
குழந்தையைப் போல அடம் பிடித்து
ஆட்டம் போடும் காமஉணர்வின்
உச்சகட்டமும் " (தொ.கா.பூ,ப.210)

இதில் துள்ளிக்குதிக்கும் குழந்தையின் செயலானது காமஉணர்வோடு ஒப்பிடப் படுகிறது. செயலை உணர்வுடன் ஒப்பிட்டுள்ளார் கலைஞர்..

***3. விலங்குகளை உவமைகளாக எடுத் தாளுதல்***

குயிலின் வாய் அலகானது புனலிக் கொடியின் மொட்டுக்களுக்காகப் ஒப்பிடப் படுகிறது.

"குயிலின் வாய் அலகு போன்ற கூரிய
மொட்டுகளையுடைய புனலிக்
கொடியின்
பூக்களால் தொடுக்கப்பட்ட
மாலையைக் கரிய
முடியில் சூட்டிக் கொண்டு"
(தொ.கா.பூ. ப.210)

***புலி:*** புலியின் கண்ணை வெண்மையான தோலுக்கு ஒப்பாய்ச் சுட்டியுள்ளார்.

"புலியின் கண்ணைப் போல்
வெண்மையான தோல் எனும்
கள்ளை" (தொ.கா.பூ,ப.232)

வெண்மைக்கு ஒப்பாய் புலியின் கண்ணைக் கூறுதல் இயல்பேயாயினும், தோல் எனும் கள்ளிற்கு ஒப்பாய்க் கூறுதல் இயல்புக்கு மீறிய சிந்தனையாய் உள்ளது.

***அட்டை:*** அறுபட்ட அட்டை துடிதுடிப்பது, இங்கே போரில் அறுபட்ட வீரனின் தலையும் உடலும் ஆடுவதற்கு ஒப்பாகக் கூறப்படுகிறது.

"அறுபட்ட அட்டையின் உறுப்புகள்,
பெருநிலத்தில் படியாமல்
ஆடித் துடிப்பது போல்
அறவே வீழ்ந்துபடாது
அவன் தலையும் உடலும்
கால்கைகளும் \
ஆடிக்கொண்டும் துடித்துக்
கொண்டுமிருக்கின்றன"
(தொ.கா.பூ, ப...233)

***மீன்கள்:*** மன்னனைச் சுற்றி மாற்றார் போரிடுவது, அயிரை மீன்களின் கூட்டத்திற்கு ஒப்பிடப்படுகிறது. இந்த உவமையிலிருந்து அவன் மாற்றாரைத் துச்சமென மதிப்பதையே அறியமுடிகிறது.

"தம்முடைய உயிரனைய வேந்தனை
மாற்றார் படைவீரர்களும்,
தளபதிகள் சிலரும்
அயிரை மீன்களின் கூட்டம் போல்
சூழ்ந்து கொண்டு
போரிடும்நிலையைச் சற்று
தொலைவில் போரிட்டுக்
கொண்டிருந்த ஒரு
வீரன் கண்டுவிட்டான்"
(தொ.கா.பூ, ப.233)

*புலி, நாகம்:* அடிபட்ட புலியும், நாகமும் மீண்டும் சீறியதென்றால் எத்தகைய கொடூரமான நிலை ஏற்படுமோ, அதனையே வீரனின் வீரத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

''என் தலைவனுக்கு
ஆபத்தா? என்று கனல் மண்டி விட்ட
கண்களோடும் கையில் ஏந்திய
கட்கமோடும்
அங்குப் பாய்ந்தான் அடிபட்ட
புலி போல!
மிதிபட்ட நாகம் போல!''

(தொ.கா.பூ,ப.233)

உவமையுடனேயே தொடரினை முடித்துள்ளபான்மை ஆர்வத்தைத் தூண்டுவதாயுள்ளது.

*பருந்து, கிளி:* தலைவன், தலைவியைக் காணச் சென்ற வேகத்திற்கு ஒப்பாக, பருந்து கிளியை நோக்கிச் செல்லும் வேகம் கூறப்படுகிறது.

''பருந்தொன்று கிளிநோக்கிப்
பாய்வது போல்
பாங்கன் சொன்ன திசைநோக்கிப்
பறந்து சென்றான்''

(தொ.கா.பூ,ப.264)

**பிற பொருள் உவமைகள்:**

*முரசு:* முரசுகள் முழங்கும் சப்தத்திற்கு உவமையாக இடிமுழக்கமும், கடலில் உண்டாகும் புயலும் கூறப்படுகிறது.

''போர் தொடங்கிட
இருதரப்பிலும் முரசங்கள்
ஒலிக்கின்றன. ஒன்று கோடைகால
இடிமுழக்கம் போல்! மற்றொன்று
கொந்தளித்துக் கடல் தாண்டும்
புயல்முழக்கம் போல்! "

(தொ.கா.பூ,ப.233)

இத்தொடரினை உவமையைக் கொண்டே முடித்திருப்பதும், கலைஞரின் நடைச்சிறப்பிற்குச் சான்றாய் உள்ளது.

***யாழ்:*** போரில் புறமுதுகிட்டு ஓடும் கோழையொருவனது செயலானது. யாழ் நரம்பு அதிர்வதற்கு ஒப்பாகக் கூறப்படுகிறது.

"ஒரு கோழைக்கு இங்கு
இருபடையிலும் இடமில்லை
யென்றுரைத்து
மிரட்சியினால் மீட்டிவிட்ட
யாழ் நரம்பு போல்
மேனி அதிர்வோரை
அடையாளம் கண்டு
அவரைக்களம் விட்டு
ஓட்டிவிட்ட நிகழ்ச்சிகளும்
ஒன்றிரண்டு விதிவிலக்காக உண்டு!"

(தொ.கா.பூ, ப.233)

**4. வினை உவமைகள் பயன்படுத்துதல்**

சிட்டுப் போல் பறந்து விட்டாள் என்பதில் அவள் பறந்துவிட்ட செயல் சிட்டுக் குருவி பறப்பதோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளமையால் இஃது வினை உவமையாகக் கருதப்படுகிறது''(தொ.கா.பூ, ப.480)

**5. பயன் உவமை எடுத்தாளுதல்**

"மழை நிகர்வள்ளல்'' ''(தொ.கா.பூ, ப.165) என்பதில் மழை எவ்வாறு நல்லவர் கெட்டவர் என்று பாராமல் பெய்கிறதோ, அதைப் போல் அரசன் என்பவன் தன்னைநாடி வரும் அனைவருக்கும் பொருளை வழங்குவான். இதில் மழை என்பது பயன்உவமை ஆகிறது.

**6. மெய் உவமைகள் சுட்டல்**

''சங்கனையகழுத்து'' (தொ.கா.பூ.ப.280) என்பதில் சங்கினைப் போன்று அவளுடைய கழுத்து இருந்ததைச் சொல்லியதால் இது மெய் உவமை ஆயிற்று.

**7. உருஉவமை பயன்படல்**

''பொன்னார் மேனியாள்'' (தொ.கா.பூ, ப.423) என்பதில் பொன்னைப் போன்ற நிறமுடையவள். இதில் உருஉவமை ஆயிற்று. "குழல் போன்ற மொழி" - இசையை செவியால் மட்டுமே உணர முடியும். ''தேன் போல் இனிக்கும்" - சுவையினை நாவினால் மட்டுமே உணர முடியும்.

**அணிகள் எடுத்தாளுதல்**:

***1. உருவக அணி***

*உவமை அணியில் உபமான உபமேயங்கள் வேறு வேறானவை என்ற எண்ணம் அகல்வதில்லை. உருவகத்தில் இரண்டும் ஒன்றே என்ற அபேத உணர்ச்சி தலையெடுக்கிறது. எனவே, உவமையின் செறிவார்ந்த வடிவமே உருவகம் எனலாம்.*

*ஆசிரியர் தலைவன் - தலைவியிடையே நிகழும் களவியல் மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுகையில்,*

*"தொண்டைவரை வந்த*
*வார்த்தை வெளிவராமல்*
*இரண்டு இதழ்க் கதவும் அடைத்தாள்!*
*அந்தி வானக் கன்னமிரண்டும்*
*மேலும் சிவந்திட*
*அவன் செயல் எதிர்பார்த்துக்*
*காத்திருந்தாள்" (தொ.கா.பூ, ப.442)*

*என்று உருவக அணியைப் பயன்படுத்தி யுள்ளார்.*

***2. தன்மை அணி***

*ஒரு பொருளின் தன்மையினை, அதற்குரிய சொற்களால் உரைப்பது தன்மை எனும் அலங்காரமாகும். இதனைத் தண்டியலங்காரம்,*

*"எவ்வகைப் பொருளும்*
*மெய்வகை விளக்கும்*
*சொன்முறை தொடுப்பது*
*தன்மை ஆகும்"*
*என்று கூறியுள்ளது.*
*ஆசிரியர் தமது நூலில் காதலின்*
*குணத்தன்மையினை,*
*"கண்துஞ்சார் பசி நோக்கார் "*
*(தொ.கா.பூ, ப.273)*

*"குளத்தில் கெண்டைமீன் துள்ள மறந்தாலும்*
*நதியில் வாளை மீன் வர மறுத்தாலும்*
*இந்தக் குமரி மட்டும் காத்திருப்பாள்*
*குமரனுக்காக! (தொ .கா.பூ.ப.301)*

*'கன்னற் சுவையாகக் கனியின் சாறாகக் (தண்டி.நூ.39)*
*காந்தப் பிணைப்பாக" (தொ.கா.பூ. ப.457)*

*என்று பல இடங்களில் தன்மையணியின் சுவைபட அமைத்துள்ளார்.*

***3. விரோத அணி***

*மாறுபட்ட சொல்லாலும், பொருளாலும் மாறுபட்டு இயல்புடைய விளைவைத் தருவது விரோத அணியாகும். இதனைத் தண்டியலங்காரம்,*

*"மாறுபடு சொற்பொருள்*
*மாறுபாட்டு இயற்கை*
*விளைவு தரஉரைப்பது*
*விரோதம் ஆகும்." (தண்டி.நூ.151)*

*என இயம்பியுள்ளது. தலைவன் - தலைவியின் கனவு வெளிப்பட்ட காலத்துத் தலைவி,*

*"நெருப்புக் கதிரவன் குளிரைப் பொழிந்தான்;*
*நீ என்னருகில் இருந்த போதென்றும்*
*குளிர் நிலா வெப்பம் கொட்டியது;*
*நீ என்னைப் பிரிந்திருந்த போதென்றும்,*
*உடன் போக்கா? உடனடி மணவிழாவா?*
*உதடிரண்டும் ஒட்டித்தான்*
*கிடக்குமா? என்*
*வினாவுக்கு விடையளிக்க*
*ஒரு நொடி நேரம்*
*திறப்பதற்கும் மறுக்குமா?'*

*(தொ.கா.பூ, ப.575)*

*என்று புலம்புவதாக ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.*

*இதில் நெருப்பு, குளிர், வினா, விடை, அருகில், தொலைவில், ஒட்டுதல், திறத்தல், 'எனச் சொற்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருத்தலின் சொல்விரோதம் ஆயிற்று. உடன்போக்கு, மணவிழா என்பன பொருள் விரோதம் ஆயிற்று.*

*4. பின்வருநிலையணி*

*செய்யுளுள், முன்னர் வந்த சொல்லாவது பொருளாவது தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ பின்னர்ப் பலவிடங்களில் வருவது பின்வருநிலையணி ஆகும்.*

*"முன்வருஞ் சொல்லும்*
*பொருளும் பலவயின்*
*பின்வரும் என்னிற்பின்*
*வருநிலையே" (தண்டி.நூ.160)*

*இதில் ஒரு முறை வந்தசொல், ஒரே பொருளில் பின்னும் பின்னும் வருதல் சொல்பொ ருள் பின்வருநிலையணி.*

*"நிலைபெறவே வாழ்வது*
*தான் நிகரில்லாக் காஞ்சி,*
*தலைகொடுத்துத் தன்மானம்*
*காத்திடச் சொல்லுவது தான்*
*காஞ்சி (தொ.கா.பூ,ப.254);*

*இங்கு 'காஞ்சி', 'காஞ்சி' என்று காஞ்சித்தி ணையைப்பற்றிக்கூறியுள்ளார்.*

*5. அதிசயஅணி*

*கவிஞன் தான் கருதிய ஒரு பொருளினது அழகினை உவந்து சொல்லுங்கால் கவிஞருலகத்தின் கற்பனை வரம்பைக் கடவாத நிலைமையோடு கற்றோர் வியக்கும் வண்ணம் கூறுவது அதிசய அணியாகும்.*

*"மனப்படும் ஒரு பொருள்*
*வனப்புவந்துரைப் புழி*
*உலகு வரம் பிறவா நிலைமைத்தாகி*
*ஆன்றோர் வியப்பத் தோன்றுவது*
*அதிசயம்" (தண்டி.நூ.53)*

*என்பது நூற்பா.*

*"சிலம்புக்கு மிக முற்பட்ட*
*காலத்திலேயே*
*சீர்மிகு இலக்கண இலக்கியப்*
*பூங்காவாக,*
*தமிழர்க்குக் கிடைத் தகருவூலம்*
*தன்னேரில்லாத் தொல்காப்பியம்!"*
*(தொ.கா.பூ.ப.292)*

*இங்குத் தொல்காப்பியத்தின் சிறப்பி னையும், தொன்மையினையும்; வியந்து கூறுவதற்காய், சிலம்பிற்கு முந்தியது என்றும், தமிழர்க்குக் கிடைத்த கருவூலம் என்றும் கூறியிருப்பதால் இது அதிசய அணியாயிற்று.*

*6. நுட்பஅணி*

*நுட்பம்என்பதுஅறிதற்குஅருமையானது. பிறர் கருத்தினை உணர்ந்து அதற்குரிய மறுமொழியை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பினாலோ அல்லது தொழிலினாலோ ஊகித்து அரிதாக அறியத்தக்க செய்கைத் திறமுடையது நுட்ப அணியாகும்.*

*"தெரிவு வேறுகிளவாது குறிப்பினும்*
*தொழிலினும்*
*அரிதுணர் வினைத் திறம் நுட்பமாகும்."*
*(தண்டி. நூ.45)*

*என்பது நூற்பா.*

*"இந்தக் காலகட்டத்துப் பெண்களின் நிலையோடும், அவர்கள் அனுபவிக்கும் உரிமைகளோடும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலகட்டத்துப் பெண்களின் நிலை ஆண்களின் நிலை ஆகியவற்றைப் பழம்பெரு வரலாறுகளிலோ, இலக்கியங்களிலோ படித்துப் பார்த்துவிட்டு அவற்றைத் தவறாகவும், தரக்குறைவாகவும் விமர்சித்துக் கொண்டிருப்பதைவிட, அக்கால நிலையை அறிந்து கொள்ளத் துணைபுரியும் சாதனங்களாக மட்டுமே அவற்றைப் பார்க்க வேண்டும்" (தொ.கா.பூ, ப.354) இத்தகைய நுட்பமான கருத்தைக் கூறிநுட்ப அணியை அமைத்துள்ளார்.*

*7. உயர்வு நவிற்சி அணி*

*கற்போரும் கேட்போரும் வியந்து மகிழும்படி பெரியதைப் பெரியதாகவும், சிறியதை மிகச்சிறியதாகவும் திறமையுடன் கூறுவது இது. மனப்படும் ஒரு பொருள் வனப்புவந்துரைப்புழி, உலக வரம்பிறவாநிலைமைத்தாகி, ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்! எனத் தண்டியலங்காரம் கூறும் அதிசய அணியே*

உயர்வு நவிற்சி எனலாம்.

"வல்லினம், மெல்லினம்,
இடையினம் ஒன்றுபட்டுத்
''தமிழ்'' என்றே
தகத்தகாய ஒளிபரப்பிடும்போது;
தமிழர்கள் பல கூறுகளாகப்
பிளவுபட்டுப்
பாழ்பட்டுக் கிடப்பது நியாயந்தானா?
"(தொ.கா.பூ.ப.65)

இங்குத் தமிழ் எழுத்தின் ஒற்றுமையைக் கூறிவியக்கச் செய்து, அதனுடனேயே, தமிழர்கள் தம்முள்பிளவுபட்டுக் கிடக்கும் சிறுமையினையும் வியந்து கூறியுள்ளார்.

"ஆளுமைக்காக அமைக்கப்பட்ட
எல்லாப் பிரிவுகளுமே வருணம்
காரணமான பிரிவுகள்
என்பது குறுகிய நோக்குடன் வாதாடும்
'பெரியோர்'(?)களின் வக்கிரச்
சிந்தனையே
தவிர வேறில்லை " (தொ.கா, 149)

இங்கு வருணப் பாகுபாட்டைப் பிரித்தவர்களைப் பெரியோர் என்று இழிவுபடுத்திக் கூறியுள்ளார்.

"பண்டைத் தமிழர் ஒருவருக்கொருவர்
போரிட்டு
வெற்றியும் தோல்வியும்
அடைந்தவர் எனினும்,
இருநிலையிலும் அவர்கள்
வீரம் விளைத்தனர்.
தீரம் காட்டினர். மானம்
காத்தனர் என்பதற்குத்
தொல்காப்பியத்திற்குத் துணை நின்று
புறநானூறும் அவ்வையார்
வாயிலாகச் சான்று
கூறுகிறதன்றோ!" (தொ .கா.பூ, ப.211)

இங்குப் பண்டைய வீரர்களின் வீரமும், மானமும், தொல்காப்பியம் அதனைப் பதிவு செய்துள்ள தன்மையும், அதனையே அவ்வையார் எடுத்துக்கூறியுள்ள முறையையும் வியந்து போற்றியுள்ளார்.

"விஞ்ஞானப் புதுமை
காரணமாக அமெரிக்க
நாட்டு முயற்சியினால் ஆ
ம்ஸ்ட்ராங் என்பவர்
சந்திரமண்டலத்தில் காலடி வைத்து,
கொடி நாட்டித் திரும்பினார்.
அங்குக் கிடைத்த
ஒருவகைக் கற்களையும்
கொண்டுவந்தார் " (தொ.கா.பூ,ப.213)

இங்குப் புதுமையைக் கண்டுவியந்து கூறுவதாய் அமைத்துள்ளார்.

எனவே, கலைஞர்தொல்காப்பியத்திற்குப் புதுமையாகத் தமது பாணியில் பல்வித உத்திநயங்களோடு உரையெழுதிச்செல்கிறார். இவரது உரை அவரது இலக்கிய இலக்கணப் புலமையை, படைப்பாற்றலை, திறனாய்வுப் புலமையை, சொல்லாற்றலை, தமிழ், தமிழர் குறித்த உணர்வுகளை, சமுதாய விழிப்புணர்வுகளை, வெளிக்காட்டிச் சிறந்து விளங்குகிறது எனலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1. அழகேசன், சு., 'அழகுஇதழ், ஜனவரி 2003, ப.52.
2. En. Britanaica, Vol.18, PP.59 & 592.
3. பரமசிவானந்தம், அ.மு., தமிழ் உரைநடை, ப.47.
4. கருணாநிதி, மு.,கலைஞர், தொல்காப்பியப்பூங்கா, ப.33.
5. கருணாநிதி, மு., கலைஞர், தொல்காப்பியப்பூங்கா, ப.18.
6. கருணாநிதி, மு., கலைஞர், தொல்காப்பியர் விருதும்! தூயவர்பாராட்டும்! ப.11.
7. சுப்ரமணியம், வ.அய்., கலைஞர் படைப்புலகம், ப.1.

**துணைநின்ற நூல்கள்:**


1. அகத்தியலிங்கம் ச.. - மொழியியல் - சொல்லியல் - 1, பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், சென்னை (1979)

2. அகத்தியலிங்கம் ச., சொல்லியல் -2, வினையியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடு - 13.,அண்ணாமலைநகர், சென்னை (1982)

3. அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை (1968)

4. அழகேசன், சு., (தொ.ஆ) இலக்கண ஆய்வு, தொல்காப்பியம் தொல்காப்பியர் மன்றம், நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 69-1, நீதிமன்றசாலை, நாகர்கோவில்(2001)

5. ஆதித்தன், ஏ., இலக்கணப் புதுமை, சங்குமுத்து வெளியீடு, மதுரை (1982)

6. கருணாநிதி மு. கலைஞர் – தொல்காப்பியப் பூங்கா, தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை (2003)

7. சண்முகதாஸ், அ., தமிழ்மொழி இலக்கண இயல்புகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம் (1992)

8. ஜுன் லாரன்ஸ், செ., (ப.ஆ), தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை (2001)

**ஆசிரியர் குறிப்பு:**

திருமதி முனைவர். பி. ஸ்ரீதேவி அவர்கள், இளங்கலைத் தமிழ் இலக்கியம், சிவகாசி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்கஸ் ராஜரத்தினம் மகளிர் கல்லூரியிலும், முதுகலைத் தமிழ் இலக்கியம், சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியிலும், முனைவர் பட்ட ஆய்வினை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். 'தமிழ்நூல் உணர்த்தும் தமிழ் இலக்கணம்' என்னும் இலக்கண நூலை வெளியிட்டுள்ளார். 'பரிபாடலில் ஆன்மீகமும் உலகியலும்' எனும் நூலினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார். பதிப்பாசிரியராக 6 நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஏறக்குறைய ஐம்பது ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் மலேசியா, இலங்கை போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று கட்டுரை வாசித்தும், கருத்தரங்க நிகழ்வினை நிகழ்த்தியும் வந்துள்ளார். ஒருங்கிணைப்பாளராகத் தேசிய மற்றும் பன்னாட்டு நிகழ்வுகள் பல நிகழ்த்தியுள்ளார். காந்தியச் சிந்தனை, விவேகானந்தர் மையத் தேர்வு, நாட்டுப்புறவியல் ஆகியனவற்றில் பட்டயங்களைப் பெற்றுள்ளார். பத்து ஆண்டுகளுக்கும் மேல் ஆசிரியப் பணியில் அனுபவம் பெற்றவர். தற்சமயம் சாத்தூர், ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

●

### Who are the Dravidians?

- *It is a fact that the term Dravidians and Nagas are merely two different names for the same people. The Nagas were a very ancient people. It must also be remembered that the Nagas were in no way an aboriginal or uncivilized people. Not only did the Naga people occupy a high cultural level but history shows that they ruled a good part of India.*
- ***The word Dravida is the name of language of the people and does not denote the race of the people****.Nagas was a racial or cultural name and Dravida was their linguistic name.*
- *Thus, the Dasas are the same as the Nagas and the Nagas are the same as the Dravidians. In other words what we can say about the races of India is that there have been at the most only two races in the field, the Aryans and the Nagas.*

---

- *(Dr. Babasaheb Ambedkar Writings and Speeches: Vol.7 - The Untouchables? Part III, Chapter VII)*

**Prof. Dr. B.R. AMBEDKAR,**
**M.A., M.Sc., Ph.D., D.Sc.**

**Hon'ble Minister (Ist Minister) of Law and Justice, Union of India (1947-51).**

**Minister of Labour in Viceroy's Executive Council (1942-46).**

**Chairman of the Constitution Drafting Committee - Constituent Assembly of India (1946-50).**

**Member of Parliament - Rajya Sabha for Bombay State (1952-56).**

# பெரியாரியல் நோக்கில் நற்றிணை



**முனைவர் மு.சு.கண்மணி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை*

**கட்டுரைச் சுருக்கம்:**

*நற்றிணைப் பாடல்கள் எழுதப்பட்ட காலச் சூழலும், மக்கள் வாழ்நிலையும் காலத்தால் முந்தியது. மிகவும் பழமையானது. அவ்வாறிருக்க தற்காலத்தில் எழுந்துள்ள மக்கள் எழுச்சி சிந்தனைகளான இசங்கள் 19, 20ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. இருப்பினும் எல்லா 'இசங்கள்' தோன்றுவதற்கு முன்பே 'புத்தர்' மனிதநேயக் கொள்கைகளை அனைத்து மக்களுக்காக உருவாக்கி மக்களிடையே சென்றடையச் செய்தார். அது புத்திசமாக உருவானது. எல்லா வகை இசங்களும் சொல்லும் செய்தி ஒன்று தான். எல்லா மக்களும் சமம். எந்த நிலையிலும் உயர்வு தாழ்வு இல்லை என்பதே. மார்க்ஸியம் என்பது பொருளாதார சமத்துவக் கொள்கை. பெண்ணியம் என்பது பாலின பேதமற்ற சமத்துவம் பெரியாரிசம் என்பது பிறவி பேதமற்ற சமத்துவமும்,சுயமரியாதையும் கலந்த மனிதநேயக் கொள்கை ஆகையால் பெரியாரிசத்தை அடிப்படையாகக் கொண்டு நற்றிணையை ஒப்பிட்டு ஆய்வது இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது.*

*காலத்தால் பழைமை வாய்ந்த பண்டைத் தமிழரின் வாழ்வில், தற்கால இசங்களுடன் எவ்வாறு ஒத்துப்போகும்? அதனை ஒப்பிடுவது சரிதானா? என்ற கேள்வி எழுவது இயற்கை. சங்க இலக்கியங்கள் சொல்வது மக்களின் அற்றைக் கால வாழ்வியல், இசங்கள்; சொல்வது, மனிதனின் தனிமனித சுதந்திரமும் உரிமையும் ஆகும். ஆகவே, அன்றைய கால வாழ்க்கையில் இத்தகைய சமமான தன்மையுடன் வாழ்க்கையை மனிதர்கள் வாழ்ந்தார்களா? என்பதே ஆய்வின் அடிப்படைப் பொருண்மைகளாகும்.*

*நற்றிணை சங்க இலக்கியங்களுள் முதன்மை நூலாகக் கருதப்படுகிறது. இது 400 பாடல்களைக் கொண்டது. தனித்தனியாகக் காணப்படும் பாடல்களை ஒன்றாகத் தொகுத்தளித்துத் தந்துள்ளனர். 187 புலவர்களால் பாடப்பட்ட இத்தொகுப்பில் 10 பேர் பெண்பாற் புலவர்கள்; இதில் 234ஆம் பாடலும், 385 ஆம் பாடலின் ஒரு பகுதியும் கிடைக்கவில்லை என்பதை இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர். பெயர் தெரியாப் புலவர் வரிசையில் இடம்பெற்றுள்ள 190 பாடலை நக்கண்ணையாரும், 165 பாடலை நல்வெள்ளையாருமாகிய பெண்பாற் புலவர்கள் எழுதியதாகச் சில ஆய்வாளர்கள் வரிசைப்படுத்தியுள்ளனர். அதனடிப்படையில் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 25 எனக் கணக்கிடப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.*

நற்றிணை அகம் பற்றி அமைந்திருப்பதால். அதனைத் தொல்காப்பிய இலக்கண வரையறைப் படி கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்ற அடிப்படையில் களவு வாழ்க்கையையும், அது தொடர்பான செயல்பாடுகளும், (வரைவு) கற்பு வாழ்க்கை தொடர்பான செயல்பாடுகள் இவை இரண்டும் அன்பின் ஐந்திணையில் அடங்குவன.

களவு வாழ்க்கையின் தொடக்கம் ஆண் கைக்கிளையில்தொடங்குவதே இயல்பாக உள்ளது. தலைவனின் மனம் தலைவியின் அழகைக் கண்டு அதில் ஈர்ப்பு ஏற்பட்ட பின் பெண்ணின் சைகைக் குறிப்பின் மூலம் அவள் காதலை உணர்ந்து கொள்ளுதல். நற்றிணையில் களவு தொடர்பான பாடல்கள் 46 இடம் பெற்றுள்ளன. அதில் 25 தலைவன் கூற்று பாடல்கள்(104, 123, 128, 140, 152, 155, 160, 185, 181, 199, 201, 204, 209, 213, 215, 220, 245, 255, 245, 324, 349, 359, 392, 938). அதற்கு அடுத்த நிலையில் 14 தோழி கூற்றுப் பாடல்கள்இடம்பெறுகின்றன. (6,8,13,25,32,39,65,75,77,80,82,95,101). தலைவி கூற்றுப் பாடல்கள் (332,334,335,382,102,54,70) 7 மட்டுமே இடம்பெற்றுள்ளன. இதில் இந்தப் பாடல்கள் காதல் மிகுதியைத் தெரிவிக்கும் பாடல்களாக உள்ளன.

இதில் கைக்கிளை என்று சொல்லப்படும் ‘முதல் பார்வை’ களவு என்பது தலைவனிடம் மட்டுமே தோன்றுவதாய் அமைந்துள்ளது. இதைத் தான் அக இலக்கணங்களும் கூறுகின்றன. கைக்கிளைக்குத் துணை நிற்கும் தோழியின் கூற்றுகள் அடுத்த நிலையில் இருக்கின்றன. ஆனால், தலைவியின் கைக்கிளை குறித்த பாடல்கள் நற்றிணையில் எங்கும் இடம் பெறவில்லை. குறிப்பாக 75ஆவது பாடலில் தலைவன் கூற்றில் தோழியைப் பார்த்து “சேயரி பரந்த ஆயிழை மழைக்கண்,உறாஅ நோக்கம் உற்ற என், பைதல் நெஞ்சம் உய்யுமாறே” என்ற மாமூலனாரின் வரிகள் தலைவியிடம் தன் காதலை எடுத்துக் சொல்லி அவள் நோக்கத்தை அறிந்து வருமாறு தலைவன் தோழியிடம் கூறுகிறான். பார்த்தவுடன் காதல் கொண்ட தலைவன் தலைவியின் விருப்பினை அறிய, தோழியின் உதவியை நாடுவதாகப் பெரும்பான்மையான பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பார்த்தவுடன் ஏற்படும் காதல் குறித்துப் பெரியாரியம் கூறுவது என்னவெனில் “உண்மைக் காதல் என்பது ஒருவரை ஒருவர் பார்த்தவுடன் உண்டாகுமா? அல்லது கொஞ்ச நாளாவது பழகியவுடன் உண்டாகுமா? பார்த்ததும் ஏற்பட்ட காதல் உயர்வானதா? அல்லது சிறிது நாள் பழகியபின் ஏற்படும் காதல் உயர்வானதா? சரீரத்தைத் கூடச் சரியாய்த் தெரிந்து கொள்ளாமல் தூர இருந்து பார்ப்பதாலேயே ஏற்படும் காதல் நல்லதா? அல்லது சரீரத்தின் நிலை முதலியவைகள் தெரிந்து திருப்தியடைந்த காதல் நல்லதா? என்பவைகளைக் கவனிக்கும்போது சரீர மாறுபாட்டாலும் பொருத்தமின்மையாலும் ஏன் எப்படிப்பட்ட உண்மைக் காதலும் மாறமுடியாது என்பதற்கு என்ன விடை பகர முடியும்? அல்லது உண்மையாகவே ஒருத்தன் ஒருத்தியுடன்காதல் கொண்டு விட்டால் ஒருத்தி தப்பாய் அதாவது வேறு ஒருவனிடம் காதல் கொண்டு விட்டதாகக் கருத நேர்ந்தால் அது பொய்யாகவோ மெய்யாகவே இருந்தாலும் தன் மனதுக்குச் சந்தேகப்படும்படியாய் விட்டால் அப்போது கூட காதல் மாறாமல் இருந்தால் தான் உண்மைக் காதலா? அல்லது தன் மனம் சந்தேகப்பட்டால் அதிருப்தி அடைந்தால் நீங்கிவிடக் கூடிய காதல் குற்றமான காதலா என்பதற்கு என்ன மறுமொழி பகர முடியும்? (25-பெ.ஏ.ஆ.ப-25)

மேலே கூறப்பட்ட பெரியாரின் கொள்கைஅடிப்படையில்இயற்கைப்புணர்ச்சி என்பதற்கு இலக்கியவாதிகளும், இலக்கண ஆசிரியர்களும் குறிப்பிடும் பொருளே இங்கு கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது. இயற்கைப் புணர்ச்சி என்பது இயல்பாய் ஆணும், பெண்ணும் சந்திக்கும் போது ஏற்படும் காதல் உணர்வு. அவ்வாறு இருப்பின் தோழியின் உதவியைத் தலைவன் நாட வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி இயல்பாகத் தோன்றும் அதைத்தான் பெரியார் அவர்கள் கேள்வியாய்க் கேட்கிறார்.

தொல்காப்பியர் இதனை

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும்"
(தொல்.களா.5)

நற்றிணையில் இருவரும் ஒத்த பார்வை கொண்டு ஒரு மனதுடன் களவில் ஈடுபடுவது போன்ற பாடல்களைக் காணமுடியவில்லை. இயற்கைப் புணர்ச்சிப் பாடல்களிலும் தலைவியின் அழகில் ஈடுபட்டு காதலுற்ற தலைமகனைத் தான் காணமுடிகின்றது.

"நோயும் நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த
வேய்வனப் புற்ற தோளை நீயே
என்னுடன் வருதியோ நன்னடைக்
கொடிச்சி" *(82)*

என்பதில் தலைவன் தன் விருப்பமே மேலோங்கி நிற்பதைக் காணலாம்; அதேபோல் காமம்மிக்க கழிபடர் கிளவி என்னும் கூற்று பெரும்பான்மை களவுக் காலத்தில் தலைவன் கூற்றாகவே நற்றிணையில் வெளிப்படுகிறது. தலைவியின் காதல் உணர்வு வெளிப்பாட்டுத் தன்மை குறைவாகவே உள்ளது. நற்றிணையில் *4* இடங்களில் மட்டுமே தலைவியின் வெளிப்பாட்டுத் தன்மையுடைய பாடல்களைக் காணமுடிகின்றது.

களவு நீட்டிக்கும் தருவாயில் ஊரின் கண் 'அலர்' தோன்றுதலின் காரணமாக இற்செறித்தல் என்னும் வீட்டுச் சிறை வைப்பு தலைவிக்கு மட்டுமே நிகழ்கிறது. பகல் குறியிடம் வருதல் அனைவருக்கும் தெரிந்ததால், இரவுக் குறியிடம் வருதல் தொடர்கிறது.

இரவுக் குறியிடம் வருதல், அல்லகுறிப் படுதல், வரைந்துகொள்ளத் தோழி வற்புறுத்துதல், வரையாது காலம் தாழ்த்துதல் தொடர்பான பாடல்கள் நற்றிணையில் அதிகம். *138* இடங்களில் இத்தகைய பொருண்மை களை உள்ளடக்கியதாய்ப் பாடல்கள் காணப்படுகின்றன. இதில் இற்செறித்தல் தொடர்பான *12*பாடல்கள் *(27, 136, 132, 134, 173, 191, 192, 194,232, 319, 372, 373)*அமைந்துள்ளன.

வரையாது காலம் தாழ்த்தும் தலைவனை விரைவில் வரைந்து கொள்ள வற்புறுத்தும் *126* பாடல்களைக் *(4, 11, 15, 17, 19, 22, 23, 31, 36, 44, 45, 47, 49, 51, 53, 55, 57, 58, 60, 61, 63, 67, 68, 72, 78, 78, 83, 88, 91, 93, 94, 96, 98, 104, 108, 116, 117, 119, 122, 125, 135, 145, 147, 151, 154, 156, 158, 159, 168, 172, 175, 178, 182, 188, 195, 203, 206, 211, 222, 223, 227, 228, 231, 233, 235, 236, 239, 247, 251, 253, 254, 251, 258, 255, 261, 263, 267, 268, 272, 273, 275, 276, 282, 283, 285, 287, 288, 292, 295, 297, 299, 304, 308, 309, 311, 313, 314, 317, 322, 323, 326, 327, 328, 331, 336, 338, 339, 344, 365, 347, 351, 353, 354, 355, 357, 358, 363, 365, 368, 375, 376, 378, 383, 385)* காணமுடிகின்றது.

இற்செறிப்பிற்கு உட்படுத்தப்படத் தலைவி படும் துயரினை

"கழி சேர் மருங்கில் கணைக் கால் நீடிக்
கண்போற் பூத்தமை கண்டும் நுண்பல
சிறு பாசடைய நெய்தல்
குறுமோ சென்றெனக் கூறா தோளே"
*(27)*

குடவாயிற் கீரத்தனார் பாடல் வழி காணலாம்.

வரையாது காலம் தாழ்த்தியமைக்குக் காரணம் தலைவனாகவே காணப்படுகிறான். நற்றிணைப் பாடல்களில் பழகிய தலைவன் மறந்து விடுதல், தொடர்புகளைத் தொடராமல் இருத்தல் *(108)*, அன்னை அறிந்ததால் தலைவனை வற்புறுத்துதல் *(145)*, தலைவியின் உடல் மாற்றத்தினைத் தாய் அறிந்ததால் விரைவில் மணமுடிக்க வற்புறுத்துதல் *(251)* என்று பல காரணங்களால் களவு வாழ்விலிருந்து வரைந்து கொள்ள தோழியால் வற்புறுத்தப்படுகிறது. ஆண், பெண் இருவராலும் மேற்கொள்ளப்படும் காதல் என்பது இருவரும் மனம் ஒப்பித் திருமணம் செய்துகொள்ளக் குடும்பத் தடை இருந்துள்ளது. குறிப்பாகத் தாய் மறுப்பதாகவும், இற்செறிப்பதாகவும் காணப்படுகிறது. வரைந்து கொள்ளும் நோக்கமும் செயல்பாடுகளும், பெண் மற்றும்

பெண்ணைச் சார்ந்த நட்பாகிய தோழியிடமே அதிகமாக காணப்படுகிறது.

காதல் காலங்களில் தவிப்பும், ஏக்கமும் கொண்டிருக்கும் தலைவன், வரைதலின் வேட்கை சற்றுக் குறைந்தவனாகவே தென்படுகிறான். இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியர் கூட்டம் போன்றவைகளின் போது ஆண் ஆர்வப்படுவதும், திருமணம் என்று வந்தவுடன் காலம் தாழ்த்துவதும், மற்றவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் திருமணத்திற்கு தயார் செய்வதும் ஏன்? என்ற கேள்வி எழுகிறது. பெரியாரின் கேள்விகள் இங்கு உண்மையாகின்றன.

உண்மைக் காதலாக இருப்பின் இருவருக்கும் வரைதலின் வேட்கை ஒன்றாயத்தானே அமைய வேண்டும்? எப்படி மாறுபடும்? சில இடங்களில் தலைவன் மறந்துவிட்டானோ என்ற ஐயம் ஏற்படும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. காதல் என்பது உண்மையாக இருந்தால் எப்படி மறந்து போவான்? என்ற கேள்வி எழுகிறது. அப்படி இருந்தது என்றால் இயற்கைப் புணர்ச்சி என்பது தெய்வத்தினால் கூட்டுவித்தல் என்ற கருத்து எப்படிச் சரியாக இருக்க முடியும்?

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப” –
(தொல்.கற்.4)

திருமணம் இன்றி ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்த தமிழ்ச்சமுதாயத்தில், திருமண முறை கொண்டுவந்ததற்கான காரணத்தைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

இயற்கையான காதல் என்றால் அதில் எவ்வாறு பொய்யும் வழுவும் தோன்றியிருக்கக் கூடும்? ஆக, ‘காதலில்’ பொய் கலந்துள்ளதை அறியமுடிகிறது. இதைத்தான் பெரியார் “காதலில் இரண்டுவிதமாம்; ஒன்று உண்மைக் காதலாம்; மற்றொன்று வெறும் காதலாம். இல்லாத வஸ்துவுக்கு இரண்டு பெயர்கள் இருந்தாலென்ன? 100 பெயர்கள் இருந்தாலென்ன? பெயரைக்கொண்டு ஆவதொன்றுமில்லை. வஸ்து உண்டா இல்லையா? என்பதுதான் கேள்வி? (பெரி. விடு.11.05.1943) என்று குறிப்பிடுகிறார்.

பெரியார் கேட்கும் கேள்வியை நற்றிணையோடு பொருத்திப் பார்ப்பது அவசியம். காதல் வேட்கையாக நற்றிணையில் உள்ள 43 பாடல்கள். ஆனால், அக் காதலை இல்வாழ்க்கையை நோக்கித் திருப்ப முயற்சி மேற்கொள்ளும் பாடல்கள் 138. காதல் என்பது உண்மையானால் திருமணத்தைத் தூண்டச் செய்ய வேண்டிய அவசியம் ஏன் வரவேண்டும்? அதைத்தான் பெரியார் “வஸ்து உண்டா? இல்லையா?”என்று இயல்பாய்க் கேட்கிறார். ‘காதல்’ என்பது உண்மையா? பொய்யா? என்ற கேள்வி எழுப்புகிறார் பெரியார்.

வரையாது காலம் நீட்டிக்கும் காலத்தில் ‘நொதுமலர் வரைவு’ வருகிறது. அதாவது அயலவர் பெண்கேட்டு வருதல்; அது தொடர்பான பாடல்கள் நற்றிணையில் 165, 208, 300 ஆகிய மூன்று பாடல்களில் வருகிறது. காதலைத் தன் தாய், தந்தையிடம் கூற முடியாச் சமூகச் சூழலையே இதன் வழி அறியமுடிகிறது. பெரியார் அவர்கள் ”திருமணம் என்பது வயது வந்த அறிவு வந்த ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம்மந்தப்பட்ட காரியமே ஒழிய மற்ற யாருக்கும் வேறு எந்த கட்டுப்பாட்டுக்கும் சம்பந்தப்பட்டதல்ல” (பெரி.கு.அ.30.06.1940) திருமணம் என்பதில் ஆண் பெண் ஒப்புதல் அவசியம். இதில் மற்றவர்கள் கருத்துச் சொல்லவோ, தலையிடவோ எந்த உரிமையும் கிடையாது என்பதே பெரியாரின் கருத்தாக வெளிப்படுகிறது.

காதல் வாழ்க்கையை நிறைவுக்குக் கொண்டு வரத் திருமணம் செய்தல் வேண்டும். அந்தத் திருமணத்திற்குப் பொருளீட்டி வரும் பொறுப்பு ஆண்மகனைச் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது. நற்றிணையில் வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிதல் தொடர்பான 17 பாடல்கள் இடம் பெற்றுள்ளன (7, 37, 38, 56, 87, 133, 183, 197, 218, 219, 238, 244, 249, 277, 284, 364, 369). வரைவு இடை

வைத்துப் பொருள்வயின் பிரிதல் என்பது திருமணத்திற்கான பொருளினை ஈட்டி வந்து பெண்ணின் தாயாரிடம் அளித்தல் எனக் குறிக்கப்படுகிறது.

"காதலின் முலைவிலை விடத்தமை
பாங்கி
காதலிக்கு உணர்த்தலும் காதலி
நற்றாய்
உள்ள மகிழ்ச்சி உள்ளலும்"
(ந.அ.பொ.வரை-174)

தலைவியை மணந்து கொள்வதற்காகத் தலைவன் தலைவியின் பெற்றோருக்கு முலை விலையாகப் பெரும்பொருள் கொடுத்தலைப் பாங்கி தலைவிக்கு உணர்த்துதலும், அந்தப் பொருளைக் கண்டு தலைவியின் தாய் அடையும் மகிழ்ச்சியும் இங்கே குறிப்பிடப்படுகிறது. இதன் குறிப்பாகத் தலைவி மீது தலைவன் கொண்ட காதலில் உண்மைத் தன்மை அளவிடப்படுகிறது. அதனை வைத்துத் தலைவியை அவன் பாதுகாக்கும் முறையும் தீர்மானிக்கப்படுகிறது. பெரியார் பெண்களைத் தற்சார்பு உடையவர் களாக வாழ வேண்டும் என்கிறார். "பெண்கள் இன்னொருவரை நம்பித்தான் பிழைக்க வேண்டுமென்கின்ற நிலையில் இல்லாமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் தொழிலுள்ளவர்களாக பெண்கள் இருக்க வேண்டும்" (த.பெ.விடு 26.06.1969).

ஆணை நம்பி வாழ வேண்டியிருப்ப தாலும், திருமணத்திற்கு முன்பே ஓர் ஆண்மகன் தன் தகுதியை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதினாலும், வரைவில் இடையில் பொருளீட்டும் பெரும் பொறுப்பு ஆணைச் சார்ந்ததாக உள்ளது. அந்தக் கட்டாயம் இருப்பதனால் வரையாமல் காலம் தாழ்த்தும் நிலையில் ஓர் ஆண்மகன் தள்ளப்பட்டிருக்கலாம் என்ற கருத்து சிந்திக்கத்தக்கது. சமுதாயக் கட்டமைப்பில் ஆண் பெண் என்ற இருபாலரும் இயல்பாக இல்லாமல் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையினை உணர முடிகின்றது. இந்த இயல்பற்ற சூழலை நற்றிணை பதிவு செய்கிறது.

"இன மீன் ஆர்ந்த வெண் குருகு மிதித்த
வறுநீர் நெய்தல் போல
வாழாள் ஆதல் சுறா தோயே"

பெயர் அறியப்படாத புலவரால் பாடப்பட்ட 183ஆவது பாடலில். தலைவன் பிரிவைத் தாங்க இயலாப் பெண்ணையும், வேறு வழியின்றிப் பொருளீட்டப் போகும் ஆணையும் தோழி கூற்றாகப் பதிவு செய்துள்ளார், 249ஆவது பாடலில் உலோச்சனார். தலைவியின் சேரிக்குத் தேரில் வருகிறான்; அங்கு பூக்கள் புலியின் தோலைப் போலக் காட்சி தர, குதிரை நிற்காமல் விரைந்து சென்று விட்டது. ஊர் அலர் தூற்ற அதனால் மீண்டும் வந்து மணமுடிப்பானா என்ற ஐயம் எழுவதாகத் தலைவி கூற்றுப் பாடல் அமைந்துள்ளது. இதன் மூலம் ஆணின் வலிமை கேலிக்கு உட்பட்டால் மனம் நொந்து போகும் நிலை ஆணிற்கு ஏற்படுவது பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரைவிற்கான முயற்சியில் ஒன்றாக 'மடலேறுதல்' என்ற நிகழ்வு இருந்துள்ளது. இந்த மடலேறுதல் ஆண்களுக்கானதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது பெருந் திணைக்கான குறிப்பாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. (தொ.பொ.அ.தி.56). காமத்தின் மிகுதியால் ஆண்மகன் மடலேறுவதாகக் குறிக்கப்படுகிறது. இதுகுறித்து நற்றிணையில் ஒரு பாடல் உள்ளது. தலைவன் கூற்றுப் பாடலான 146, இதனைக் கந்தரத்தனார் பாடியுள்ளார். 'மதிப்பில்லாத மலர்களைச் சூடி மயக்கமுற்றது போல், பனைமடலால் செய்யப்பட்ட குதிரையில் ஏறி, பல ஊர்களிலும் சுற்றி வருகின்றாய்' என்று தலைவன் தனக்குத்தானே கூறிக் கொள்கிறான் தோழி காதில் கேட்குமாறு. அதற்குக் காரணம் "அருளிக் கூடும் ஆர்வ மாக்கள் நல்லேம் என்னுங் கிளவி" என்கிறான். தன்னை நல்லவன் என்று ஏற்றுக் கொண்டு பெண் தர வேண்டும் என்ற எண்ணத்தினாலே இவன் மடலேறுகின்றான்.

ஆணும், பெண்ணும் உடன்பட்டு வாழும் வாழ்வியலைப் பெரியாரியம் ஏற்கிறது. கட்டாயத் திருமணம் என்பதே கிடையாது

பெரியாரியத்தைப் பொறுத்தவரையில். மடலேறுதல் என்பது அறிவற்ற செயலாகவே கருதப்படுகிறது. ஆனால், இந்த மடலேறுதல் தொடர்பான செய்திகள் பெரியார் கொள்கைப் பதிவுகளில் இல்லை. ஏனெனில் நடைமுறை வாழ்க்கையில் சிக்கலை மையப்படுத்தி அதற்கு மனிதத் தன்மைக்கேற்ப விடையாய் இருப்பதே பெரியாரியமாக, அவரின் கொள்கையாக உள்ளது.

பெண், தன் வீட்டார் உடன்படாமை யினாலோ அல்லது தன் காதலை வெளிப் படுத்தும் மன உறுதியற்ற காரணத்தினாலோ தோழியின் அறிவுறுத்தலின்படி உடன்பட்டு உடன்போக்கு மேற்கொள்கிறாள். தலைவனுடன் உடன்போக்கு சென்றவிடத்து நற்றாய், செவிலித்தாய், தலைவன், கண்டோர் கூற்றுகள், இடம்பெறுகின்றன. இதில் பெரும்பான்மை தலைவியின் மென்மையும் அச்சமும் பக்குவமின்மையும் நினைந்து வருவதாக அமைந்துள்ளது.

உடன்போக்கைத் தவிர்த்தல், *(362, 162)* உடன்போக்கில் இடைச் சுரத்தில் செவிலித்தாய் *198,* நற்றாய் செவிலித்தாய் புலம்பல் *(110, 143, 179, 184, 271, 279, 293, 305, 29, 66)* இடைச்சுரத்தில் தலைவன் *(149, 202, 384, 9, 10, 76, 264, 362)* என்று உடன்போக்கு தொடர்பாக நற்றிணையில் *21* பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தலைவியின் மென்மைத் தன்மையைத் தலைவன் உணர்ந்தவனாய் உடன் போக்கினைத் தவிர்க்கும் பாடலாக *162* பாடல் அமைந்துள்ளது. செல்வச் செழிப்பாக வாழ்ந்த தன் மகள் தான் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து வருந்தாமல் இருக்கின்ற வாழ்க்கையைச் செம்மையாக வாழும் திறன் கொண்ட மகளின் கற்பு வாழ்க்கையை நினைத்துப் பெருமைப்படும் செவிலித்தாயின் கூற்று நற்றிணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> ''அறிவும் ஒழுக்கமும் யாண்டு
> உணர்ந்தனள் கொல்
> ……………………………………………..
> பொழுது மறுத்து உண்ணும் சிறுமது
> கையளே *(110)*

என்ற பூதனாரின் பாடல், கற்பு வாழ்க்கையில் பெண்கள் எப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் வந்தாலும், மகிழ்ந்து வாழும் முறை தான் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும், அப்படிப்பட்ட நிலையில் பெண் உணவின்றி வாழ்கிறாள் என்று தாய் வருந்தாமல், பெண்ணின் திண்மையையும், பக்குவமான வாழ்வியலையும் நினைத்து மகிழ்வதாக உள்ளது. அதுவே அறமாகவும் போற்றப்பட்டுள்ளது.

எந்த நிலை வந்தாலும் பெண் பொருளீட்டப்போதல் கிடையாது என்பதையே வாழ்வியல் முறையாகத் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் கூறுகின்றன. *143* பாடலில் நற்றாய் ''நறிய நாறும் நின் கதுப்பு என்றேனே'' என்று கேட்கிறாள். இதன்வழி பெண்கள் திருமணத்திற்கு முன் வாசனை மிகுந்த மலர்களைச் சூடுவதில்லை என்பது பெறப்படுகிறது. அதில் அவள் உடன்போனது தவறில்லை; நான் அதனை அறிந்து கொள்ளாமல் இருந்ததுதான் தவறு என்று தன்னைத்தானே நொந்து கொள்வதாக கண்ணகன் கொற்றனார் பதிவுசெய்கிறார். இதன்வழி பெண்ணின் காதலை மனதார இயல்பாக எடுத்துக்கொள்ளும் சமுதாயம் இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது. *271*ஆவது பாடலில் உடன்சென்ற மகளை மீட்டு வரும் காட்சியைக் காண விரும்பாத நற்றாயின் நிலை பதிவாகியுள்ளது. *279*ஆவது கயமனார் பாடலில் ''சிலம்பு கழீஇச் செல்வம், பிறருணக் கழிந்த என் ஆயிழை அடியே'' என்பதின்வழி, திருமணத்தின் போது பெண்ணின் காலில் அணியப்பட்ட சிலம்பினைக் கழியும் சடங்கு நிகழ்த்தப்படுவதையும், அதைப் பார்க்க முடியாமல் போவதை நினைத்துத் தாய் வருந்துவதாக அமைந்துள்ளது.

*293*வது பாடலில் தன் ஊரின் பெருமையைக் கூறும் நற்றாய்

> ''மணிக் குரல் நொச்சித் தெரியல் குடிப்,
> பனிக்கள் ஆர்கைப் பார்முது குயவன்
> ……………………………………………..
> விழவுத்தலைக்கொண்ட பழ விறல்
> மூதூர்''

என்று கூறுகிறாள். இதன்வழி பழங்குடியைச் சேர்ந்த குயவன் வாழும் ஊர் என்று பெருமைபடக் கூறுவதினால், குயவன்குடித் தொழிலின் பெருமையைப் பாராட்டும் சமுதாயம் என்பது பெறப்படுகிறது. அப்படிப்பட்ட பெருமை மிக்க குடியில் பிறந்த பெண்ணைப் பிரிந்து தான் வருந்துவது போல, ஈரமில்லாத நெஞ்சம் கொண்ட அவனின் தாய் என் போன்ற வருத்தத்தை அடைய வேண்டும் என்று கோப மொழி கூறுவதாய் அமைந்துள்ளது. இதன்வழி ஆணின் வீட்டிலும் திருமண மறுப்பு இருந்திருக்க வாய்ப்பு இருந்திருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. 362ஆவது பாடலில் பாலை நிலத்தின் களைப்பு நீங்கத் தலைவியைச் சிவந்த நிறமுடைய தம்பலப் பூச்சிகளைப் பார்த்தும் பிடித்தும் விளையாடும்படி கூறுகிறான். இதன்வழி பெண்ணின் திருமண வயது எதுவாக இருந்திருக்கும்? என்ற ஐயம் எழுகிறது. விளையாட்டுப் பிள்ளையான மனநிலை கொண்டவர்களாகத் தான் பெரும்பான்மையான பதிவுகள் உள்ளன. அணிகலன்களைத் திருத்தத் தெரியாதவள் என்ற பதிவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நற்றிணை கூறும் செய்திகளுக்கும் பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துக் களுக்கும் முற்றிலும் முரண்பாடுகள் உள்ளன. இருப்பினும் எல்லாக் குடிமக்களையும் சமமாக மதிக்கும் தன்மையும் அவர்களின் தொழிலின் திறமைகளைப் போற்றும் தன்மையும் பெரியாரின் மனிதநேயக் கருத்துக்களில் ஒன்றாகும். அது நற்றிணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெற்றதாய் மகளைப் பிரிந்தால் பின் சென்று பார்க்க இயலாமல் புலம்புவதும் மற்றவர்கள் மூலம் அதனைத் தெரிந்து கொள்வதும், மனித நேயத்திற்கு முரணானது. சிறுவயதில், பக்குவம் பெறாவயதில் திருமணம் முடித்தலையும்கொ கொண்டு பெரியாரியம் முரண்படுகிறது.

களவு வெளிப்படுத்துதலும் அதனால் அலர் உருவாவதும், தாய் அறிதலும் அதன் காரணமாகத் தலைவன் தலைவியைச் சந்திக்க வராமல் சிறிது காலம் இருப்பான். அதனைச் ‘சேட்படுத்துதல்’ என்பர்; நற்றிணையில் சேட்படுத்துதல் தொடர்பான பாடல் ஒன்று மட்டுமே இடம்பெற்றுள்ளது. (301). பாண்டியன் மாறன் வழுதியின் பாடலில் தோழி கூற்றாக இது அமைந்துள்ளது.

வரைதல் என்பதும் அந்த மகிழ்வைப் பகிர்ந்து கொள்வதும் இயல்பாகச் சுட்டப்படுகிறது. நற்றிணையில் 5 பாடல்களில் இப்பொருண்மை அமைந்துள்ளது. (131, 138, 35, 163, 294). இது நற்றிணையில் தோழி தலைவியின் கூற்றாக வெளிப்படுகிறது. இதன் வழி, காதல் மணம் முடிப்பதில் பல சிக்கல்கள் இருந்துள்ளதை உணரமுடிகின்றது.

களவு வாழ்விலிருந்து மீண்டு வருதல், வரைதலின் பின் கற்பு வாழ்க்கை எனப்படும் திருமண வாழ்க்கை. இவ்வாழ்க்கையில் பல்வேறு காரணங்களால் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் இயல்பாய் உள்ளது. அதில் ஒன்றுதான் பரத்தையர் பிரிவு. ஆணும் பெண்ணும் இணைந்ததே இல்லற வாழ்க்கை என்பர். இதில் பெண் மட்டுமே அறத்தோடு நிற்கவேண்டி கட்டாயப் படுத்தப்படுகிறாள். ஆண்,தன் மனம் போன போக்கில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் உரிமையைச் சமுதாயம் அளித்துள்ளதைப் பரத்தையர் தொடர்பின் வழி உணர்த்தப்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட பரத்தையர்களோடு கூடி இன்பம் துய்ப்பது ஆணின் இயல்பான பண்பு நலன்களாக கொள்ளப்படுகிறது.

நற்றிணையில் பரத்தையர் தொடர்பான பாடல்கள் 38 இடங்களில் இடம் பெறுகின்றன. இப்பாடல்கள் தலைவி, தோழி, தலைவன், பரத்தை கூற்றுகளாக அமைந்துள்ளன. பரத்தையர் பிரிவு காரணமாக ஏற்படும் ஊடல் (தலைவி தோழி 28) (20, 30, 50, 74, 90, 120, 127, 167, 170, 176, 18, 200, 210, 207,203,250, 260, 270, 208, 209, 291, 310, 330, 340, 350, 360, 380) பரத்தை தன் மன உணர்வை வெளிப்படுத்துவதில் (8), தலைவன் (370) (40, 100, 150, 176,216, 315, 320,390, 400) கொள்ளும்படி சுட்டுகின்றனர்.

நற்றிணையில் இல்வாழ்க்கையில் பெண்கள் ஆண்கள் மீது ஊடல் கொள்ளும்

ஒரே ஒரு இடம் பரத்தையர் தொடர்புதான். வறுமை, இல்லாமை போன்ற எத்தனைத் தடைகளையும் ஒரு பொருட்டாக மதிக்காத பெண்கள், பரத்தையர் தொடர்பை மட்டும் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

களவுக் காலத்தில், வரையும் நாள் தொட்டும் தலைவி இல்லையென்றால் உயிர் வாழ இயலாது என்றளவில் தன் அன்பை வெளிப்படுத்தும் தலைவன், கற்புக் காலத்தில் பரத்தையுடன் உறவு கொள்கிறான். பரத்தையர் தொடர்பை உலக இயல்பாக ஏற்றுக்கொள்ளும், கருத்தியல் நிலவி வந்துள்ளது. தலைவன் ஒன்றுக்கு மேற்பட்ட பரத்தையர்களுடன் உறவு கொண்டிருந்தமை பரத்தையர் கூற்றுப் பாடல்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. தலைவியுடன் உறவு கொள்ள இயலாக் காலங்களில் பரத்தையரை நாடுதல் இயற்கை என்று கருதும் சமுதாயமாக இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

நற்றிணையில் பரத்தையர் தொடர்பான செய்திகளாகப் பரத்தையரைப் பிரிந்த தலைவனுக்கு வாயில் மறுத்து இங்கே வராதே, அங்கே உனக்காகக் காத்திருப்பாள் என்று கூறுதல் (20,30); தலைவனை நாணயமில்லாதவன் என்று பழித்துக் கூறுதல் (60), மகப்பேறு காலத்தில் நிகழ்ந்த பரத்தையர் பிரிவிற்கு வாயில் மறுத்தல் (74), அவளிடம் ஊடியதால் இங்கு வந்தனர். உன்னைக் காண வேண்டிய நோக்கில் அல்ல என்று கூறித் தோழி வாயில் மறுத்தல் (90), "எமக்கே வருகதில் விருந்தே" என்று ஊடல் தணிக்கும் வாயிலாக விருந்தினரை வீட்டிற்கு அழைத்து வரும் தலைவன் (120). என வருகின்றன.

பெயர் அறியப்படாத புலவரின் பாடல் (170) அழகிய வனப்பினை உடைய விறலியிடமிருந்து தங்கள் கணவன்மார்களைக் காத்துக்கொள்ள வேண்டும்; எப்படி என்றால்:

> "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
> பலருடன் கழித்த ஒள்வாள் மலையன்
> ஒரு வேற்கு ஓடி யாங்கு நம்
> பெருமையது எவனோ இவள்
> வன்மை தலைப்படினே"

வீரர்களின் வேறு படைக்கு அஞ்சி ஓடிய ஆரியப்படையினை ஒப்பிட்டுக் கூறியுள்ளார். தோழி வாயிலாக வந்தும் வாயில் மறுக்கும் தலைவி தலைவனை ஒரு காலத்திலும் ஏற்க மாட்டேன் என்கிறாள் "என்னொடு கழியும் இவ் இருவரது இகலே"(170)

தொழிலால் வரும் செல்வம், செல்வமன்று; தன்னைச் சூழ்ந்தவரை நெஞ்சம் நோகாமல் வைத்திருப்பதே உண்மையான செல்வமாகும்.(210) நீ பரத்தையை நாடிச் செல். அது உன் விருப்பம், ஆனால், என்னைத் தொடாதே (260) உன் செயல் நத்தை, ஆமைக் கறி உண்ணும் மன்னர்களின் இழிசெயல் போல் உள்ளது.(280) பரத்தையரை நாடிய தலைவனை நோக்கி தோழி, உன்னை ஆண்மகன் என்று யாரும் கருத மாட்டார்கள் (290) நீ பரத்தையரை நாடுகிறாய்; ஆனால், தலைவியோ உன் மகளைப் பெற்று உன்னையே நினைத்து வாழும் கற்புடையவளாய் இருக்கிறாள் (330); பரத்தையர் தொடர்பு, ஊடல் குறித்த பாடல்களில் ஒன்று மட்டும் தலைவன் கூற்றுப் பாடலாக உள்ளது. (370) அப்பாடலை உறையூர்க் கதுவாயச்சாத்தனார் பாடியுள்ளார்.

> "புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து
> அவ்வரித்
> திதலை அல்குல் முதுபெண்டு ஆகி"

குடிபெருக உதவுபவள் தலைவி குழந்தை பெற்றதால் முதுமை அடைந்தாள். அதனை தான் காண நாணமுற்றாள். அத்தகையவள் இன்று ஊடல் கொண்டாள் எனப் பாணனிடம் வருந்தும் தலைவன் மனநிலையினைப் பதிவு செய்துள்ளார்.

பெரியாரியம் என்பது மனிதநேய அடிப்படையிலான சமன்பாட்டுக் கொள்கை. மனிதச் சமன்பாட்டை ஆரியம் மறுப்பதால் அதனை எதிர்த்தார். நற்றிணைப் பதிவில் மலையனது வேற்படைக்குத் தாக்குப் பிடிக்க இல்லாமல் ஓடிய ஆரிய படையைப்போல்

விறலியின் கண்வேல் பட்டு கணவன்மார்கள் சென்று விடுவர் என்று கூறுகின்றனர். இதிலிருந்து இரு செய்தியினை அறிந்து கொள்ள முடிகின்றது. பரத்தையை அல்லது விறலியை மலையமானின் வேற்படையோடும், கணவன்மார்களை ஆரியப் படையுடன் ஒப்பிட்டும் கூறியிருப்பது கணவன்மார்களின் மேல் இருந்த கோபமே பெரிதாகக் கொள்ளப்பட்டது தெரியவருகிறது.

நற்றிணைக் காலத்திலேயே ஆரியப் பகை இருந்தது. அதைத் தமிழ் மன்னர்கள் ஓடச் செய்துள்ளனார் என்ற வரலாற்றுக் குறிப்பினையும் அறிய முடிகிறது.

பெண்களுக்குப் பரத்தையர் பிரிவினால் ஏற்படும் கோபம் கணவன் மீதே ஒழிய மிலேச்சர்களையும், அவர்களின் உணவையும் கீழ்நிலையில் எண்ணியிருந்த பதிவின்மூலம் மனிதர்களுக்குள் சமமற்ற நிலை இருந்திருந்ததை உணர்ந்து கொள்ள முடிகிறது.

நற்றிணையின் பரத்தையர் கூற்றுப் பாடல்கள் 8 இடம்பெற்றுள்ளது(40,100, 150, 150, 176, 216, 315, 320, 390, 400) தன்னை நாடி வந்த தலைவன், தலைவிக்குக் குழந்தை பிறந்ததும் யாரும் அறியாவண்ணம் இரவில் கள்வனைப் போல் நமது வீட்டிற்கு வந்துவிட்டார் (40)

என் கைகளைப் பற்றியதையும், என்னைப் பற்றியதையும் உன் மனைவியிடத்தில் கூறுவேன் என்றவுடன் தலைவன் அச்சப் பட்டதை பரத்தை கூறுவது (100), குதிரையின் மீதேறி எம் சேரி வந்தவன்இன்று வேறொரு பெண்ணை நாடியுள்ளதை அறிந்த என் தாய் கோல்கொண்டு அலைகிறாள். வஞ்சகம் செய்துவிட்டதால் மீண்டும் என்னிடம் வர வாயில் கேட்கிறாய் பாணரே, வந்தால் நகைப்புக்கு இடமாகும் என்கிறார்(50), தலைவன் மீது காதல் கொண்ட பரத்தை அவன் அன்பு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றாலும் அவனைத் தவிர வேறு யாரையும் நான் நினைக்கமாட்டேன் (216), புதுப் பரத்தையின் வரவினைக் கண்டு தன் கணவன்மார்களை வீட்டில் அடைத்து வைத்ததினால், தன் தலைவனைப் புதிய பரத்தை இழுத்துச் சென்றுவிட்டாள் (320), விழாக்களின் போது தன்னை அலங்கரித்துக்கொண்டு விழாவிற்குச் செல்ல வேண்டும் என்ற நிலை பரத்தையர்களுக்கு இருந்துள்ளதை ஔவையாரின் 390 பாடல் சுட்டுகிறது.

அப்படி விழாவிற்குச் சென்றால் தலைவன் என்னைச் சேருவான்; சேர்ந்தால் தலைவியின் நலம் கெடும் என்று அமைந்துள்ளது. தலைவியை நினைந்து வருந்துவதுபோல் அறியப்படுகிறது. தன்னை நாடி வந்த தலைவன் தன்னை மறக்காமல் மீண்டும் வரவேண்டும் என்பதை "நின் இன்று அமைந்தவன் ஆயின் இவண் நின்று இன்னா நோக்கமொடு எவன் பிழைப்பு உண்டோ?(400) என்கிறாள். நீ வரவில்லையெனில் நான் பிழைக்க வழியில்லை என்று கூறுவது தெரியவருகிறது.

பரத்தையரை இழித்தும், பழித்தும் பேசும் சமுதாயம் காலந்தோறும் இருந்துள்ளதை நற்றிணையின் பாடல்களின் வழி அறிய முடிகின்றது. உறவுகொண்ட தலைவனைப் பழிப்பது, அவனிடம் ஊடல் கொண்டு தணியாது இருத்தல் போன்றவை குறித்த பதிவுகளே அதிகம். பரத்தையர் உறவு கொண்டவனை ஆணென்றே மதியா நிலை, மிலேச்சர் உணவு போல் உன் செயல் கீழானது என்றுரைத்தல் போன்றவற்றினை அறியமுடிகின்றது. பெரியார், "குணத்திற்குத் தெய்வீகக் கல்யாணம் என்று ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்துப் பெண்களை வஞ்சிக்கின்றோம். ஆகையால், பெண்களுக்கு கல்யாண விடுதலை வேண்டும்" என்கிறார்; அதன் அடிப்படையில் நற்றிணையில் மண வாழ்க்கையை அடையப் போகும் முன்பும் காதலினால் பெண்களுக்கான சிறைவைப்பும், உலகம் தெரியாதவளாகப் பெண்ணைக் காட்டித் தோழி வழி மணவாழ்க்கைக்கு உட்படுவதும், மண வாழ்க்கையின் போது ஆணின் பொருளாதாரத்திற்குத் தக்கவாறு குடும்பம் நடத்த எத்தனிப்பதும், ஆணின்

மன மாறுபாட்டினை வேறு வழியின்றி ஏற்பதும், தன் கணவனைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் அற்றவளாக இருப்பதும் என்று பெண்ணுக்கான அடிமை வாழ்க்கையும் அதற்கான கட்டுப்பாடுகளும் தொடர்கின்றன.

பரத்தைமை என்கிற விபச்சாரம் சார் தொழிலை மேற்கொள்ளும் பெண்களின் நிலையைக் கண்ணுற்ற பெரியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கும் முத்துலட்சுமி அம்மையார்க்கும் இடையில் புரிதலை ஏற்படுத்திப் பொட்டுக்கட்டுதல் என்னும் முறையினை, அதாவது தேவதாசி முறை ஒழியச் சட்டமியற்றக் காரணமாக இருந்தார். பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் 'தாசிகளின் மோசவலை' என்ற நூலினை எழுதியுள்ளார். அதில் தேவதாசிப் பெண்களின் வாழ்வியலில் ஏற்படும் இன்னல்களும் கொடுமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய பெண்களுக்கு சமுதாய அங்கீகாரமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டின் அழைப்பிதழில் ''விபச்சாரிகள் என்று தன்னைக் கருதிக் கொண்டிருக்கும் பெண்களே, மாநாட்டிற்கு வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

நற்றிணையில் காட்டப்படும் பரத்தமை மேற்கொள்ளும் பெண்கள் குற்றம் புரிந்த உணர்வுள்ளவராகவும், தன்னை இழிந்தவர்களாகவும் கருதிக் கொண்டிருப்பது பரத்தைக் கூற்றுப் பாடல் வழி தெரிகிறது. அவர்களும் சமுதாயம்மதிக்கும்இயல்பு வாழ்க்கை வாழ ஆசைப்படுவதும், அது கிடைக்காவிட்டாலும்,தான் அது போல் வாழ்வேன் என்று உறுதி ஏற்பதும் பாடல்களின் பதிவுகளாக உள்ளது. மன ஏக்கங்களையும் சமுதாயப் புறந்தள்ளல்களையும் ஏற்று, எவ்வாறு ஒரு மனிதன் வாழ முடியும்? மனிதர் வாழ்வில் முதன்மை அங்கீகாரம் அதான். அந்த அங்கீகாரமற்ற வாழ்வினை மேற்கொள்ளும் இழிநிலையைத் தாங்கி வாழ்நாள் முழுமையும் பயணிக்கும் பொழுது எவ்வகையான உளவியல் சிக்கல்களுக்குப் பெண்கள் ஆளாகி இருப்பார்கள் என்பது ஆய்வுக்கு உட்பட்ட வருந்தத்தக்க செய்தியாகும்.

இளமைக்காலத்தில் பரத்தமை மேற்கொண்ட பெண்கள் முதுமை அடையும் போது பிழைப்புக்கு வழியில்லை என்ற நிலை ஏற்படும் என்பது கண்கூடு. அதைத்தான் ஒரு பரத்தைப்பெண்,''நீ என்னை மறந்து விடாதே மீண்டும் வரவில்லை என்றால் பிழைப்புக்கு வழி இல்லை'' என்று வெளிப்படையாகவே கூறுவதை நற்றிணையில் பரத்தைக் கூற்றுப் பாடலாக உள்ளது. பரத்தைமை என்பது இன்பம் துய்ப்பதற்காக ஆணாதிக்கச் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட முறை என்பதை இதன் வழி உணர முடிகிறது. இவ்வளவு வசவுகளுக்குப் பின்னும் தலைவன் பரத்தையை நோக்கிச் செல்லுதலும், ஒரு பரத்தையை விடுத்து மற்றொரு பரத்தையிடம் செல்லுதலும்இயல்பாக இருந்துள்ளது. குழந்தை பெற்றெடுத்தவுடன் பெண்ணை முதுபெண்டிர் என்று அழைக்கும் நிலையும், ஆனால் வயதில் மூத்த இவனோ இளமை சுகம் வேண்டிச் செல்லுதல் எந்த வகையான சமுதாய ஏற்பு என்று கேள்வியாக உள்ளது. தலைவியுடன் உறவு கொள்ள இயலாத சூழலில், பரத்தையை நாடுதல் என்பது எவ்வாறு அறமாகும் என்ற கேள்வி எழுகிறது.

பரத்தை பொருள் நாட்டம் மட்டுமே உடையவள் என்ற பொதுப்புத்தி யுள்ளது. ஆனால், நற்றிணைப் பாடல் வழி பரத்தையர் அன்புக்காக ஏங்குபவர்களாகவும், புறம் பேசுதல் கண்டு அஞ்சுபவர்களாகவும், தலைவன் தன்னை மறந்து விட்டால் தன்னைப் புரப்பவர் இல்லை என்று அச்சம் கொள்பவர்களாகவும் தன்னை விட்டுப் புதுப் பரத்தையிடம் செல்வதை வெறுப்பவர்களாகவும், தலைவிக்கு இரங்குபவர்களாகவும், தலைவனின் செயலைத் தலைவியிடம் சொல்லிவிடுவேன் என்றுதலைவனைக்கேலிபேசுபவர்களாகவும், தன்னை நோக்கித் தான் தலைவன் வருகிறான் தானாகத் தலைவனிடம் செல்லவில்லை

என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

பரத்தையர் உறவினால் தலைவி ஊடல் கொள்கிறாள் பரத்தையர்களைத் திட்டுவதில்லை; தலைவனையே திட்டுகிறாள்; பரத்தையர்கள் தங்கள் நிலையைப் பெருமையாக எண்ணுவதாக எங்கேயும் பதிவு இல்லை.அன்பில்லா, ஆதரவில்லாச் சூழ்நிலையை எண்ணி வருந்துவதாகவே பதிவுகள் காணப்படுகின்றன. அப்படியிருக்க ஆண்கள் தங்களின் வாழ்வியல் கட்டற்ற சுதந்திரத்திற்காகப் பெண்களின் வாழ்வைச் சுரண்டி வாழ்ந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

தந்தை பெரியார் அவர்கள் "விபச்சாரம் என்ற வார்த்தை ஆண்-பெண் சேர்க்கை சம்பந்தப்பட்டதற்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது". (பெ.ஏ.அ.ப.45) ஆனால் ஒரு பெண்ணைப் பழி சுமத்துவதற்கும் குற்றம் சாட்டுவதற்கும் உபயோகிக்கப்படும் சொல்லாகும்; இதுபோன்ற குற்றம் சாட்டுவதிலும் வலியும் ஆண்களுக்கு கிடையாது.

அப்படிச் சொல்லப்படுவதற்காக எந்த ஆணும் கோபித்துக் கொள்வதும் கிடையாது. விபச்சாரம் என்பது பெண்ணடிமைத்தனத்தைக் காட்டும் குறிப்பு வார்த்தை என்றுதான் சொல்லவேண்டும். விபச்சாரி மகன் என்று சொன்னால் தான் கோபம் வருகிறதே தவிர விபச்சாரனுடைய மகன் என்றால் கோபம் வருவதில்லை" (பெ.ஏ.அ.ப.46) என்கிறார் பெரியார்.

அவர் குறிப்பிடும் விபச்சாரம் என்பதும் பரத்தைமை என்பதும் ஒன்றுதான்; 'பரத்தைமை' என்ற சொல்லாடல் பெண்ணைக் குறிப்பதாகவே உள்ளது. 'பரத்தன்' என்ற சொல்லினை நற்றிணையில் காணவில்லை என்றாலும், சங்க இலக்கியங்களில் தலைவி கூற்றுப் பாடல் சிலவற்றில் தலைவனைப் 'பரத்தன்' என்ற சொல்லால் தலைவி குறிப்பிடுவதைக் காணலாம்.(அகம்146) குறள்- 1311). பரத்தன் என்ற சொல்லுக்கு வேசியுடன்கூடி யொழுகுபவன்; என்று பொருள் தருகிறது. வேசியென்றொரு பிரிவு இருப்பதினால் தான் வேசியுடன் கூடி ஒழுகும் ஆண் இருக்கிறான் என்று தான் பொருள் படுகிறது. பெண் தவறாக இருப்பதால் ஆண் தவறாகிறான் என்பதே.

நற்றிணையில் அமைந்துள்ள செய்திகளின் அடிப்படையில் பரத்தைமை என்பது தலைவியாகிய பெண்ணாலும் வெறுக்கப்படுகிறது. பரத்தமையைப் பரத்தையரும் மகிழ்வாக எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை அவர்களின் கூற்றுகளின் பொருண்மை இருமருங்கிலும் தலைவனை நினைத்து ஏங்குவதாகவும், தலைவன் தன்னிடம் உண்மையாக இல்லை என்பதற்காக வருந்துவதாகவும் தான் இருக்கிறது. குறிப்பாகப் பரத்தமையில் ஈடுபடும் பெண்களின் முக்கிய நோக்கம் பொருள் மட்டுமே என்ற குறிப்பு நற்றிணையில் இல்லை. நற்றிணையில் காட்டப்படும் பரத்தையர் அன்புமிக்கவர்களாகவும், சுற்றத்தார் பழிச்சொல்லை அஞ்சுபவர் களாகவுமே இருக்கிறார்கள்.

சொத்துரிமை என்பது பெண்களுக்கு அவசியம் வேண்டும் ஆண்களுக்கு நிகராக வேண்டும் என்ற 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியவர் பெரியார். கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, இவற்றில் பெண்கள் சமபங்கு உடையவர்கள் என்ற கொள்கையுடையவர். ஆனால், பெண்ணை ஆணின் குடும்பப் பெருக்கத்திற்கு உதவுபவளாகவே கருதினர் என்பதை நற்றிணை பரத்தை தொடர்பான தலைவன் கூற்றுப் பாடலின் வாயிலாக உணரமுடிகிறது. பெண்ணடிமைத் தனத்தின் அடிப்படையே சொத்தைப் பாதுகாக்கும் ஆண் வாரிசினை உருவாக்குவதினால் வந்ததே என்பது பல்வேறு ஆய்வாளர்களின் கருத்து; 'கற்பு'க் கோட்பாடு, அது தொடர்பான விதவைகள் நிலை, கைம்மைக் கொடுமை எல்லாம், சொத்தை அடிப்படையாகக் கொண்டதே.

சொத்து ஆணிற்கானது; ஆணிற்கு வீடு, மனை, மக்கள் என்பதே பொதுவாக இன்றளவிலும் நடைமுறையில் உள்ள கோட்பாடாக உள்ளது.

விதவைத் தன்மை குறித்த பாடல்களை நற்றிணையில் காணமுடியவில்லை; கர்ப்பத் தடை என்பது அக்கால கட்டத்தில் இல்லை. குறிப்பாகப் பெரியார் பெண் விடுதலை பெறவேண்டுமென்றால் "ஆண்மை" அழிய வேண்டும் என்றார்.

"பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும் பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்று வதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாத வர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும்; அப்படி ஒருக்கால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாக்கி விட்டாலும் கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாக நம்பலாம்" *(பெ.ஏ.அ.ப-97).*

எனவே, இந்த ஆணாளுமைச் சமுதாயத்தில் விடுதலை என்பதே சாத்தியமில்லை என்பதே அவரின் கூற்றாக உள்ளது. அத்துடன் பெண்கள் விடுதலை பெறுவதற்கு ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாக இருக்கிறார்கள். ஏனெனில், இன்னமும் பெண்களுக்குத் தாங்கள் ஆண்களைப்போல முழுவிடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை என்றே கூறுகிறார். பெண்விடுதலை தொடர்பாக இன்னும் பல்வேறு கருத்துக்களைப் பெரியார் கூறி இருப்பினும் நம் ஆய்விற்கு இதுவே போதுமானது என்பதால் இதன் அடுத்தடுத்த பெரியாரியக் கருத்துக்களை இவ்வாய்வில் முன்னெடுக்கவில்லை.

பொருள்வயின் பிரிதல் இல்லறக் கடமைகளில் ஒன்று.

"வினையே ஆடவர்க்கு உயிரே
வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர்
உயிர்"*(குறு-135)*

பாடலின் பொருள் சங்க இலக்கியக் காலம் மக்கள்வாழ்வியலில் பொருளீட்டுதலில் ஆணின் பங்கு எத்தகையது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. நற்றிணையில் பொருள்வயின் பிரிதல் குறித்த பாடல்கள் *119.* வரைந்து கொள்ள வற்புறுத்தும் பாடல்களுக்கு அடுத்த நிலையில் நற்றிணையில் பொருள்வயின் பிரிதல் குறித்த பாடல்களே அதிகம். பிரிதல் துன்பத்தினையும், உயிர் வாழ இயலாமையும், செலவு அழுங்குதலையும், தலைவியின் மென்மைத் தன்மையையும், ஆற்றியிருக்கக் கூறியும், பாலைநிலத்தின் கொடுமைகளை எடுத்துக்கூறியும் உள்ள பாடல்கள்தலைவிதோழிகூற்றுப்பாடல்களாக உள்ளன. *(1,5,24,26,28,33,41, 43,46,48, 64, 69,71, 73, 79, 84, 85, 86, 89, 92, 97, 99, 107, 109, 111, 112, 115, 118, 121, 124, 129, 130, 148, 153, 164, 171, 174, 177, 181, 186, 189, 193, 193, 208, 212, 214, 224, 225, 226, 229, 237, 240, 241, 243, 246, 248, 252, 262, 266, 269, 274, 281, 286,289, 296, 302, 303, 316, 318, 325, 329, 333, 337, 343, 348, 367, 381, 387, 391, 317)* தலைவன் வினை முடித்து மீளுகையில் தலைவியின் மென்மைத் தன்மை குறித்து தேர்ப்பாகனிடம் கூறும் பாடலாக *(3, 16, 21, 42, 52, 59, 62, 81, 103, 105, 106, 113, 126, 137, 139, 141, 142, 151, 161, 166, 169, 205, 221, 242, 256, 298, 308, 312, 321, 341, 346, 352, 366, 371, 374)* குறுந்தொகைப் பாடலை உற்று நோக்குகையில், வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவிலும், தலைவியின் தாயாருக்குத் திருமணத்திற்கு முன் தலைவன் கொடுக்கும் பரிசுப் பொருட்கள் என்ற முலைவிலை, களவு நீளுதல், உடன்போக்கு

மேற்கொள்ளுதல் போன்ற வாழ்வியல் அனைத்தும் பொருளியலைச் சார்ந்தே அமைந்துள்ளது. மணவாழ்கைக்குப் பின்னும் பொருளீட்டப் போதல் உலகியலாக இருந்துள்ளது. இப்பிரிவானது ஒரு ஆண்டிற்குள்ளாக இருக்கவேண்டும் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. இத்தகைய பொருளினை ஈட்டுவது ஆண்களின் உயிராகவும், அத்தகைய ஆண்களையே பெண்களுக்கு உயிராகக் கருதுவர் என்பதாக உள்ளது.

ஆனால். நற்றிணையில் தான் விரும்பி மணந்த தலைவனது வீட்டில் பொழுது மறுத்து உண்ணும் தன் மகளின் இல்லறச் சிறப்பினைக் கண்டு வியந்து பாராட்டும் செவிலியைக் காணமுடிகிறது. தலைவியின் செல்வமிக்க குடியின் பெருமையை நற்றிணையின் பல பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. பொருள்வயின் பிரிதல் என்பது பொருளினை விட, தலைவன் அருகில் இருக்க வேண்டும் என்று நினைக்கும் தலைவியின் மன நிலைப் பதிவுகள் அதிகம் உள்ளன. இல்வாழ்கைக்குப் பொருள் அவசியமான ஒன்று என்றாலும், பெண்கள் செல்வ நிலையினைக் கண்டு வியப்பதும், அதன் பொருட்டே மணம் முடிப்பதும் இல்லை என்பதை அறிய முடிகின்றது.

ஆனால், பொருளீட்டும் பெரும் சுமையினை ஆண் மட்டுமே மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடு இருந்ததை அறிய முடிகிறது. இவை யனைத்தும் பரத்தமையின் போது உடைபட்டுப் போகிறது. காதலால் உயிரை விடத் துணியும் அதே ஆண், பரத்தமை கொள்வதும், பல பரத்தைகளை நாடுவதும் சொல் திறம்புவதையும் காணமுடிகிறது. ஆனால், பெண்ணோ எந்த நிலையிலும் 'கற்பு' என்னும் ஒழுக்கத்துடன் வாழ வேண்டியது கட்டாயமாக உள்ளது. அதனைப் பெருமைமிகுந்த ஒன்றாகப் பல பாடல்கள் வழி அறிய முடிகின்றது. பல நேரங்களில் பரத்தமை மேற்கொள்ளும் பெண்களும் இதனைக் கடைப்பிடிக்க எத்தனிக்கின்றனர்.

ஆனால், எந்நிலையிலும் ஆண் மட்டும் கட்டற்ற சுதந்திரம் உள்ளவனாக உள்ளான். அதைத்தான் பெரியார் "புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் தனி வார்த்தைகளே இல்லாமை காரணமாக மறைக்கப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை" என்கிறார் (பெ.ஏஅ.ப-14). "கற்புக்காகப் புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள் சட்டங்கள் மாய வேண்டும்" என்கிறார்.

மணம் என்கிற இல்வாழ்க்கையைக் குறித்துப் பெரியார், "ஆண், பெண் கல்யாண விஷயத்தில் அதாவது புருஷன் மனைவி என்கிற வாழ்க்கையானது, நமது நாட்டில் உள்ள கொடுமையைப் போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர வேறு ஒன்றும் அதில் இல்லை. அவ்வடிமைத்தனத்தை மறைத்துப் பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுகின்றன" என்கிறார்.

தந்தை பெரியார் அவர்கள் "பெண் விடுதலைக்குத் தேவை கல்வியும் தொழிலும்; (17.5.1969) பெண்கள் சம்பாதித்து சொந்தக்காலில் நில்லுங்கள், பெண்கள் சுமையாக இருக்கக்கூடாது, வேலைக்குப் போன பிறகே திருமணம் செய்து கொள்ளுங்கள்" என்று ஆணுக்கு இணையாக பெண்களும் கல்வி மற்றும் பொருளாதாரம் பெற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நற்றிணை அடிப்படையில் பெரியா ரியத்தை ஒப்பிட்டு நோக்கினோமென்றால் முற்றிலும் வேறுபட்ட சமுதாயத்தைக் காண விழைந்ததே பெரியாரியம். நான் யாருக்கும் அடிமையில்லை, எனக்கடிமை யாருமில்லை என்ற அம்பேத்கரின் கூற்றினைப் போல் மனிதநேயக் கொள்கையின்

அடிப்படையிலேயே சமுதாயத்தினைக் கட்டமைக்க விழைந்தார். காதல், கற்பு, கல்யாணம், பிரச்சாரம், விதவைத்தன்மை, சொத்துரிமை, கர்ப்பத்தடை, ஆகியவற்றைக் கேள்விகள் கேட்டார். 'காதல்' என்பதற்கு," காதலென்பதில்; சத்தற்ற தன்மையும் உண்மையற்ற தன்மையும், நிச்சயமற்ற தன்மையும், காதலைப் பிரமாதப்படுத்துவதன் அசட்டுத்தனமும் ஆகியவைகள் எளிதில் விளங்கிவிடும்" (பெ.ஏ.அ. ப-28) என்கிறார். அவர் கூறுவது, பரத்தமை கொண்ட தலைவன் மீது ஊடல் கொள்ளும் தலைவியிடத்தும் காதலின் நிச்சயமற்ற தன்மையை உணர முடிகின்றது.

கற்பு என்ற ஒழுக்கம் தொடர்பாக அவர் கூறும் பொழுது "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்கிற வாக்கியப்படி பார்த்தால், கற்பு என்பது சொல் தவறாமை, நாணயம், சத்தியம் ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது என்கின்ற கருத்துக்கள் கொண்டதாக இருக்கின்றது.

இதனடிப்படையில் நற்றிணைப் பொருண்மைகளின் அடிப்படையில் அந்தக் காலகட்ட மக்களின் வாழ்வியலைப் பெரியாரியக் கண்ணோட்டத்துடன் உற்று நோக்கினோமேயென்றால்,

1. சமனற்ற சமுதாயச்சூழல்
2. வாழ்வியல் இலக்கணங்களும் ஒரு சார்புத் தன்மை கொண்டதாக இருத்தல்
3. இலக்கியப் படைப்புகளிலும் உயரிய குடிசார்ந்த வாழ்வியல் மட்டுமே பாடலாக்கம் செய்திருத்தல்

போன்ற பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைப் படைப்பாக்க முறைகளிலும்; இலக்கணம் வகுக்கும் முறைகளிலும் காணமுடிகின்றது.

**சமனற்ற சமுதாயச் சூழல்:**

நற்றிணைப் பதிவுகளில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், போன்றோரின் கூற்றுக்களின் வழி பண்டைய வாழ்வியல் சூழலைக் கட்டமைத்துள்ளனர்.

1. தலைவன், தலைவி இவர்களைச் சுற்றிய வாழ்வியலே பதிவாக உள்ளது.
2. தோழி, செவிலி வாழ்வியல் சூழல் என்ன என்பது எந்தப் பதிலும் இல்லை.
3. நற்றாய் ஒரு கட்டுக்குள் வாழ்பவளாகவும் அதற்கு மேல் உரிமையற்றவளாகவும் பதிவுகள் வழி அறியப்படுகிறாள்.
4. தலைவி உடன்போக்கின் போதும், வரைவு முடித்த நிலையிலும் அவளைச் சென்று கண்டுவரும் உரிமை அற்றவளாகவே அறியப்படுகிறாள்.
5. தந்தையர்களைப் பற்றிய பாடல்கள் இல்லை.

**வாழ்வியல் இலக்கணங்களில் ஒரு சார்புத் தன்மை:**

1. தலைவன், தலைவிக்கு மட்டுமே வரும் காதல் பதிவு உள்ளது, தோழி, செவிலி, போன்றோரின் அன்புசார் வாழ்வியலுக்கு இலக்கணம் இல்லை.
2. நற்றாய் வீட்டில் இருப்பவளாகவும், செவிலி பின் தேடிச் செல்பவளாகவும் இலக்கணம் உள்ளது.
3. பரத்தையர் உறவினால் ஏற்படும் ஊடலுக்கு மட்டுமே இலக்கணம் உள்ளது. பரத்தையர் வாழ்வியல் குறித்த இலக்கணங்கள் இல்லை.
4. பொருள்வயின் பிரிவு என்பது ஆண்களுக்குரியதாக இலக்கணம் உள்ளது. வணிகத்தில் ஈடுபடக் கூடிய பல்வேறு பெண்கள் இருந்துள்ளனர். குறிப்பாகப் புலமைத்தொழிலைக் கொண்ட10 பெண்பாற் புலவர்களின்

பாடல் பதிவுகள் உள்ளன. அவர்களுக்கான இலக்கணம் என்ன, அவர்கள் வீடு கடந்து, நாடு கடந்து சென்று பொருளீட்டி வந்துள்ளனர்; அவ்வாறு இருக்கும்போது பொருளீட்டல் ஆண்களுக்கானது மட்டுமே என்பது எதனைக் குறிக்கிறது என்ற கேள்வி உள்ளது.

**உசாத்துணை நூற்பட்டியல்:**


1. பெண் ஏன் அடிமையானாள்
2. தொல்காப்பியம்- களவியல்
3. தொல்காப்பியம் - கற்பியல்
4. பெரியார் விடுதலை
5. பெரியார் குடிஅரசு
6. நம்பியகப்பொருள் வரைவியல்
7. குறுந்தொகை


**ஆசிரியர் குறிப்பு:**

முனைவர். கண்மணி, தேவகோட்டை ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தமிழ்த்துறையில், உதவிப் பேராசிரியராக உள்ளார். பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள், என்று பல கருத்தரங்களிலும் அறக்கட்டளைகளிலும் உரைநிகழ்த்தி வருகிறார். அறிவொளி இயக்கத்தில் குரவர்களுக்கான சிறப்பு வகுப்பு எடுத்துள்ளார். திலவகதி அய். பி.எஸ் அவர்களை நெறியாளராகக் கொண்டு விளங்கிய பாலின பகிர்நிலைப் பயிலரங்கதில் பயிற்றுநராகப் பணியாற்றியுள்ளார். சிறப்பான பயிற்றுநர் என்று மேனாள் கல்வி அமைச்சர், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் கரங்களால் பரிசும் பெற்றுள்ளார்.

இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்: விழித்தெழுந்த விதைகள்' (கவிதை நூல்), 'சமூகத்தின் ஆணிவேர்' (ஆய்வு நூல்); 'பெண்ணியக்குரல்' என்ற சிற்றிதழும் நடத்தியுள்ளார். விடுதலை, உண்மை, பெண்ணியம், புதியகுரல், நாளை விடியும், பெண்ணியக்குரல் போன்ற இதழ்களில், இவரது கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவந்துள்ளன. உவமைக் கவிஞர் சுரதா, கவிஞர் கலி.பூங்குன்றன் தலைமையில் கவியரங்களிலும் பங்கேற்றுள்ளார். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பள்ளி மாணவர்களுடன் உரையாற்றியுள்ளார். இவரைப் பாராட்டிக் கொழும்பு தமிழ் சங்கம் 'தமிழ்ச் செம்மல்' விருது வழங்கியுள்ளது. காரைக்குடி கல்விச் சேவை அமைப்பு 'மனித நேய'விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

●

# சுயமரியாதை இயக்கத்தின் ஆளுமைமிக்க பெண்கள்



**முனைவர் ச.ஜீவானந்தம்**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
சிக்கிம் பல்கலைக் கழகம்

**கட்டுரைச் சுருக்கம்:**

சுயமரியாதை இயக்கமும், அவற்றின் இதழ்களும் பெண்கள் முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும் பாடுபடக்கூடிய ஒரு முக்கியத்தளமாக இருந்துவந்துள்ளன. ஆணாதிக்கம் மிக ஆழமாக ஊறியுள்ள சமூகத்தினில், அன்றைய காலகட்டத்தினில், பெண்கள் தங்களின் கருத்துகளைத் தாங்களே முன்வைக்கக் கூடிய ஒரு வெளியினைத் தந்தை பெரியார் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

அதேபோல், பெண்களின் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் தேவைகளைக் குறித்து பெண்களும் நன்கு அறிந்து இருந்தனர். பெண்கள் தங்கள் கருத்துகளைத் தங்குதடையின்றி வெளிப்படுத்த ஒரு சமூகத்தளமாக சுயமரியாதை இயக்கம் விளங்கி வந்துள்ளதனை அறிய முடிகின்றது. இந்தச் சூழலில் இக்கட்டுரையானது சுயமரியாதை இயக்கத்தின் பெண்களைப் பற்றியும், அவர்களின் கருத்தியல் ஆளுமையினைப் பற்றியும் விவாதிக்கின்றது.

**சுயமரியாதை இயக்கப் பெண்கள்:**

சுயமரியாதை இயக்கப் பெண்கள் பொதுவாக வரலாற்றின் முக்கிய முகவர்களாகச் *(active historical agents)* செயல்பட்டு, தங்களின் அன்றாட வாழ்வின் மூலம் வரலாற்றினை மீண்டும் மீண்டும் மீள்உருவாக்கம் செய்து வந்தனர் என்று கீதா அவர்கள் குறிப்பிடுகின்றனர். *(Geetha. (February 16, 1991): 388.)*

அலமேலு அம்மையார், அலர்மேலு மங்கையத் தாயாரம்மாள், அன்னபூரணி அம்மையார் *('குடி அரசு' 22.05.1932.)*, ஆண்டாள் அம்மையார் *('குடி அரசு' 22.05.1932.)*,

இந்திராணி அம்மையார் *('குடி அரசு' 04.12.1932.)*, இராதா அம்மையார் *('புரட்சி' 20.05.1934.)*, இலக்ஷ்மிஅம்மையார் *('குடி அரசு' 04.05.1930.)*,

கண்ணம்மாள், கனகம்மையார் *('குடிஅரசு' 12.08.1944.)*, குஞ்சிதம் அம்மையார் *(1909-1961) ('குடிஅரசு' 16.07.1933.)*,

சத்தியவாணிமுத்து *(1923-1999)*, சரஸ்வதி அம்மையார், சிவகாமி அம்மையார் *('குடிஅரசு' 18.10.1931.)*, ஞானாம்மாள் அம்மையார் *('குடிஅரசு' 06.04.1930.)*,

எஸ். தருமாம்பாள் *(1890-1959)*, தாமரைக்கண்ணி அம்மையார் *(1911-1971)*, நாகம்மையார் *(1885-1933)*, நானாவதி அம்மையார் *('குடிஅரசு' 30.10.1932.)*, நீலாம்பிகைஅம்மையார் *(1903-1945)*, நீலாவதி அம்மையார் *(1913-1961) ('குடிஅரசு' 09.03.1930.)*,

*பரிபூர்ணத்தம்மையார், மணியம்மையார் (1920-1978), மரகதவல்லி அம்மையார் (புதுவைமுரசு. சிறப்பு மலர். 08.08.1931.), மலர்முகத்தம்மையார் (1879-1963), மனோகரம் அம்மையார் (புதுவைமுரசு. சிறப்பு மலர். 08.08.1931.), மிராண்டா அம்மையார், மீனாம்பாள் அம்மையார் (1900-1920-க்குக் இடையில்-1992), முத்துலட்சுமி அம்மையார் (1886-1968), மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் (1883-1962) (முரசொலி. பொங்கல்மலர். 1956.),*

*ருக்மணி அம்மையார், வீரம்மாள் (1924-2006),*

*ஜானகி அம்மையார் (குடி அரசு. 11.09.1932.), ஜோதி அம்மையார்*

*...என்ற நீண்ட வரிசை (அகர வரிசைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது) கொண்ட பெண்ணியவாதிகள் சுயமரியாதை இயக்கத்தினில் மிகச்சிறப்பாக தங்களின் சுயத்துடன் செயல்பட்டு, பெண்களுக்கான உரிமைகளையும் ஆணாதிக்க சமூகத்தின் எதேச்சாதிகாரத்தினையும் தங்களின் எழுத்து மற்றும் செயல்களைக்கொண்டு எதிர்த்துவந்தனர். ('குடிஅரசு' 08.06.1930.) அதுமட்டுமல்லாமல், சுயமரியாதை இயக்கத்தின் நீட்சியான திராவிடர் கழகத்தின் தலைமையானது தந்தை பெரியார் அவர்களின் மறைவிற்கு பிறகு, மணியம்மையார் எனும் பெண்ணாளுமையின் கீழ்எந்தவொருசிரமுமின்றி செயல்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.*

*“சுயமரியாதை இயக்கமும் பெண்களும்” என்ற தலைப்பினில் இராகவன் அவர்கள் குறிப்பிடும் பொழுது நமதுஇயக்கம் வெற்றிபெறவேண்டுமானால் அதற்கு நமதுசகோதரிகளின் ஒத்துழைப்பு என்பது மிக அவசியம் என்று 'குடிஅரசு' இதழினில் வந்தகட்டுரையின் மூலம் சுயமரியாதை இயக்கத்தில் பெண்களின் முக்கியத்துவம் எத்தகையது என்பதைப் பற்றி அறியமுடிகிறது. ('குடிஅரசு' 13.01.1935.)*

*பிரதிநிதித்துவம் என்பதற்காகப் பெண்களை வெறும்பதுமைகளாக மட்டுமே சுயமரியாதை இயக்கம் அணுகவில்லை. சுயமரியாதை இயக்கத்தில் பெண்கள் தங்களது கருத்துகளை எந்த ஒரு தயக்கமும், நிர்பந்தமும் இன்றி பொதுவெளியில் வைக்க முழுச்சுதந்திரத்தினையும் தன்னகத்தே கொண்டிருந்தனர்.*

*பொதுவாகச் சுயமரியாதை இயக்கப் பெண்கள், பெண்கள் விடுதலையினைப் பற்றியோ அல்லது பெண்கள் சார்ந்த விடயங்களைப் பற்றிமட்டுமோ கவனம் கொள்ளாமல், பலதரப்பட்ட உலக விடயங்களைப் பற்றிச் சுயமரியாதை இயக்க இதழ்களின் வழி, தங்களுக்கே உரியபாணியில் உரத்த உரிமையுடனும், சுயமாகவும் பேசியும் எழுதியும் வந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.*

**சுயமரியாதை இயக்கப் பெண்களின் கருத்தியல் ஆளுமை:**

*வழக்கமாக இந்தியச்சூழலில் பெண்கள் அமைப்புகள் தங்களின் செயல்பாடுகளைப் பெண் விடுதலை, ஆணாதிக்க எதிர்ப்பு, குடும்பம், குழந்தை மற்றும் குழந்தை வளர்ப்பு போன்றவைகளைச் சுற்றியே தகவமைத்துக் கொண்டிருந்தனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தினில் அதிகபட்சம் சில பெண் ஆளுமைகள் இந்திய அரசியல் விடுதலையினைப் பற்றி பேசியதனைக் குறித்து அறியலாம். ஆனால், சுயமரியாதை இயக்கப் பெண்கள் தங்களின் அறிவுசார் வெளியினை அரசியல், கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம் என பரந்துபட்ட தளங்களில் விரித்திருந்தனர். இதனைச் சுயமரியாதை இயக்கப் பெண்கள் தங்களது கட்டுரையில் பயன்படுத்திய சிலகட்டுரைத் தலைப்புகளின் வழி அறியலாம்.*

*அதாவது நீலாவதி அம்மையார் அவர்களின் “இந்து மத வீழ்ச்சிக்கும் இதர மத வளர்ச்சிக்கும் உதவிபுரிவது பாழும்: தீண்டாமையும் – விதவைகளின் துயரமுமே!.”*

*('குடிஅரசு' 09.03.1930.); "பெண் மக்களும் சுதேச சமஸ்தானங்களும்" ('குடிஅரசு' 12.07.1931. மற்றும் 28.06.1931.);*

*சிவகாமி அம்மையார் அவர்களின் "வைதீகர் கொடுமையும் தீண்டாதார் துயரமும்" ('குடிஅரசு' 24.04.1932.); அர்த்த மற்ற சடங்குகளை அடியோடு ஒழியுங்கள்! ('குடிஅரசு' 05.06.1932.);*

*ஆண்டாள் அம்மையார் அவர்களின் "நமக்கு இன்னும் சாதி வேண்டுமா?" ('குடிஅரசு' 22.05.1932 மற்றும் 05.06.1932.);*

*குஞ்சிதம் அம்மையார் அவர்களின் "இந்து மதத்தை அடியோடு ஒழிக்க வேண்டும்" (வளர்மதி 2 - 'குடிஅரசு' 31.08.1930.); "கோவில் சொத்தை என்ன செய்ய வேண்டும்?" ('குடிஅரசு' 09.10.1932.); "கோவில் சொத்தை விற்றுத் தொழிற்சாலை உருவாக்க வேண்டும்" (வளர்மதி2 - 'குடிஅரசு' 16.07.1933.);*

*அன்னபூரணி அம்மையார் அவர்களின், 20.05.1934-இல் கூடிய திருச்செங்கோடு தாலுகா ஆதிதிராவிட மகாநாடு (வளர்மதி2 - புரட்சி. 27.05.1934.) போன்றவைகள் நமக்கு உணர்த்துகின்றன.*

*சாதிய ஆதிக்க சமூகத்தினில் சுயமரியாதை இயக்கப் பெண்கள் தாங்கள் கொண்ட கொள்கையினை எந்தவொரு சமரசமுமின்றி மிக ஆணித்தரமாக முன்வைத்தனர். சுயமரியாதை இயக்கப் பெண்கள் மதம், கோயில், சாதி, தீண்டாமை, மொழி அரசியல், போன்ற சமூக விடயங்களைப் பற்றிய மிக நீண்ட வரலாற்றுப் புரிதலும், ஆழமான தெளிவும் கொண்டு இருந்தனர்.*

*உதாரணமாக மொழி குறித்துக் குஞ்சிதம் அம்மையார் அவர்கள் குறிப்பிடும் பொழுது, "ஆங்கிலேயர்கள் அந்நியரென்றால் பார்ப்பனர்கள் (ஆரியர்கள்) யார்? ஆங்கிலம் அந்நிய மொழி என்றால் சமஸ்கிருதம் எந்தப் பாட்டன் வீட்டு மொழி என்று கேட்கிறேன்" என்ற அவர், நானூறு வருடத்திற்குமுன்பு வந்த "அந்நிய மொழியினை" ஒழிப்பதற்கு முன்பு, இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது சமூகத்தில் பராசரஸ்மிருதி, மனுஸ்மிருதி முதலிய கொடூரச் சட்டங்களைச் செய்த "அந்நிய மொழி" யாகிய சமஸ்கிருதத்தை அடியோடு அழிக்க வேண்டாமா என்ற மிகக் காட்டமான வினாவினை 1932-ஆம் ஆண்டு 'குடிஅரசு' இதழில் எழுப்பியுள்ளார். ('குடிஅரசு' 26.06.1932.)*

**மதம் குறித்துச் சுயமரியாதை இயக்கப் பெண்கள்:**

*"மதமென்பது மனித வாழ்க்கையின் நலத்திற்காக மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சிலகட்டுப்பாடுகள் என்று சொல்லுகிறார்கள். இம் மாதிரியான மதத்தில் சுயமரியாதைக்காரர்களாகிய எங்களுக்கு எந்த ஓர் ஆட்சேபணையும் கிடையாது. ஏனென்றால் இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் கால, தேசவர்த்தமானத்திற்குத் தகுந்தபடி அழிக்கவோ, அல்லது திருத்தி அமைத்துக் கொள்ளவோ முடியும். ஆனால் மதமானது கடவுளால் ஏற்பட்டது, தெய்வத் தன்மை பொருந்தியது. அதை அழிக்கவோ, அல்லது மாற்றிக்கொள்ளவோ, மனிதவர்க்கத்தால் இயலாது என்று சொல்லும் பொழுதுதான் பகுத்தறிவுக்கு முரண்பட்டதாக இருக்கிறது" என்று இந்திராணி அம்மையார் குறிப்பிடுகின்றார். ('குடிஅரசு' 04.12.1932.) அதனைத் தொடர்ந்து இலாயிலாபானோபீகம் அவர்கள் குறிப்பிடுகையில் "இந்தியாவில் பண்டைய பழக்கவழக்கங்கள் எவ்வளவு மூடத்தனமானவைகளாய் இருந்த போதிலும் அதற்கெல்லாம் மதம் அனுமதி கொடுக்கின்றது" என்ற தனது கருத்தினைப் பதிவு செய்கின்றார். ('குடிஅரசு' 14.10.1928.)*

*"நம்முடைய முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் தடையாக இருக்கிற நூல்களும், கடவுள்களும், சாதிகளும் நம்மை விட்டு அடியோடு தொலைதல் என்பது வேண்டும். கண்மூடித்தனமாகக் கடவுள் சொன்னார், அவர் சந்ததியாராகிய வைதீகர்கள் சொன்னார்கள் என்று, குரங்குப் பிடியாகப்*

புத்தகங்களில் எழுதியிருப்பவற்றை நம்ப வேண்டும் என்பது மூடத்தனமாகும். மத நூல்களில் என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டு போகட்டும், நம்முடைய பகுத்தறிவிற்குப் பொருத்தமுடைய விடயத்தை எடுத்துக்கொண்டு மற்றதைத் தள்ளுவதே பொருத்தமுடையதாகும்'' என்று ஆண்டாள் அம்மையார் குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 22.05.1932 மற்றும் 05.06.1932.)*

இந்திராணி அம்மையார் அவர்களோ, ''கடவுள்இல்லைஎன்றுயாராவதுமுடிவுகட்டிச் சொன்னால் அவர்கள் ஆராய்ச்சியற்றவர்கள் என்றே சொல்லுவேன். கடவுள் உண்டு என்று யாராவது சொல்லத்துணிவாரேயானால் அவர்களைப் பகுத்தறிவு அற்றவர்கள் என்று கூறுவேன். "பார்க்க முடியாத ஒன்றை", "அறிய முடியாத ஒன்றை", "மனம், காயம், வாக்குகள் எட்டாத" ஒன்றைப் பற்றி தனக்குத் தெரிந்ததாகக் கற்பனை பண்ணுகின்றவன் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடம் கொடுத்தவனாகமாட்டான். எனக்குத் தெரியாது என்று சொல்லுபவனே உண்மையை உள்ளவாறு கூறுபவன் என்று உணருங்கள்''என்று குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 04.12.1932.)*

அதேபோல், ''ஒரு சாண் பொம்மைக்கு ஆயிரக்கணக்கானரூபாய்செலவழித்துத்தெப்ப உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது'' என்ற குஞ்சிதம் அம்மையார் அவர்கள் *('குடிஅரசு' 26.06.1932.)*, ''இந்தப் பணமெல்லாம் வீணாய் போகவில்லை, நமது மக்கள் தானே சாப்பிடுகிறார்கள்'' என்ற வாதத்திற்கு பதிலாக, ''பலன் தராத காரியங்களுக்கு *(unproductive purposes)* உபயோகப்படுத்தப்படும் செல்வமும், சேமித்து வைக்கப்படும் செல்வமும் *(hoarded wealth)* பாழாய்ப் போனதாகத்தான் கருத வேண்டும்'' என்ற பொருளாதார வல்லுநர்களின் *(scholars of economics)* கருத்தினை முன்வைக்கின்றார். *('குடிஅரசு' 26.06.1932.)*

அது மட்டுமல்லாமல், ''கோயில்களை மருத்துவமனைகளாகவும், அதிலுள்ள செல்வத்தையெல்லாம் அரசாங்கம் பறிமுதல் செய்து, அந்தப் பணத்தைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டாயக் கல்வியும், ஆளுக்கொரு வீடும் ஒவ்வொரு ஏக்கர் நிலமும் கொடுத்தாலும் எத்தனையோ கோடிரூபாய் மிச்சப்பட்டு விடும்''என்றும் குஞ்சிதம் அம்மையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 26.06.1932.)* அதேபோல், ''உற்சவங்களுக்குச் செலவழிக்கப்படும் லட்சக்கணக்கான பொருளினைக் கொண்டுபெரிய நூல் நிலையங்களையும், வாசக சாலைகளையும் அமைக்க வேண்டும்'' என்று குஞ்சிதம் அம்மையார் அவர்கள் வலியுறுத்தினார். *('குடிஅரசு' 09.10.1932.)*

### சாதியும், தீண்டாமையும் குறித்துச் சுயமரியாதை இயக்கப் பெண்கள்:

சாதி என்ற நிறுவனத்தின் மீது சுயமரியாதை இயக்கப் பெண்கள் மிகக்கடுமையான விமர்சனங்களைக் கொண்டிருந்தனர். ''சாதிமுறையை ஒழிக்கவே முடியாதென்றும், அது இந்தியாவில் வேரூன்றிவிட்டது என்றும், பல சீர்திருத்தக்காரர்கள் அதை ஒழிக்க முயற்சித்துத் தோல்வியடைந்தனர் என்றும் அடிப்படைவாதிகள் சொல்லக்கூடும். அது உண்மையே'' என்ற குஞ்சிதம் அம்மையார் அவர்கள், ''அவர்கள் எல்லாம் மதத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சமூகத்தைச் சீர்திருந்த முயற்சித்ததால் தோல்வியடைந்தனர். ஏனெனில் இந்துமதமும் சமூகச்சீர்திருத்தமும் ஒன்றுக்கொன்று பொருத்தமற்றவிடயமாகும். அதனால் தான் மதத்தையே ஒழித்து விடவேண்டுமென்று நான் கூறுகிறேன்'' *('குடிஅரசு' 31.08.1930)* எனச் சமூகப் புரட்சிக்கான முரசாகக் குஞ்சிதம் அம்மையார் அவர்கள் செயலாற்றியுள்ளதை அறியலாம்.

அதேபோல், ''சமதர்மம் என்ற வார்த்தையிலோ, பொதுவுடைமை என்ற வார்த்தையிலோ பயப்படக்கூடியவிடயம் ஏதுமில்லை. பொதுஉடைமைக் கொள்கைகளை மனிதச்சமூகம் ஒருபோதும் வெறுத்துத்தள்ள முடியவே முடியாது'' என்ற குஞ்சிதம் அம்மையார் அவர்கள், ''சமதர்ம அரசாங்கத்தில் கடவுள் பெயராலும் கூட ஒருவரும் பட்டினியிருக்க வேண்டியதில்லை'' என்றார். ('குடிஅரசு' 27.08.1933)

''சமூகத்திலிருந்து உடனே தீண்டாமையை ஒழிக்க வேண்டியது முக்கியவேலையாகும்'' என்று குஞ்சிதம் அம்மையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். ('குடிஅரசு' 31.08.1930.) ''சுயமரியாதை இயக்கத்தின் முக்கியக் கொள்கை என்னவென்றால் தீண்டாமை, சாதிப்பிரிவு என்னும் பேயை நாட்டைவிட்டு அறவே ஒழிக்கவேண்டுமென்பது தான்'' என்று இந்திராணி அம்மையார் குறிப்பிட்டு, ''எந்த மனிதன் பகுத்தறிவைக் கொண்டு யோசிக்கின்றானோ, அவனே மனிதன்'' என்று வரையறுத்தார். ('குடிஅரசு' 04.12.1932.) அதேபோல், ''நமக்குத் தற்காலத்தில் வேண்டுவது என்பது ஒற்றுமையான தூயவாழ்க்கை; ஒருவனுடைய நலத்திற்காகப் பெரும்பான்மையான ஏழை மக்கள் வருந்தாத வாழ்க்கை; நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கடும் வெய்யிலில் ஒரு நாள் முழுவதும் பாடுபட்டு அரைவயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாது வருந்தும் ஏழை தீண்டப்படான் என்று சொல்லப்படும் மக்கள், நம்மோடு சமஉரிமை பெறக்கூடிய வாழ்க்கையே வேண்டும். இத்தகைய இன்ப வாழ்விற்குத் தடையாக இருக்கின்ற சாதியை அடியோடு ஒழித்தல் வேண்டும்'' என்று ஆண்டாள் அம்மையார் குறிப்பிடுகின்றார். ('குடிஅரசு' 22.05.1932 மற்றும் 05.06.1932.)

''நாயுடு, முதலியார், செட்டியார், ஐயர், ஐயங்கார் என்ற பட்டங்கள் சாதியைக் குறிக்கிறபடியால் அவைகளை நீக்கிவிடுதல் வேண்டும். சாதியைக் குறிக்கின்ற பூணூல் முதலிய அடையாளங்களை எடுத்துவிட வேண்டும். பார்ப்பனச் சடங்குகளை அடியோடு ஒழித்தல் வேண்டும். உயர்ந்த சாதி என்று போலி வேடம்போட்டுக் கொண்டு நம் வீட்டில் உண்ணமாட்டேன் என்பவருடன் நாமும் சேர்தல் கூடாது. எந்த இடத்தில் உயர்வு தாழ்வுகாட்டப்படுகிறதோ அவ்விடத்திற்கு அடிஎடுத்தும் வைக்கக் கூடாது'' என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றார் ஆண்டாள் அம்மையார் அவர்கள். ('குடிஅரசு' 22.05.1932 மற்றும் 05.06.1932.)

கோயில் நுழைவினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''கோயிலைக் கட்டிக் கொடுத்துவிட்டு அந்தக் கோயிலுக்குப் போக முடியவில்லையென்றால் அதை இடித்துத் தரைமட்டமாக்குவதை விட்டுவிட்டு, கோயில்நுழைவுப் போராட்டம் எதற்கு?'' என்ற குஞ்சிதம் அம்மையார் அவர்கள் ('குடிஅரசு' 26.06.1932.), ''உடம்பு நோகாமல் நகத்தில் அழுக்குப் படாமல் என்றைக்கும் சுகமாகவே இருந்து கொண்டு தின்று கொழுத்த ஒரு சோம்பேறிக் கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டிருக்கும் இந்தக்கோயில்களை ஒழிப்பதென்றால் அந்த சாதிக்காரர்களுக்கு வயிற்றெரிச்சலாய்த் தானே இருக்கும்?'' என்றார். ('குடிஅரசு' 26.06.1932.) ஆதிதிராவிடர்கள் கோயிலுள் பிரவேசிக்கவேண்டும் என்பது, ''சாமியானது அள்ளிக் கொடுத்து அம் மக்களின் கஷ்டத்தையும், இழிநிலையையும் நீக்கிவிடும் என்பதற்காக அல்ல'' என்பதை அறியுங்கள்! மற்ற சாதி மக்களைப் போலவே அவர்களும் சமநிலைப் பெறவேண்டும் என்பதற்காகவே'' என்று சிவகாமி அம்மையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். ('குடிஅரசு' 24.04.1932.)

''கோயில் உள்ளே என்ன இருக்கிறது? உங்கள் பாட்டன் தேடின சொத்தா? கோயிலுனுள் இருப்பதாக நீங்கள் சொல்லும் தெய்வத்தை உலக இரட்சகர் என்றும், எவ்வளவு அக்கிரமங்களைச் செய்தாலும், மூன்று பைசா கற்பூரம் வாங்கிக் கொளுத்தினால் போதும், மன்னித்துவிடுவார் என்றும், எல்லோரையும் உண்டாக்கின

தகப்பன் என்றும், எறும்பு முதல் எண்ணாயிரங் கோடி உயிர்களுக்கும் படியளப்பவர் என்றும், அவனின்றி ஓரணுவும் அசையாது, கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இந்த மாதிரி கட்டுக்கதைகளும் எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட எல்லாம் வல்ல தெய்வம் உள்ள கோயிலுக்குள், மக்கள் நுழைந்தால் சாமி செத்துப்போகும் என்கிறார்களே! அப்படிப்பட்ட ஒரு சாமியும் உண்டா? மேலும், நீங்கள் அக்கோயிலுக்குள்ளேயே புகுந்து கொண்டு செய்யும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும், மோசங்களையும், ஆபாசங்களையும், ஊழல்களையும், கோடிக்கணக்கில் பொறுத்துக்கொண்டிருக்கும் அத்தெய்வம், உங்களைப் போலவே பிறந்து வளர்ந்து ஆறறிவு படைத்த மக்கள் சங்கத்தினரின் ஒரு பகுதியினராகிய தாழ்த்தப்பட்ட மக்கள் அருகில் வந்தால் 'செத்துப்போவேன்' என்று உங்களிடம் அத்தெய்வம் சொல்லுகிறதா? இல்லையே"... என்று சிவகாமிஅம்மையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 24.04.1932.)*

அது மட்டுமல்லாமல், "இனி தீண்டப்படாத சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது தீண்டப்படாதசகோதரர்கள்கோயில்பிரவேசம் செய்யக் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும், மக்களுக்கு ஒரு சின்ன உதவியும் இல்லாத அக்கோயில்களை ஒழிக்கச் சத்தியாக்கிரகம் செய்து முயற்சிப்பது பலவகையிலும் நன்மையுண்டு எனக் கூறுகிறோம். கோயிலினுள் சென்றால் நமக்கு என்ன பலன்? ஒன்றுமில்லை. ஏன் இவ்விதக்கஷ்டப்பட்டு கோயில் நுழைவுக்கு வழி தேட வேண்டும்? இதைவிட எல்லா மக்களுக்கும் உதவியற்ற அக்கோயில்களை ஒழிக்கவழி தேடுவதே சீர்திருத்தம், பகுத்தறிவு என மறுமுறையும் கூறுகின்றோம்" என்று சிவகாமிஅம்மையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 24.04.1932.)*

அதேபோல், "கிறித்தவ ஆலயங்களில் ஒடுக்கப்பட்டவருக்கு வேறு இடம், பார்ப்பனருக்கு வேறு இடம் இருக்கிறது என்பதை மறுக்கமுடியுமா? பணக்காரர்கள் மண்டியிடுவதற்கு ரெத்தினக் கம்பளமும், மற்றவர்களுக்கு சாதாரணப்பாயும் விரித்திருப்பதை மறுக்க முடியுமா? கல்யாணத்திற்கும், சாவுக்கும் பணத்திற்குத் தகுந்த மாதிரி கோயில் மணியடிப்பது என்ற அக்கிரமம் இல்லையென்று எந்த கிறித்தவ மத போதகராவது குறிப்பிட முடியுமா?" என்று குஞ்சிதம் அம்மையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 16.07.1933.)*

**கொள்கைக்கான கலங்கரை விளக்கம், சுயமரியாதை இயக்கப் பெண்கள்:**

சுயமரியாதை இயக்கத்தில் குடும்பம் குடும்பமாய்ப் பங்கேற்ற பெண்கள் அதில் பங்குகொள்வதனை ஒரு பெருமையாகக் கருதினர். கனகம்மையார் அவர்கள் தன்னைச் சுயமரியாதைக்காரி என்று அறிமுகப்படுத்திக்கொண்டு, அது தனக்குப்பெருமை என்று சென்னையில் நடைபெற்ற அய்ந்தாவது சுயமரியாதை மாநாட்டினில் குறிப்பிடுகின்றார். *('குடிஅரசு' 12.08.1944.)*

பொதுவாகவே சுயமரியாதை இயக்கப் பெண்கள், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை விளக்க வழிகாட்டிகளாய் இருந்து மிளிர்ந்துள்ளனர். குஞ்சிதம் அம்மையார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டிய வழிமுறைகளைப் பற்றி விரிவாக தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மாநாட்டினில் விவாதித்தார். *('குடிஅரசு' 26.06.1932.)* அவர் குறிப்பிடுவதாவது, "சுயமரியாதை இயக்க மாநாடுகள் ஏதோ குடமுழக்குத் திருவிழாக் கூட்டம் போல் கூடிவிட்டுக் கலைந்து போவதில் எந்தப் பயனுமில்லை. ஒரு மாநாடு என்றால் பல பாகத்திலிருந்தும் வருகிற நண்பர்கள் கூடிக்கலந்து சில திட்டங்களை வகுத்துக் கொள்வதற்காகவே கூட வேண்டும். பிறகு அத்திட்டங்களை அவ்விடத்தைச் சுற்றியுள்ள

ஊர்களில் அவரவர்களுக்கு ஏற்ற வகையினில் பிரச்சாரம் செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தினார். ('குடிஅரசு' 17.08.1933.)

"சமுதாய ஊழல்கள் ஒழிந்துபடவும், திராவிடரும் ஆறறிவு படைத்தவராக வாழவும், நமது இயக்கத்தை வேண்டுவது தலைகீழ்மாறுதல் என்ற புரட்சியே" என்ற மிராண்டா அம்மையார் அவர்கள், அதனை வலியுறுத்தும் வகையினில் "இன்னல் செய்யும் ஆரியத்தை சின்னா பின்னமாக்க ஒரு சின்னம் தேவை"எனக்குறிப்பிட்டு, "அடைவோம் திராவிட நாடு இன்றேல் சுடுகாடு" என்று சூளுரைத்தார். ('குடிஅரசு' 06.10.1945.). அதேபோல், "திராவிடர்கள்.. அரசியல், மத இயல் போன்றவைகளைத் தாண்டி, தங்களது சமுதாயச் சுயமரியாதையே பிரதானம் என எண்ணி அதில் கவனம் கொண்டு, தங்களுடைய இழிவுகளும், தடைகளும் நீக்கப்பட்டு, மனிதத்தன்மை பெறுவதே முக்கிய நோக்கம் என உழைக்க வேண்டும்" என்று கொடியேற்று விழாவினில் மணியம்மையார் அவர்கள் இயக்கத் தோழர்களுக்கு அறிவுரைத்துள்ளார். ('உண்மை' 01.03.1977.)

பர்மாவில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கப் பிரச்சாரக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய இந்திராணி அம்மையார் அவர்கள் "சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளான பகுத்தறிவுள்ள, பாலின-சாதிய பேதமில்லாத, தீண்டாமையற்ற, பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற, மூடநம்பிக்கையற்ற, சுயமரியாதைச் சமூகம் என்பதே" என்று விரிவாக விளக்கியுள்ளார். ('குடிஅரசு' 04.12.1932.) அதே வேளையில், கனகம்மையார் அவர்கள், சுயமரியாதை இயக்கத்தின் மீதுவைத்த அவதூறுகளுக்குச் சென்னையில் நடைபெற்ற அய்ந்தாவது சுயமரியாதை மாநாட்டினில் தக்க பதில்களையும், சுயமரியாதை இயக்கத்தின் தேவைகளைப் பற்றியும் விரிவாக விளக்கினார். "சுயமரியாதை இயக்கமென்பது நாத்திக இயக்கம் அல்ல. எந்தவொரு குறிப்பிட்ட சாதியினருக்கும் எதிரானதுமல்ல" என்று ஆணித்தரமாகச் சுயமரியாதை இயக்கத்தின் மீதான விமர்சனங்களுக்கு தக்கபதிலினை பதிவு செய்துள்ளார். ('குடிஅரசு' 12.08.1944.).

**சுயமரியாதை இயக்கப் பெண்கள் செயல் வீரர்களே:**

சுயமரியாதை இயக்கத்தினில் பெண்கள் பல பொறுப்புகளை எந்த நிர்ப்பந்தமும் இன்றி ஏற்றதுடன், பல்வேறு பொதுக்கூட்டங்களுக்கும் தலைமை தாங்கியுள்ளனர். சுயமரியாதை இயக்கப் பெண்கள் எழுத்து மற்றும் பேச்சுடன் மட்டுமே தங்களைச் சுருக்கிக்கொள்ளாமல், உலகெங்கிலும் பயணம் மேற்கொண்டு சுயமரியாதை இயக்கச் சமதர்மக் கொள்கைகளைப் பல்வேறு தளங்களில் கருத்தியல் ரீதியாகவும், அதே வேளையில் எளிய மக்களிடம் கொண்டு செல்லவும் அரும்பாடுபட்டு வந்துள்ளனர். சுயமரியாதை இயக்கப் பெண்கள் மிகப் பெரிய மக்கள் திரள்களை ஒருங்கிணைக்கவும், பொதுக்கூட்டங்களை நடத்தவும், தலைமையேற்கவும், தலைமை உரையாற்றவும் செய்து வந்துள்ளனர் என்பது வரலாற்றுக் கண்கூடு.

1932-ஆம் ஆண்டு பர்மாவில் நடைபெற்ற சுயமரியாதைப் பிரச்சார மாநாட்டினில் கலந்து கொண்டு இந்திராணி அம்மையார் அவர்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை விரிவாக விவரித்து இருந்ததனை 'குடிஅரசு' இதழானது பதிவு செய்கின்றது. ('குடிஅரசு' 04.12.1932). அதே வேளையில், 1929-ஆம் ஆண்டு நெல்லூரில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டின் தலைவர்களாக இந்திராணிஅம்மையார், மற்றும் அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள் அவர்கள் இருந்து சிறப்பு செய்துள்ளனர். (வளர்மதி. 2017ஆ: 14.) 1933-ஆம் ஆண்டு ஸ்ரீரங்கத்தினில் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி தாலுகா முதலாவது சுயமரியாதை மாநாட்டின் திறப்பாளராக சுப.விசாலாட்சி அம்மையார் இருந்துள்ளார்கள். ('குடிஅரசு' 16.06.1933.)

1945-ஆம் ஆண்டு திருச்சியில் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 17-ஆவது நீதிக்கட்சி மாநாட்டினில் ('குடிஅரசு' 06.10.1945.) கட்சியின் கொடியினை மிராண்டா அம்மையார் அவர்கள் ஏற்றிவைத்துள்ளார். அதேபோல், 1949-இல் கோயம்புத்தூரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டின் (வளர்மதி. 2017ஆ: 17.) கொடியினை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களும், 1929-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கப் பெண்கள் மாநாட்டினில் சுயமரியாதைக் கொடியினை மரகதவல்லி அம்மையார் அவர்களும் ஏற்றிச் சொற்பொழிவாற்றி உள்ளார்கள்.

1933-ஆம் ஆண்டு புதுக்கோட்டை சமஸ்தான முதலாவது செங்குந்தர் சமூக மாநாட்டினையும் ('குடிஅரசு' 09.1933.), 1925-ஆம் ஆண்டு மயிலாடுதுறையினில் நடைபெற்ற இசைவேளாளர்கள் சங்க மாநாட்டினையும் (கல்யாணசுந்தரம். 1982: 599-604.) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளதுடன், 1930-ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமையும் தாங்கியுள்ளார்.

அதேபோல், குஞ்சிதம் அம்மையாரும் அவரது கணவர் குருசாமி அவர்களும் 1931-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டினை முன்னின்று நடத்தியதுடன் (வளர்மதி. 2017ஆ: 15-16.), 1931-ஆம் ஆண்டு நடைபெற்ற செட்டிநாடு முதலாவது சுயமரியாதை மாநாட்டைத் திறந்து வைத்து ஆங்கிலத்தில் உரையாற்றியதையும், அவரது கணவரான குருசாமி அவர்கள் அதனைத் தமிழில் மொழி பெயர்த்திருந்ததையும் அறிய முடிகின்றது. ('குடிஅரசு' 19.04.1931.) அதுமட்டுமல்லாமல், குஞ்சிதம் அம்மையார் அவர்கள் 1931-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டின் தலைவராக இருந்து, தலைமை உரையையும்; 1933-ம் ஆண்டு ஸ்ரீரங்கத்தினில் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி தாலுகா முதலாவது சுயமரியாதை மாநாட்டினில் "நமது ஒரு வருடத் திட்டம்" எனும் தலைப்பினில் தலைமை உரையையும் ஆற்றி உள்ளதையும் அறிய முடிகின்றது. ('குடிஅரசு' 16.06.1933.)

நீலாவதி அம்மையார் அவர்களும் 1932-ஆம் ஆண்டு நடைபெற்ற சேலம் மாவட்ட சுயமரியாதை பெண்கள் மாநாட்டினையும் ('குடிஅரசு' 22.05.1932.), 1933-ஆம் ஆண்டு நடைபெற்ற வடஆற்காடு மாவட்ட முதலாவது சுயமரியாதை மாநாட்டினையும் ('குடிஅரசு' 14.05.1933.), 1935-ஆம் ஆண்டு நடைபெற்ற அருப்புக்கோட்டை பெண்கள் மாநாட்டினையும் (வளர்மதி. 2017ஆ: 16.) தலைமையேற்றும், 1933-ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் நடைபெற்ற மூன்றாவது சுயமரியாதை மாநாட்டின் துவக்க உரையினையும் ('குடிஅரசு' 09.04.1933.) ஆற்றி உள்ளார்.

1932-ஆம் ஆண்டு நடைபெற்ற சேலம் மாவட்ட சுயமரியாதை பெண்கள் மாநாட்டினை ('குடிஅரசு' 22.05.1932.) அன்னபூரணி அம்மையார் அவர்கள் திறந்து வைத்ததுடன், 1935-ஆம் ஆண்டில் சீர்காழியில் நடைபெற்ற ஆதிதிராவிடர் வாலிபர் மாநாட்டிற்குத் ('குடிஅரசு' 21.07.1935.) தலைவராகவும் இருந்து சொற்பொழிவாற்றியுள்ளார்.

1929-ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற உண்மை நாடுவோர் சங்கத்தின் கருத்தரங்கினில் இலட்சுமி அம்மையார் தலைமை உரையினையும், சின்னத்தாயம்மாள், பங்காரு அம்மையார், கண்ணம்மாள், பாப்பாம்மாள் ஆகியோர் பல தலைப்புகளில் உரைகளையும் ஆற்றியுள்ளார்கள்.

**முடிவுரை:**

ஆணாதிக்கச் சிந்தனை நீக்கமறநிறைந்துள்ள இந்தியச் சமூகத்தினில் பெண்களின் சுயமரியாதையுடன் கூடிய மேம்பட்ட வாழ்க்கை குறித்தான முன்னெடுப்புகளில் தந்தைபெரியார் அவர்களால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் பங்கானது அலாதியானது.

அன்றைய காலகட்டத்தினில் சுயமரியாதை இயக்கமானது பெண்களின் கருத்துகளை வெளிப்படுத்தும் ஒரு கருத்தியல் தளமாகவே இயங்கி வந்தது. சுயமரியாதை இயக்கத்தினில் ஈடுபட்ட பெண்களின் பங்கு என்பது, பெண் விடுதலை என்ற அடைப்படையினையும் தாண்டி, இயக்கத்திற்கும் சமூக மாற்றத்திற்கும் அளப்பரியதாகவே இருந்து வந்துள்ளது என்பதனை அறியமுடிகின்றது.

### குறிப்புதவி நூல்கள்:


1. ஆனைமுத்து, வே. பெரியார்ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி- நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.
2. குடி அரசு.
3. பெரியார், தந்தை. பெண் ஏன் அடிமையானாள்?. சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.
4. ......, அழியட்டும் 'ஆண்மை'. சென்னை: பெரியார் திராவிடர்கழகம், 2010.
5. வளர்மதி, மு. தொகுப்பு. சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்-I. சென்னை: கருப்புபிரதிகள், 2017அ.
6. ......, தொகுப்பு. சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்-II. சென்னை: கருப்புபிரதிகள், 2017ஆ.
7. விடுதலை.
8. ஜீவானந்தம், ச. "இந்திய மரபில் தேவதாசி முறைகள்" தமிழியல் 99. (ஜனவரி, 2018): 55-69.
9. ......, "தேவதாசியும் அவர்களின் சடங்கு முறைகளும்: ஓர் வரலாற்றுப் பார்வை". நவீனத் தமிழாய்வு பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ் 8, no. 2. (ஏப்ரல்- ஜூன், 2020): 241-248.
10. ......, "தேவதாசி முறையும் அவற்றில் காணப்படும் சாதிய உட்கூறுகளும்". சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் 3, பகுதி 3. (2021): 89-96.
11. Anandhi, S. "Representing Devadasis: 'DasigalMosavalai' as a Radical Text." Economic and Political Weekly 26, no. 11/12. (March, 1991): 739-741+743+745-746.
12. Geetha, V and S.V. Rajadurai. Towards a Non-Brahmin Millennim: From Iyothee Thass to Periyar. Calcutta: Samya, 1998.
13. ......, Revolt: A Radical Weekly from Colonial Madras. Chennai: Periyar Dravidar Kazhagam, (n.d.).
14. Jeevanandam, S and Rekha Pande. Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces. Delhi: Kalpaz Publications, 2017.


### ஆசிரியர் குறிப்பு:


முனைவர். ஜீவானந்தம், சிக்கிம் பல்கலைக் கழக (மத்தியபல்கலைக்கழகம்), வரலாற்றுத்துறையில், உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். தேவதாசி முறைகள் பற்றிய ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். பல்வேறு ஆய்விதழ்களில், அதுகுறித்து விரிவான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.


●

### The Issue of 'ai' (ஐ/அய்) & 'au' (ஔ/அவ்) in Tamil Language and Periyar's Proactiveness

Prof. Dr. **Kannabiran Ravishankar** (KRS), Université de Paris, France

This paper proves that Periyar did not break any grammatical rules of the Tamil language and his usage of அய் &அவ் is consistent with tolkāppiyam, naṉṉūl and the works of the Tamil Trio - Valluvar, Ilango & Kamban. Periyar's reforms were so proactive, that we are now able to adapt our ancient system of writing to modern-day IT standard - Unicode, for consistent encoding.

### திருவள்ளுவரைப் பற்றிய புனைகதைகள்'

பேரா. முனைவர் **பா. காளிமுத்து**

திருவள்ளுவர் புலைப்பெண்ணுக்கும் பார்ப்பனர்க்கும் பிறந்தவர் என்று புனையப்பட்ட பொய்க் கதைகளையும், திருக்குறள் வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்டது, 'மனு'வின் கருத்துகளையே வள்ளுவர் வழிமொழிந்துள்ளார் போன்ற பொய்களையும் தோலுரித்துக் காட்டிச் செவ்வனே மறுக்கின்றது இக் கட்டுரை.

### தொல்காப்பியப் பூங்கா வழிப் புலனாகும் கலைஞரின் இலக்கணப் புலமை

முனைவர் **பி. ஸ்ரீதேவி**

கலைஞர் மு. கருணாநிதி, தொல்காப்பிய இலக்கண விதிகளை விளக்குவதற்கு, தம் இலக்கியக் குறிப்புகளைப் பயன்படுத்தி, தொல்காப்பிய உரையைத் தனித்துவமான முறையில் எழுதியுள்ளதை, இக் கட்டுரை ஆய்கிறது.

### பெரியாரியல் நோக்கில் நற்றிணை

முனைவர் **மு.சு.கண்மணி**

பண்டைத் தமிழரின் வாழ்வியலை விளக்கும் சங்கத் தமிழ் நற்றிணையோடு, தற்காலப் பெரியாரியலையும், அதன் பெண்ணியம், சமத்துவம், சுயமரியாதை ஆகிய கொள்கை களையும், ஒப்பாய்வு செய்கிறது இக் கட்டுரை.

### சுயமரியாதை இயக்கத்தின் ஆளுமை மிக்க பெண்கள்

முனைவர் **ச. ஜீவானந்தம்**

சுயமரியாதை இயக்கத்தின் பெண்களைப் பற்றியும், அவர்களின் கருத்தியல் ஆளுமை யினைப் பற்றியும் இக் கட்டுரை விரிவாக விளக்குகின்றது.


PERIYAR MANIAMMAI
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University)
think • innovate • transform
Periyar Nagar, Vallam, Thanjavur - 613 403. Tamil Nadu, India.

dravidapozhil.pmu.edu